# பரிந்து பேசுதலுக்கான ஜெபம்

**சர்வதேச அறுவடைநேர நிறுவனம்**

இப்பாடமானது **சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின்** செயல்திட்டங்களில் ஒரு பகுதியாக இருக்கின்றது. இத்திட்டம் விசுவாசிகள் தாக்கமுள்ள ஆவிக்குரிய அறுவடையை செய்யும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், வரிவசூலிப்பவர்கள் போன்றோருக்கு இயேசு கற்பித்து, அவர்களை மீள உருவாக்கும் கிறிஸ்தவர்களாக்கி, அவர்கள் வாழ்ந்த உலகத்தை சுவிஷேசத்தை ஆளுமையின் வல்லமையால் மாற்றியமைத்ததைப்போன்று உங்களுக்கும் கற்பிப்பதே இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

பாடத்திட்டத்திலுள்ள பல பாடங்களில் இக்கையேடும் ஒன்றாகும். சுவிஷேச மயமாகுக்கும் இலக்கை நிறைவேற்ற, விசுவாசிகள் பெருக, பிரதிநிதிகளாக செயல்பட, ஆயத்தம் செய்யப்படவும் இப்பாடம் உதவும்.

© Harvestime International Institute

# பொருளடக்கம்

**பக்கம்**


இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு . . . . . . . 03

குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள் . . . . . . . 04

பாடத்தின் அறிமுகம் . . . . . . . . 05

பாடத்தின் நோக்கங்கள் . . . . . . . . 06

1. ஜெபத்திற்கான அறிமுகம் . . . . . . . 07

2. பரிந்து பேசுதலுக்கான ஜெபம் . . . . . . 15

3. பரிந்து பேசுதலுக்கான ஆவிக்குரிய வளங்கள் . . . . 21

4. பரிந்து பேசுவது எவ்வாறு . . . . . . . 34

5. வல்லமையான பரிந்து பேசுதலுக்கான தடைகள் . . . 44

6. பரிந்து பேசுதலுக்கான ஓர் மாதிரி ஜெபத்தை உபயோகித்தல் . 48

7. எழுப்புதலுக்கான பரிந்து பேசுதல் . . . . . . 61

8. ஆரம்பித்தலும், தொடர்ந்து செல்லுதலும் . . . . . 76

பிற்சேர்க்கை ஒன்று: வேதாகமத்திலுள்ள ஜெபத்திற்கான குறிப்புக்கள் . 87

பிற்சேர்க்கை இரண்டு: கற்றலுக்கான வழிகாட்டி: வேதாகம பரிந்து பேசுதல் 99

சுய பரீட்சைக்கான விடைகள் . . . . . . . 100

# இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு

**கையேட்டின் வடிவமைப்பு**

ஒவ்வொரு பாடத்திலும் அடங்குபவை:

**குறிக்கோள்கள்:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இலக்கை நிறைவேற்ற முற்படுவீர்கள். பாடத்தை ஆரம்பிக்க முன்னர் அவைகளை வாசியுங்கள்.

**திறவுகோள் வசனம்:** அதிகாரத்தின் முக்கிய விடயத்தை இவ்வசனம் பிரபலிக்கும். மனனம் செய்யுங்கள்.

**அதிகாரத்தின் பொருளடக்கம்:** ஒவ்வொரு பகுதியையும் கற்கவும். வேதாகமத்தை பாவித்து கையேட்டில் இல்லாத வசனங்களையும் கவனிக்கவும்.

**சுயபரீட்சை:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இப்பரீட்சையை செய்யவும். வேதாகமத்தையும் கையேட்டையும் பாராமல் வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள். விடையளித்து முடிந்ததும் இப்புத்தகத்தின் கடைசி பக்கத்திலுள்ள விடைகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்.

**மேலதிக படிப்பினைக்கு:** தேவனுடைய வசனத்தை தொடந்தேர்ச்சியாக கற்றுக்கொள்ளவும், கற்றல் திறனை அபிவிருத்தி செய்யவும், உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும், கற்றதை பிரயோகிக்கவும் இப்பகுதி உதவும்.

**இறுதி பரீட்சை:** நீங்கள் மதிப்பெண்களை பெறும்படியாக இப்பாடத்தை பதிவு செய்து கற்பீர்கள் என்றால் இப்பாடத்தின் இறுதியில் பரீட்சை எழுத வேண்டும். பரீட்சையை செய்து முடித்த பின்னர் மதிப்பெண்ணை பெற பரிசோதனைக்காக விடைத்தாளை திருப்பி அனுப்பி வைக்கவும்.

**மேலதிகமாக தேவைப்படுபவை**

**King James** வேதாகமம் மேலதிகமாக தேவைப்படும்.

# குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள்

### முதல் கூடுகையில்

**ஆரம்பம்:** ஜெபத்தோடும் அறிமுகத்தோடும் ஆரம்பியுங்கள். நன்கு அறிமுகமாகி மாணவர்களை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தொடர்ந்து செயலாற்றகூடிய குழுவை நியமியுங்கள்:** கூட்டத்தை வழிநடத்துவது யார், நேரம், இடம், திகதி என்பற்றை முடிவு செய்யுங்கள்.

**துதியும் ஆராதனையும்:** உங்கள் பயிற்சியின் வேளையில் பரிசுத்த ஆவியானவர் பிரசன்னமாயிருக்க அவரை அழையுங்கள்.

**கையேடுகளை மாணவருக்கு பகிர்ந்தளித்தல்:** கையேட்டின் தலைப்பையும், முதல் நான்கைந்து பக்கங்களிலுள்ள குறிக்கோள்களையும் அறிமுகப்படுத்துங்கள்.

**முதலாவது ஒப்படை:** மாணவர்கள் இப்பாடத்தை ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட முறையில் வாசிக்கவும், அடுத்த கூடுகைக்கு முன்னால் சுயமாக பரீட்சை செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழு கூடுகையின் போது அதிகாரங்களை முடிக்கும் எண்ணிக்கையானது அதிகாரத்தின் நீளத்திலும், உள்ளடக்கத்திலும், குழுவின் இயலுமையிலும் தங்கியிருக்கும்.

### இரண்டாவதும் தொடரும் கூட்டங்களும்

**ஆரம்பம்:** ஜெபியுங்கள். வரவேற்ற பின்னர் புதிதாக வந்த மாணவர்களை பதிவு செய்த பின் கையேட்டை வழங்குங்கள். வரவை பதிவு செய்யுங்கள். துதி ஆராதனையை நடத்துங்கள்.

**மீட்டல்:** கடந்த வகுப்பில் கற்றவற்றை சுருக்கமாக முன் வையுங்கள்.

**பாடம்:** அதிகாரத்திலுள்ள **தடித்த எழுத்துகளிலுள்ள தலைப்புகளின்** சகல பகுதிகளையும் கலந்து உரையாடுங்கள். மாணவருக்கு தாங்கள் கற்றுக்கொண்ட பகுதிகளில் கேள்விகள் அல்லது விமர்சனங்கள் இருப்பின் கூறச் சொல்லவும். ஜீவியத்திலும், ஊழியத்திலும் கற்றவற்றை பிரயோகிக்கும்படி மாணவரை கேட்டுக் கொள்ளுங்கள்.

**சுயபரீட்சை:** சுய பரீட்சையை செய்திருப்பின் மீட்டல் செய்யுங்கள். (சுய பரீட்சைக்கான பதில்கள் கையேட்டில் இருக்க வேண்டியதில்லை என நீங்கள் தீர்மானித்தால் கடைசி பக்கங்களிலுள்ள அவற்றை அகற்றிவிடலாம்)

**மேலதிக படிப்பினைக்கு:** இத்திட்டத்தை குழுவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ செய்யலாம்.

**இறுதிப்பரீட்சை:** உங்கள் குழுவினர் மதிப்பெண்களை பெறுவதற்காக கற்பார்களாயின், இப்பாடத்திற்கான கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். அதை பிரதிபண்ணி, மாணவரிடம் பரீட்சை எழுத கொடுத்து கண்காணிக்கவும்.

# அறிமுகம்

நீங்கள் உற்சாகமான ஆவிக்குரிய சாகசத்தை ஆரம்பிக்க இருக்கின்றீர்கள். கிறிஸ்துவின் சரீரத்திற்கு கிடைக்கக்கூடிய வல்லமையான தெய்வீக வளமான பரிந்து பேசுதலை குறித்து இந்த கையேட்டின் பக்கங்களுக்கூடாக நீங்கள் கற்பீர்கள்.

நீங்கள் பரிந்து பேசுதல் ஜெபம் என்றால் என்ன மற்றும் இந்த நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஆற்றல் வாய்ந்த தெய்வீக வளங்களை எவ்வாறு வல்லமையாக பயன்படுத்துவது என்பதை இந்த பாடத்தில் கற்பீர்கள். எதற்காக ஜெபம் பண்ணுதல் வேண்டும், பரிந்து பேசுதலுக்கான ஜெபத்திற்கு வரும் தடைகளை எவ்வாறு மேற்கொள்ளுதல், அதை ஆரம்பித்தலும் தொடருதலையும் குறித்து நீங்கள் கற்பீர்கள்.

உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையும், ஊழியங்களும் மீண்டும் அதைப்போன்றே இருக்காது. இந்த உற்சாகமான ஆவிக்குரிய இலக்கின் பயணத்தை நீங்கள் ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றீர்களா?

அங்கு ஓர் இடமுண்டு, உன்னால் கண்களை தொடமுடியாது
குருடரான மனிதரால் பார்க்க முடியாது;
அங்கு ஓர் இடமுண்டு, "எழுந்திரு" என்று சொல்ல முடியாது,
இரா முழுதும் கட்டப்பட்டார்கள், கைதியாய் மரித்தார்கள்.

அங்கு ஓர் இடமுண்டு, அதை அடைய முடியவில்லை
இறைவனால் இலவசமாக சேர்த்து வைத்த பொன்னது;
தொலைதூர கரையில் ஓர் இடமுண்டு
அங்கு வார்த்தைகளையும் வேலையாட்களையும் அனுப்ப முடியாது;
அங்கு ஓர் இடமுண்டு பரலோக வல்லமையும் உண்டு
உத்தரவாதம் விரும்பிய இடத்திற்கு அசைகின்றது;

அங்கு ஓர் இடமுண்டு - அது அமைதியான மணித்தியாலம்-
தேவன் தாமே அவர்களுக்காக போரிடுவார்.
அந்த இரகசிய இடம் எங்குள்ளது? எங்கே என்று கேள்?
ஓ! ஆத்துமாவே அது ஜெபிக்கும் இரகசிய இடம்!

-பெயர் தெரியாத ஆசிரியர்

# பாடத்தின் நோக்கங்கள்

இப்பாடத்திட்டத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ ஜெபத்தை வரையறுக்கவும்,
- ☐ ஜெபத்திற்கு எவ்வாறு பதிலளிக்கப்படுகின்றது என்பதை விபரிக்கவும்,
- ☐ இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையின் ஜெப மாதிரியை சுருக்கமாக்கவும்,
- ☐ ஜெபத்தின் மட்டங்களை இனங்காணவும்,
- ☐ ஜெபத்தின் பல்வேறுப்பட்ட வகைகளை இனங்காணவும்,
- ☐ ஜெபத்தின் பரிந்துபேசுதலை வரையறுக்கவும்,
- ☐ பரிந்து பேசுபவர் என்ற ரீதியில் விசுவாயின் ஊழியத்தின் வேதாகம அடிப்படைகளை விபரிக்கவும்,
- ☐ பரிந்து பேசுதலுக்கான எமது மாதிரி இயேசு கிறிஸ்து என அடையாளம் காணவும்,
- ☐ பரிந்து பேசுதல் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை விபரிக்கவும்,
- ☐ பரிந்து பேசுதல் ஏன் முக்கியமானது என்பதை விபரிக்கவும்,
- ☐ வல்லமையையும் அதிகாரத்தையும் அளித்தல், கட்டுதலும் கட்டவிழ்த்தலும், இயேசுவினுடைய நாமம், இயேசுவினுடைய இரத்தம், உபவாசம் உட்பட ஆவிக்குரிய வளங்களை பரிந்து பேசுதலுக்கு பயன்படுத்தவும்,
- ☐ எவ்வாறு பரிந்து பேசுவது என்பதை விபரிக்கவும்,
- ☐ வல்லமையான பரிந்து பேசுதலுக்கான கொள்கையை சுருக்கமாக்கவும்,
- ☐ எதற்காக பரிந்து பேச வேண்டும் அடையாளம் காணவும்,
- ☐ பரிந்து பேசுவதற்கு தேவனுடைய வாக்குத்தத்தங்களை உபயோகிக்கவும்,
- ☐ வல்லமையான பரிந்துபேசுதுலுக்கான தடைகளை அகற்றவும், அடையாளம் காணவும்,
- ☐ எப்பொழுது ஜெபிக்க கூடாது என்பதை அறியவும்,
- ☐ மாதிரி ஜெபத்திற்கான வேதாகம வசனங்களை கொடுக்கவும்,
- ☐ தேவனுடைய ஜெபம் பொதுவாகவே ஏன் பரிந்து பேசுதலுக்கான ஜெபம் என்பதை விபரிக்கவும்,
- ☐ மாதிரி ஜெபத்தை மனனமாக கூறவும்,
- ☐ பரிந்து பேசுதலுக்கு வழிகாட்டியாக மாதிரி ஜெபத்தை உபயோகிக்கவும்,
- ☐ எழுப்புதலை விபரிக்கவும்,
- ☐ எழுப்புதலுக்கு நாம் எவ்வாறு ஆயத்தப்படுவது என்பதை விபரிக்கவும்,
- ☐ எழுப்புதல் எப்பொழுது அவசியமாகின்றது என்பதை அறியவும்,
- ☐ தவறான நிலைகளுக்கான ஆதாரங்களை அடையாளம் காணவும்,
- ☐ எழுப்புதலுக்கான வேதாகம கொள்கைகளை சுருக்கமாக்கவும்,
- ☐ வல்லமைக்கான தடைகளை இனங்காணவும்,
- ☐ எழுப்புதலுக்கான பரிந்து பேசுதலுக்கு “தேவனுடைய எழுப்புதலின் திட்டத்தை” எவ்வாறு உபயோகித்தல் என்பதை விபரிக்கவும்,
- ☐ ஒழுங்கமைக்கப்பட்ட ஜெபத்தின் திட்டத்தை உருவாக்கவும்,
- ☐ தனிப்பட்ட ஜெப கையேட்டை உருவாக்கவும்,
- ☐ சர்வதேவ பரிந்துபேசுதலில் சம்பந்தப்படவும்,
- ☐ ஆரம்பித்து, தொடர்ந்து செல்லுவதற்கான பிரச்சனைகளையும், தீர்வுகளையும் இனங்காணவும்,
- ☐ பரிந்து பேசுதலின் ஊழியத்தில் உங்களை அர்ப்பணிக்கவும் முடியும்.

## அதிகாரம் ஒன்று

# ஜெபத்திற்கான அறிமுகம்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ ஜெபத்தை வரையறுக்கவும்,
- ☐ ஜெபத்திற்கு எவ்வாறு பதிலளிக்கப்படுகின்றது என்பதை விபரிக்கவும்,
- ☐ இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையின் ஜெப மாதிரியை சுருக்கமாக்கவும்,
- ☐ ஜெபத்தின் மட்டங்களை இனங்காணவும்,
- ☐ ஜெபத்தின் பல்வேறுப்பட்ட வகைகளை இனங்காணவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

> **கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும், ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். (மத்தேயு 7:7-8)**

## அறிமுகம்

இந்த பாடமானது ஜெபத்தின் பொருளை உங்களுக்கு அறிமுகம் செய்யும். ஜெபத்தின் வரைவிலக் கணத்தையும், இயேசு அதில் வைத்த முக்கியத்துவத்தையும் குறித்து நீங்கள் கற்பீர்கள். ஜெபத்திற்கு எவ்வாறு பதிலளிக்கப்படுகின்றது என்பதையும், அதன் பல்வேறுப்பட்ட மட்டங்களையும், அதன் வகைகளையும் நீங்கள் கற்பீர்கள்.

## ஜெபத்தின் வரைவிலக்கணம்

ஜெபம் தேவனோடு பேசுதலாகும். அதற்கு பல்வேறுப்பட்ட வகைகள் உண்டு, ஆனால் அடிப்படையில் மனிதன் தேவனோடு பேசும்போதும், தேவன் மனிதனோடு பேசும்போதும் இது ஏற்படுகின்றது. ஜெபம் விபரிக்கப்பட்டுள்ளதாவது:

| | |
|---|---|
| தேவனுடைய நாமத்தை அழைத்தல்: | ஆதியாகமம் 12:8 |
| தேவனிடம் அழுதல்: | சங்கீதம் 27:7; 34:6 |
| தேவனண்டையில் செல்லுதல்: | சங்கீதம் 73:28; எபிரெயர் 10:22 |
| மேலே பார்த்தல்: | சங்கீதம் 5:3 |
| ஆத்துமாவை உயர்த்துதல்: | சங்கீதம் 25:1 |
| இருதயத்தை உயர்த்துதல்: | புலம்பல் 3:41 |
| இருதயத்தை ஊற்றுதல்: | சங்கீதம் 62:8 |
| ஆத்துமாவை ஊற்றுதல்: | 1 சாமுவேல் 1:15 |
| பரலோகத்திற்கு ஜெபித்தல்: | 2 நாளாகமம் 32:20 |

| | |
|---|---|
| தேவனிடம் வேண்டிக்கொள்ளுதல்: | யாத்திராகமம் 32:11 |
| தேவனை தேடுதல்: | யோபு 8:5 |
| தேவனுடைய முகத்தை தேடுதல்: | சங்கீதம் 27:8 |
| விண்ணப்பம் செய்தல்: | யோபு 8:5; எரேமியா 36:7 |

ஜெபித்தல் தேவனோடு பேசுதல் மட்டும் அல்ல, ஆனால் அது கேட்டலையும் உள்ளடக்குகின்றது. ஜெபம் ஓர் தொடர்பாடுதலாகும், அத்தோடு ஒரு வழி தொடர்பாடலுக்கு எல்லை கிடையாது (முடிவற்றது). நீங்கள் ஜெபிக்கும்போது, தேவன் உங்களோடு பேசும்படியாக எதிர்பாருங்கள். அதிகமாக அவர் எழுதப்பட்ட அவருடைய வார்த்தைகளுக்குகூடாக அல்லது உங்களுடைய இருதயத்தில் “பேசுதலை” பார்க்கக்கூடியதான “சிறிதான மெல்லிய சத்தத்திற்கூடாக” இந்த காரியத்தை செய்வார். சில சமயங்களில் அவர் உங்களுக்கு தரிசனத்தை தருவார் அல்லது நீங்கள் ஜெபித்த உங்களுடைய பரலோக மொழியிலான ஜெபத்தை உங்கள் ஆவியிற்கு மீள மொழிபெயர்ப்பார்.

தேவனிடம் உங்கள் அனைத்து விண்ணப்பத்தை அவசரப்பட்டு, கொட்டி உங்கள் ஜெபத்தை முடிக்க வேண்டாம். உங்களோடு பேசுவதற்காக அவரிடம் நேரத்தை கொடுங்கள். அவர் உங்களுடைய கேள்விகளுக்கு பதிலை கொடுப்பார், ஒரு நாளை செலவழிப்பதற்கான வழியை காட்டுவார், அத்தோடு உங்களுடைய முன்னுரிமைகளுக்கு உதவி செய்வார். சில சமயங்களில் அவர் நீங்கள் பரிந்து பேசும் ஒருவருக்கு ஊக்குவித்தலை பகிரும்படியாக விசேட செய்தியை உங்களுக்கு தருவார்.

நீங்கள் ஜெபிக்கும்போது, ஜெபித்தலுக்கான அங்கீகரிக்கப்பட்ட நிலை என்று ஒன்றும் இல்லை. நீங்கள் ஜெபிக்கலாம்:

| | |
|---|---|
| நிற்றல்: | 1 இராஜாக்கள் 8:22; மாற்க 11:25 |
| கீழே குணிதல்: | சங்கீதம் 95:6 |
| முழங்காற்படிதல்: | 2 நாளாகமம் 6:13; சங்கீதம் 95:6; லூக்கா 22:41; அப்போஸ்தலர் 20:36 |
| முகங்குப்புற விழுதல்: | எண்ணாகமம் 16:22; யோசுவா 5:14; 1 நாளாகமம் 21:16; மத்தேயு 26:39 |
| கைகளை விரித்தல்: | ஏசாயா 1:15; 2 நாளாகமம் 6:13 |
| கைகளை உயர்த்துதல்: | சங்கீதம் 28:2; புலம்பல் 2:19; 1 தீமோத்தேயு 2:8 |

## ஜெபத்திற்கு எவ்வாறு பதிலளிக்கப்படுகின்றது

ஜெபத்திற்கு எவ்வாறு பதிலளிக்கப்படுகின்றது என்பதற்கு வேதாகமம் வெளிப்படுத்துவதாவது:

| | |
|---|---|
| உடனடியாக: | ஏசாயா 65:24; தானியேல் 9:21-23 |
| தாமதமாக: | லூக்கா 18:7 |
| எமது வித்தியாசமான வாஞ்சைகள்: | 2 கொரிந்தியர் 12:8-9 |
| எமது எதிர்ப்பார்ப்புகளுக்கு அப்பால்: | எரேமியா 33:.3; எபேசியர் 3:20 |

## இயேசுவினுடைய ஜெப வாழ்க்கை

ஜெபம் எமக்கு முக்கியமானதாகும், ஏனென்றால் அது தேவனாகிய இயேசுவுக்கு முக்கியமாய் இருப்பதினாலாகும். இயேசுவே பரிந்து பேசுதலிற்கான எமது ஜெபத்தின் மாபெரும் மாதிரி ஆவார். இயேசுவினுடைய ஜெப வாழ்க்கை குறித்தான ஒவ்வொரு வசனங்களையும் கீழே படியுங்கள்:

## இயேசு முன்னுரிமைக்கான ஜெபத்தை செய்தார்:

| | |
|---|---|
| -அவர் இரவிலும் பகலிலும் எதாவது நேரத்தில் ஜெபித்தார்: | லூக்கா 6:12-13 |
| -அவர் சாப்பிடும்போதும் முன்னுரிமைக்கான ஜெபத்தை செய்தார்: | யோவான் 4:31-32 |
| -வியாபாரத்திலும் முன்னுரிமைக்கான ஜெபத்தை செய்தார்: | யோவான் 4:31-32 |
| -அவர் சீஷர்களுக்கு ஜெபத்தை போதித்தார்: | மத்தேயு 6:9-13 |

## அவருடைய வாழ்க்கையில் எந்த நிகழ்ச்சியிலும் ஜெபத்தின் முக்கியத்துவம் இணைக்கப்பட்டது:

| | |
|---|---|
| -அவருடைய ஞானஸ்நானத்தில்: | லூக்கா 3:21-22 |
| -அவருடைய முதலாவது ஊழியத்தின் போது: | மாற்கு 1:35; லுக்கா 5:16 |
| -சீஷர்களை தேர்தெடுக்கும் முன்னர்: | லூக்கா 6:12-13 |
| -5,000 பேருக்கு உணவு கொடுத்தலுக்கு முன்னரும் மற்றும் பின்பும்: | மத்தேயு 14:19-23; மாற்கு 6:41,46; யோவான் 6:11,14-15 |
| -4,000 பேருக்கு உணவு கொடுக்கும்போது: | மத்தேயு 15:36; மாற்கு 8:6,7 |
| -பேதுருவினுடைய அறிக்கையிடுதலுக்கு முன்: | லூக்கா 9:20 |
| -மருரூபமாகுவதற்கு முன்: | லூக்கா 9:28,29 |
| -எழுபதுபேரின் வருகியையின் போது: | மத்தேயு 11:25; லூக்கா 10:21 |
| -லாசருவின் குகையில்: | யோவான் 11:41-42 |
| -பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்போது: | மத்தேயு 19:13 |
| -குறிப்பிட்ட கிரேக்கர்கள் வரும்போது: | யோவான் 12:27-28 |
| -பேதுருவிற்காக: | லூக்கா 22:32 |
| -பரிசுத்த ஆவியானவர் தரப்படவேண்டும் என்பதற்காக: | யோவான் 14:16 |
| -எம்மாவு வழியில்: | லூக்கா 24:30-31 |
| -அவருடைய விண்ணேற்றத்திற்கு முன்னர்: | லூக்கா 24:50-53 |
| -அவருடைய சீஷர்களுக்கு: | யோவான் 17 |
| -அவருடைய மாபெரும் விசாரனையிற்கு முன்னர்: | மத்தேயு 26:26-27; மாற்கு 14:22-23 லூக்கா 22:17-19 |

## ஜெபத்தின் மட்டங்கள்

ஜெபத்தின் பரிந்து பேசுதலில் மூன்று மட்டங்கள் காணப்படுகின்றது: கேட்டல், தேடுதல், தட்டுதல்:

> **கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்,**
>
> **ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். (மத்தேயு 7:7-8)**

கேட்டல் ஜெபத்தின் முதலாவது மட்டம் ஆகும். இது தேவனுக்கு சாதாரணமாக ஒரு விண்ணப்பித்தலை கொடுத்தலும், உடனடியாக பதிலை பெற்றுக்கொள்ளுவதும் ஆகும். பெறுவதற்கான நிபந்தனை கேட்டல் ஆகும்.

**நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. (யாக்கோபு 4:2)**

ஜெபத்தின் ஆழமான மட்டம் தேடுதல் ஆகும். கேட்டலின் மட்டத்தை போல் உடனடியாக பதில் கொடுக்கப்படாத ஜெபத்தின் மட்டம் இதுவாகும். தேடுதலின் உதாரணமாக 120பேர் மேல் அறையில் கூடி ஜெபத்தில் தொடர்ந்து இருந்தமையை குறிப்பிடலாம். இங்கு ஆண்களும், பெண்களும் பரிசுத்த ஆவியானவரின் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்காக பதில் வரும்வரைக்கும் தொடந்தும் தேடுதலில் காத்திருந்தனர் (அப்போஸ்தலர் 1-2).

ஜெபத்தின் ஆழமான மட்டம் தட்டுதல் ஆகும். பதில் வருவதற்கு நீண்ட காலம் ஆகும்போது இது நீளமான ஜெபமாக இருக்கின்றது. லூக்கா 11:5-10ல் இயேசு கூறிய உவமையில் இது காட்டப்பட்டுள்ளது. சாத்தான் தேவனுடைய பதிலை தடை செய்ததின் காரணமாக பதிலை காணாமல் "தட்டுதல்" மூலம் விடாய்பிடியாய் தொடர்ந்த தானியேல் மூலமாக கூட இது காட்டுகின்றது (தானியேல் 10).

## ஜெபத்தின் வகைகள்

பவுல் விசுவாசிகளை எப்பொழுதும் "சகலவிதமான வேண்டுதலோடு" (எபேசியர் 6:18) ஜெபிக்கும்படி அழைத்துள்ளார். வேதாகமத்தின் இன்னொரு மொழிபெயர்ப்பு "ஒவ்வொரு வகையான ஜெபத்தினாலும் ஜெபியுங்கள்" (Goodspeed மொழிபெயர்ப்பு) என கூறுகின்றது. இது காட்டும் பல்வேறுப்பட்ட ஜெபத்தின் வகைகள் உள்ளடங்குபவை:

### 1. ஆராதனையும் துதியும்

நீங்கள் தேவனுடைய சமூகத்திற்கு ஆராதனையும் மற்றும் துதியோடு பிரவேசித்துள்ளீர்கள்:

**அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். (சங்கீதம் 100:4)**

துதி என்பது மகிமையையும், பக்தியையும் செலுத்துவதாகும். தேவன் செய்தவற்றிற்கு மாத்திரம் அல்ல, ஆனால் அவர் யார் என்பதற்காக அவரை துதித்தல் என்பது ஸ்தோஸ்திரம் செலுத்துதலும், நன்றியின் வெளிப்பாடுமேயாகும். நீங்கள் ஆவியோடும், உண்மையோடும் துதிக்கும் படியாக அழைக்கப்பட்டுள்ளீர்கள்:

**உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது, தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார். (யோவான் 4:23-24)**

தேவனை உண்மையாய் தொழுதுகொள்ளுதல் என்பது வேதாகம வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படையில் அவரை தொழுதுகொள்ளுதல் வேண்டும் என்பதாகும். ஆவியில் அவரை தொழுது கொள்ளுவதற்கு மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக முதலாக அவரை வைத்து, உங்கள் உள்ளார்ந்த

உண்மைகளிலிருந்து, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் உண்மையினால் அதை செய்ய வேண்டும். நீங்கள் ஆவியில் ஜெபம் செய்யும்போது, உங்கள் துதிக்கான வழிகாட்டலுக்கு பரிசுத்த ஆவியானவரை அனுமதிக்கின்றீர்கள். மனிதர்கள் உபயோகிக்கும் சூத்திரங்களையோ அல்லது துதியின் சடங்குகளையோ நீங்கள் உபயோகிக்கவில்லை.

மாறாக, உங்கள் இருதயம் மற்றும் மனதின் ஆழத்திலிருந்து நீங்கள் திறந்து, உங்களுடைய சொந்த வசனத்தினால் அவரை ஆராதனை செய்து துதியை உயர்த்துகின்றீர்கள். சிலவேளைகளில், பரிசுத்த ஆவியானவர் உங்களை முற்றுமுழுவதுமாக எடுத்து, உங்களுடைய ஜெப பாஷையில் “மற்ற பாஷைகளினூடாக” துதியை நீங்கள் ஆரம்பிப்பீர்கள்.

துதியும் ஆராதனையுமோடு கூட உள்ளடங்குபவை:

| | |
|---|---|
| பாடுதல்: | சங்கீதம் 9:2,11; 40:3; மாற்கு 14:26 |
| கேட்கக்கூடியதான துதி: | சங்கீதம் 103:1 |
| சத்தமிடுதல்: | சங்கீதம் 47:1 |
| கைகளை உயர்த்துதல்: | சங்கீதம் 63:4; 134:2; 1 தீமோத்தேயு 2:8 |
| கைகளை தட்டுதல்: | சங்கீதம் 47:1 |
| சங்கீத வாத்தியங்கள்: | சங்கீதம் 150:3-5 |
| நிற்றல்: | 2 நாளாகமம் 20:19 |
| குணிதல்: | சங்கீதம் 95:6 |
| நடனமாடுதல்: | சங்கீதம் 149:3 |
| முழங்காற்படிதல்: | சங்கீதம் 95:6 |
| கீழே படுத்தல்: | சங்கீதம் 149:5 |

## 2. அர்ப்பணிப்பு:

இது தேவனுக்கு உங்களுடைய வாழ்க்கையையும், சித்தத்தையும் அர்ப்பணிக்கும் ஜெபமாகும். இது தேவனுக்கு அவருடைய கிரியையும், அவருடைய நோக்கத்தையும் அர்ப்பணிப்பதையும் உள்ளடக்கும்.

## 3. விண்ணப்பம்:

ஜெபங்கள் வேண்டுக்கோள்களின் விண்ணப்பங்கள் ஆகும். வேதாகமத்தில் எழுதப்பட்ட வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய சித்ததிற்கு அமைய விண்ணப்பங்களானது ஏற்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பங்களானது கேட்டல், தேடுதல் அல்லது தட்டுதலின் மட்டங்களில் இருக்கலாம். இந்த ஜெபத்தின் வகையிற்கான இன்னொரு வார்த்தை மன்றாடுதல் ஆகும். மன்றாடுதல் என்னும் வார்த்தையிற்கு அர்த்தமானது “தேவனை வேண்டிக்கொள்ளுதல் அல்லது தேவைக்கு மத்தியில் பலமாக அவரிடம் கேட்டுக்கொள்ளுதலாகும்.”

## 4. அறிக்கையிடுதலும், மனந்திரும்புதலும்:

அறிக்கையிடுதலுக்கான ஜெபம் மனந்திரும்புதலுக்கும், பாவத்திற்கான மன்னிப்பை கேட்பதுமாகும்:

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா யிருக்கிறார். (1 யோவான் 1:9)**

## 5. பரிந்து பேசுதல்:

பரிந்து பேசுதல் மற்றவர்களுக்கான ஜெபம் ஆகும். பரிந்து பேசுதல் ஜெபம் என்பது மற்றொருவருக்கான ஜெபத்தின் இடத்தை எடுத்தல் அலலது மற்றொருவரின் நிலையிற்காக கெஞ்சுதல் ஆகும். இந்த கையேடு கவனம் செலுத்தியுள்ள ஜெப வகைகளின் ஞாபகப்படுத்துவதிற்கு மேல் இந்த ஜெபம் உள்ளது.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.............................................................................................................................................

.............................................................................................................................................

2. ஜெபத்தை வரையறுக்க.

.............................................................................................................................................

.............................................................................................................................................

3. ஜெபத்திற்கு எவ்வாறு பதிலளிக்கப்படுகின்றது என்பதை விபரிக்க.

.............................................................................................................................................

.............................................................................................................................................

4. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையின் ஜெப மாதிரியை சுருக்கமாக்குக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

5. இந்த அதிகாரத்தில் கலந்தாலோசிக்கப்பட்ட ஜெபத்தின் மட்டங்களை வரையறுத்து, அடையாளம் காண்க.

.............................................................................................................................................

6. இந்த அதிகாரத்தில் கலந்தாலோசிக்கப்பட்ட ஜெபத்தின் ஐந்து வகைகளின் விரிவான சுருக்கத்தை எழுதுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. உலகத்திற்கும் கண்டங்களுக்கும் நீங்கள் ஜெபிக்க உதவுவதற்கான ஜெப வழிக்காட்டல்கள் இதோ:

| | |
|---|---|
| திங்கள்: | ஆசியாவிற்கு ஜெபிக்கவும் |
| செவ்வாய்: | ஐரோப்பியாவிற்கு ஜெபிக்கவும் |
| புதன்: | ஆபிரிக்காவிற்கு ஜெபிக்கவும் |
| வியாழன்: | வட அமெரிக்காவிற்காக ஜெபிக்கவும் |
| வெள்ளி: | லத்தீன் அமெரிக்காவிற்காக ஜெபிக்கவும் |
| சனி: | தீவுகளுக்காக ஜெபிக்கவும் |
| ஞாயிறு: | முழு உலகத்திற்காகவும் ஜெபிக்கவும் |

2. கீழ்வரும் வசனங்களை மீண்டும் படித்து, வித்தியாசமான ஜெபங்களின் நிலைகளுக்கூடாக அதனை ஆராய்ச்சி செய்க:

நிற்றல்: 1 இராஜாக்கள் 8:22; மாற்க 11:25
கீழே குனிதல்: சங்கீதம் 95:6
முழங்காற்படிதல்: 2 நாளாகமம் 6:13; சங்கீதம் 95:6; லூக்கா 22:41; அப்போஸ்தலர் 20:36
முகங்குப்புற விழுதல்: எண்ணாகமம் 16:22; யோசுவா 5:14; 1 நாளாகமம் 21:16; மத்தேயு 26:39
கைகளை விரித்தல்: ஏசாயா 1:15; 2 நாளாகமம் 6:13
கைகளை உயர்த்துதல்: சங்கீதம் 28:2; புலம்பல் 2:19; 1 தீமோத்தேயு 2:8

3. கீழ்வரும் வசனங்களை மீண்டும் படித்து, வசனங்கள் வழிகாட்டும் பல்வேறுப்பட்ட வழிகளில் தேவனை துதித்தலோடும், ஆராதனையோடும் அதனை ஆராய்ச்சி செய்க:

| | |
|---|---|
| பாடுதல்: | சங்கீதம் 9:2,11; 40:3; மாற்கு 14:26 |
| கேட்கக்கூடியதான துதி: | சங்கீதம் 103:1 |
| சத்தமிடுதல்: | சங்கீதம் 47:1 |
| கைகளை உயர்த்துதல்: | சங்கீதம் 63:4; 134:2; 1 தீமோத்தேயு 2:8 |
| கைகளை தட்டுதல்: | சங்கீதம் 47:1 |
| சங்கீத வாத்தியங்கள்: | சங்கீதம் 150:3-5 |
| நிற்றல்: | 2 நாளாகமம் 20:19 |
| குனிதல்: | சங்கீதம் 95:6 |
| நடனமாடுதல்: | சங்கீதம் 149:3 |
| முழங்காற்படிதல்: | சங்கீதம் 95:6 |
| கீழே படுத்தல்: | சங்கீதம் 149:5 |

## அதிகாரம் இரண்டு

# பரிந்து பேசுதலுக்கான ஜெபம்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ பரிந்துபேசுதலை வரையறுக்கவும்,
- ☐ பரிந்து பேசபவர் என்ற ரீதியில் விசுவாசியின் ஊழியத்தின் வேதாகம அடிப்படைகளை விபரிக்கவும்,
- ☐ பரிந்து பேசுதலுக்கான எமது மாதிரி இயேசு கிறிஸ்து என அடையாளம் காணவும்,
- ☐ பரிந்து பேசுதல் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை விபரிக்கவும்,
- ☐ பரிந்து பேசுதல் ஏன் முக்கியமான என்பதை விபரிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும் படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.. (எபிரெயர் 7:25)**

## அறிமுகம்

கடைசி பாடத்தில் **பரிந்து பேசுதலுக்கான** ஜெபம் மற்றவர்களுக்கான ஜெபம் என கற்றீர்கள். **பரிந்து பேசுதல்** ஜெபம் என்பது மற்றொருவருக்கான ஜெபத்தின் இடத்தை எடுத்தல் அலலது மற்றொருவரின் நிலையிற்காக கெஞ்சுதல் ஆகும். இவ்விதம் நீங்கள் ஜெபம் செய்யும்போது, நீங்கள் **பரிந்து பேசுகின்றீர்கள்:**

> *"மற்றவர்கள் சார்பாக தேவனோடு ஒருவர் கெஞ்சும் பரிசுத்தமான, நம்பிக்யைான, அல்லது மற்றவர்களுக்கான தேவனுடைய தலையீட்டின் தீவிமான தேவைக்கான விடா முயற்சியான ஜெபம் என பரிந்து பேசுதல் வரையறுக்கப்படுகின்றது." (Full Life Bible)*

இந்த யையேடு கவனம் செலுத்தியுள்ள ஜெப வகைகளின் ஞாபகப்படுத்துவதிற்கு மேல் இந்த ஜெபம் உள்ளது. பரிந்து பேசுதலுக்கான வேதாக அடிப்படைகளையும், பரிந்து பேசுதலுக்கான எமது மாதிரியான தேவனாகிய இயேசு கிறிஸ்துவையும் குறித்து இந்த பாடத்தில் நீங்கள் கற்பீர்கள். பரிந்து பேசுதலை எவ்வாறு செய்வது எனவும், அது ஏன் ஊழியத்தில் முக்கியமானது எனவும் நீங்கள் கற்பீர்கள்.

## பரிந்து பேசுதலுக்கான வேதாக அடிப்படைகள்

பரிந்துபேசுதலின் விசுவாசியின் ஊழிய ஜெபத்தில் புதிய ஏற்பாட்டின் அடிப்படை வேதாகமமானது தேவனுக்கு முன்பாக நாம் ஆசாரியர்களாக இருக்கும்படியாக அழைக்கப்பட்டுள்ளோம் என கூறுகின்றது. நாம் பரிசுத்த ஆசாரியராகவும் (1 பேதுரு 2:5), ராஜரீகமான ஆசாரியராகவும் (1 பேதுரு 2:9), ராஜாக்களும் ஆசாரியர்களுமாக (வெளிப்படுத்தல் 1:5) இருப்பதாக தேவனுடைய வசனம் அறிவிக்கின்றது.

இந்த அழைப்பின் பின்னணியை விளங்கிக்கொள்ளுதவற்கு புதிய ஏற்பாட்டின் லேவியராகம ஆசாரியத்துவ உதாரணம் பழைய ஏற்பாட்டில் ஆசாரிய பரிந்து பேசுதலாக காணப்படுகின்றது. ஆசாரியனுடைய பொறுப்பு **முன்னும், இடைநடுவிலும்** நிற்பதாகும். அவன் தேவனுக்கு முன்பாக அவருக்கு ஊழியம் செய்ய பலியோடும், காணிக்கையோடும் நிற்கின்றார். ஆசாரியர் நீதியுள்ள தேவனுக்கும், பாவியான மனிதனையும் இரத்த பலியின் இடத்தில் அவர்களை ஒன்றுசேர்த்து கொண்டுவரும்படியாக அவர்களுக்கு இடையில் நிற்கின்றார்.

எபிரெயர் 7:11-19 பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் ஆசாரியத்துவ ஊழியங்களுக்கு இடையிலான வித்தியாசங்களை விளக்குகின்றது. பழைய ஏற்பாட்டில் லேவியத்துவ ஆசாரியமானது பரம்பரையிலிருந்து பரம்பரையாக லேவி என்னும் ஜாதியின் சந்ததியிற்கூடாக தொடர்ந்தது. இந்த பந்தியில் பேசப்பட்டிருக்கும் "மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம்", ஆவிக்குரிய ஆசாரியத்துவத்தின் "புதிய முறைமையின்படி" தேவனாகிய இயேசுவே உயர்ந்த ஆசாரியர் கூறுகின்றது. இது கிறிஸ்துவிற்குள் புது சிருஷ்டியாக நாம் ஆவியில் பிறக்கும்போதும், அவருடைய இரத்தத்திற்கூடாகவும் எம்மில் தொடருகின்றது.

## பரிந்து பேசுதலின் மாதிரி

இயேசுவை அனுப்பியதற்கான தேவனுடைய குறிக்கோளானது அவரை பரிந்து பேசுவராக அவருக்கு சேவை செய்யவே என வேதாகமம் பதிவு செய்துள்ளது:

> **ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார். ஆதலால் அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி, அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது. (ஏசாயா 59:16)**

இயேசு பழைய ஏற்பாட்டின் ஆசாரியர் செய்ததுபோல, தேவனுக்கும் பாவியான மனிதனுக்கும் இடையில் நிற்கின்றார்:

> **தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.**
> **(1 தீமோத்தேயு 2:5)**

> **கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே. (ரோமர் 8:34)**

> **மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். (எபிரெயர் 7:25)**

பாவத்திற்காக இரத்த பலி கொடுக்கும் இடத்தில் இயேசு பாவியான மனிதனையும், நீதியுள்ள தேவனையும் ஒன்றாக கொண்டு வருகின்றார். பழைய ஏற்பாட்டின்படி மிருகத்தின் இரத்தம் ஒருபோதும் அவசியம் இல்லை. பாவத்தின் மீட்சிக்காக கல்வாசி சிலுவையில் இரத்தம் சிந்திய இயேசுவின் இரத்தத்தின் அடிப்படையில் நாம் இப்போது தேவனிடம் வேண்டுதல் செய்ய முடியும். இயேசுவினுடைய இரத்தத்தினால், கூச்சமின்றி தைரியமாக தேவனிடம் அணுக முடியும். (எபிரெயர் 4:14-16).

இயேசு பூலோகத்தில் இருக்கும் போது பரிந்து பேசுபவராக இருந்தார். அவர் வியாதியஸ்தர்களுக்கும், பிசாசினால் பீடிக்கப்பட்டிருந்தவர்களுக்கும் ஜெபித்தார். அவர் அவருடைய சீஷர்களுக்காக ஜெபித்தார். அவர் அவரில் விசுவாசமுள்ளளோர் யாவருக்கும் பரிந்து பேசும்போது உங்களுக்கும் கூட ஜெபிக்கின்றார். இயேசு அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் பின் பரலோகத்திற்கு திரும்பிய பின்னும் அவருடைய ஊழியமான பரிந்து பேசுதலை தொடருகின்றார். அவர் தற்போது பரலோகத்தில் எமது பரிந்து பேசுவபராக சேவை செய்கின்றார்.

## பரிந்து பேசுதல் எவ்வாறு

பழைய ஏற்பாட்டின் ஆசாரியத்துவ செயற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டின் இயேசுவின் மாதிரியிலும் பரிந்து பேசுதல் தொடர்வதை போல், நாம் தேவனுக்கு முன்பாக நிற்கின்றோம், அத்தோடு பாவமுள்ள மனிதனுக்கும், நீதியுள்ள தேவனுக்கும் இடையில் நிற்கின்றோம். இந்த பாத்திரத்தை நிறைவேற்ற நாம் தேவனுக்கு “முன்பாக” நிற்கும் நெருக்கத்தின் அவசியத்தை வல்லமையான “இடையில்” நிற்பதற்கு நாம் விருத்தி செய்துகொள்ள வேண்டும்.

எண்ணாகமம் 14 வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மாபெரும் ஓர் பரிந்துபேசுதலுக்கான ஜெபம் ஆகும். மோசே தேவனுக்கும் பாவியான மனிதனுக்கும் இடையில் நின்றான், ஏனென்றால் அவர் தேவனுக்கு “முன்பாக” நின்று, நெருக்கத்தை விருத்தி செய்து கொண்டார். எண்ணாகமம் 12:8 ஆனது தேவன் மற்ற தீர்க்கதரிசிகளுக்கு கனவுகளிலும், தரிசனங்களிலும் செய்ததுபோல் அல்லாமல் மோசேக்கு தேவன் நண்பருக்கு நண்பராக பேசினார்.

புதிய ஏற்பாட்டு விசுவாசிகளான நாம் பழைய ஏற்பாட்டு காலங்களை போல் மிருக பலி செலுத்த வேண்டுவதில்லை. ஆவிக்குரிய துதியின் பலிகளையும் (எபிரெயர் 13:5) எமது சொந்த ஜீவியத்தின் பலிகளையும் (ரோமர் 12:1) தேவனுக்கு முன்பாக நாம் நின்று கொடுக்க வேண்டும். இது நாம் இடைநடுவராக சேவிப்பதற்கும், அவர்களுடைய நடத்தையின் படி பரிந்து பேசுவதற்கும், அவரிலும் மற்றவர்களுக்கு “இடையிலும்“ நிற்பதற்கு தேவனுடைய உறவின் நெருக்கத்திற்கு அடிப்படையாக உள்ளது.

இந்த ஆசாரியத்துவ ஊழியத்தை விபரிப்பதற்கு பேதுரு இரண்டு வார்த்தைகளை உபயோகிக்கின்றார்: “பரிசுத்தம்” மற்றும் “ராஜரீக ஆசாரியத்துவம்”. தேவனுக்கு முன்பாக நிற்பதற்கு பரிசுத்தம் அவசியமாகும் (எபிரெயர் 12:14). நாம் இதை எமது சொந்த நீதியில் அல்லாமல் தேவனுடைய நீதியின் அடிப்படையில் மட்டுமே செய்தல் வேண்டும். ராஜரீகம் என்பது ராஜ அதிகாரத்தை விபரிக்கின்றது, இது “ராஜ குடும்பம்” என்ற எமது அங்கத்துவத்தின்படி எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது, ஆகவே பொதுவாக, தேவனுடைய சிங்காசன அறையிற்கு முறையாக அணுகுதல் என கூறலாம்.

சில சந்தர்ப்பங்களில் இந்த பரிந்துபேசுதலின் ஆசாரியத்துவம் விளங்குதலோடு செய்யப்படலாம். இது உங்களுடைய சொந்த தேசிய பாஷையில் மற்றவர்களுக்காக பரிந்து பேசுவதினால் ஏற்படுகின்றது, அத்தோடு நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள் என்பதையும் விளங்கிக்கொள்வீர்கள்:

> **நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்,**

**ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.... (1 தீமோத்தேயு 2:1-2)**

மற்ற சமயங்களில், பரிந்து பேசுதலானது பரிசுத்த ஆவியானவரினால் மேற்கொள்ளப்பட வேண்டும். இது சுமையுள்ள ஆவிக்குரிய பாரத்திலான விளைவின் பெருமுச்சாக கூட இருக்கும். இது தெரியாத பாஷையினாலும் இருக்கும். இது நடைபெறும் போது, தேவனுடைய சித்தப்படி தேவனுக்கு நேரடியாக உங்களின் ஜெபத்திற்கூடாக பரிசுத்த ஆவியானவர் பேசுகின்றார்:

**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். (ரோமர் 8:26)**

**ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான். (1 கொரிந்தியர் 14:2)**

நீங்கள் இந்த வகையான பரிந்துபேசுதல்களை உங்களுடைய மனதில் விளங்கிக்கொள்ள மாட்டீர்கள், ஆனால் இதுவே மிகவும் வல்லமையுள்ளதும், பரிந்துபேசுதல் ஜெபத்தின் ஆழமான மட்டம் ஆகும், ஏனென்றால் இது "தேவனுடைய சித்தத்தின்படி" உருவாக்கப்பட்டுள்ளது. தெரியாத பாஷையினால் பரிசுத்த ஆவியிற்கூடாக நீங்கள் ஜெபித்த ஜெபம் உங்களையும், உங்கள் மனதையும் தாக்கமுறச் செய்யாது. (1)

## பரிந்து பேசுதல் ஏன் முக்கியமானது

பரிந்து பேசுதல் வெளிப்படையாகவே முக்கியமானது ஏனென்றால் இயேசு அவருடைய சொந்த பூலோக ஊழியத்தில் அழுத்தமாக அதை முன்வைத்தார். வல்லமையான பரிந்து பேசுதலின் மூலமான விளைவுகளுக்கூடாக வல்லமைகளை அனுபவித்த மனிதர்களின் கதைகளைால் வேதாகமமானது நிரப்பப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதால் கூட இது முக்கியமானது ஆகும்.

வல்லமையான பரிந்து பேசுதலுக்கூடாக, உலகத்திற்கு எங்கும் ஆவியில் நீங்கள் செல்ல முடியும். உங்களுடைய ஜெபத்திற்கு ஓர் வரையறுக்கப்பட்ட எல்லை கிடையாது, அவைகள் சந்திக்கப்படாத தேசங்களை ஊடுருவி, புவியியல், கலாச்சாரம், அரசியல் எல்லைகளுக்கு அப்பால் கடந்து செல்லும். தனிப்பட்ட நபரின் தலைவிதியையும், முழு தேசத்தையும் உங்களால் அசைக்க முடியும். நீங்கள் பரிந்து பேசுதல் ஜெபத்தை செய்யும்போது பொதுவாக மனிதர்கள், சிறுவர்கள், சிறுமிகளின் ஆத்துமாவையும், ஜீவியத்தையும் காக்க உதவுகின்றீர்கள், அத்தோடு உலகம் முழுவதிலும் தேவனுடைய இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை விரிவாக்கின்றீர்கள்.

(1) மற்ற பாஷைகள் குறித்தான மேலதிக தகவல்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடமான "பரிசுத்த ஆவியானவரின் ஊழியங்கள்" என்னும் பாடத்தை அணுக.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2. பரிந்துபேசுதல் ஜெபத்தை வரையறுக்க.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

3. பரிந்து பேசுபவர் என்ற ரீதியில் விசுவாசியின் ஊழியத்தின் வேதாகம அடிப்படைகளை விபரிக்க.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

4. பரிந்து பேசுதலுக்கான எமது மாதிரி யார்?

..........................................................................................................................................................

5. பரிந்து பேசுதல் எவ்வாறு நடைபெறுகின்றது?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

6. பரிந்து பேசுதல் ஏன் முக்கியமானது?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

பரிந்து பேசுதலுக்கான ஜெபத்தின் மாபெரும் உதாரணம் ஒன்று இயேசுவினுடைய ஜெபமான யோவான் 17ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஜெபத்தை படிப்பதற்கு கீழ்வரும் மேலோட்டத்தை பயன்படுத்துங்கள்:

**இயேசு தமக்குத்தாமே ஜெபித்தார்: யோவான் 17:1-5**

தமக்குத்தாமேயான அவருடைய விண்ணப்பத்தை சுருக்குக:

..........................................................................................................................................

**இயேசு உடனடியாக தமது சொந்த சீஷர்களுக்கான ஜெபித்தார்: யோவான் 17:6-19**

அவருடைய உடனடி சீஷர்களுக்கான அவருடைய விண்ணப்பத்தை சுருக்குக:

.......................................................................................................................................

**இயேசு எதிர்கால தமது சீஷர்களுக்காக ஜெபித்தார்: யோவான் 17:20-23**

எதிர்கால சீஷர்களுக்கான இயேசு மேற்கொண்ட விசேட விண்ணப்பத்தை பட்டியலிடுக:

..........................................................................................................................................

**இயேசுவின் தம் முடிவுரை ஜெபம்: யோவான் 17:24-26**

இயேசு எவ்வாறு அவருடைய முடிவுரை ஜெபத்தை செய்தார் என்பதை சுருக்குக:

..........................................................................................................................................

அவருடைய விசேட வாஞ்சை என்ன?

..........................................................................................................................................

அவர் தமது சீஷர்களுக்கு என்ன கட்டளையிட்டார்?

..........................................................................................................................................

அவர்கள் “அவர்களில்” எவ்விதம் இருக்க வேண்டும் என இயேசு விரும்பினார்?

..........................................................................................................................................

## அதிகாரம் மூன்று

# பரிந்து பேசுதலுக்கான ஆவிக்குரிய வளங்கள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ பரிந்துபேசுதலுக்கான ஆவிக்குரிய வளங்களை இனங்காணுதல், இதில் உள்ளடங்குபவை:
- ☐ வல்லமையையும், அதிகாரத்தையும் அளித்தல்,
- ☐ கட்டுதலும், கட்டவிழ்த்தலும்,
- ☐ இயேசுவினுடைய நாமம்,
- ☐ இயேசுவினுடைய இரத்தம்,
- ☐ உபவாசம்,
- ☐ இந்த ஆவிக்குரிய வளங்களை உபயோகிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து... (லூக்கா 9:1)**

## அறிமுகம்

நாம் இந்த அழைக்கப்பட்ட பரிந்து பேசுதலின் ஊழியத்திற்கு தேவன் மிகப்பெரிதான ஆவிக்குரிய வளங்களை கொடுத்துள்ளார். வல்லமையையும், அதிகாரத்தையும் அளித்தல், கட்டுதலும், கட்டவிழ்த்தலும், இயேசுவினுடைய நாமம், இயேசுவினுடைய இரத்தம் மற்றும் உபவாசம் உட்பட இந்த வளங்களை எவ்வாறு பயன்படுத்துவது என இந்த பாடத்தில் நீங்கள் கற்பீர்கள்.

## வல்லமையையும், அதிகாரத்தையும் அளித்தல்

நாம் பரிந்துபேசுதலின் ஜெபத்தை செய்யும்போது பொதுவாக எமது எதிரியான சாத்தானோடு மக்கள், சிறுவர்கள், சிறுமிகளின் ஆத்துமாக்களுக்காகவும், தேசத்திற்காகவும், ஆவிக்குரிய, அரசியல் தலைவர்களுக்காவும் யுத்தம் புரிகின்றோம். நாம் இதை எமது சொந்த இயலுமைகளாலும், பலத்தினாலும் செய்ய முடியாது, ஆனால் இயேசுவால் எமக்கு அளிக்கப்பட்ட ஆவிக்குரிய வல்லமை மற்றும் அதிகாரத்தின் அடிப்படையினால் இதை செய்ய முடியும்:

> **அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து... (லூக்கா 9:1)**

அதிகாரங்களுக்கும் வல்லமையிற்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகின்றது. பொலிசார் ஒருவரின் உதாரணத்தோடு இதை அணுகுவோம். அவரிடம் ஓர் சீருடையும், அவருடைய அதிகாரத்தின்

அடையாளச்சின்னத்தை வைத்திருப்பார். அவருடைய அதிகாரமானது அரசாங்கத்தோடு அவர் கொண்டுள்ள நிலையின் காரணமாக வருவதாகும். அனைத்து மக்களும் அந்த அதிகாரத்தை மதிக்காவிட்டாலும், பொலிசார் ஓர் ஆயுதத்தை வைத்திருப்பர், இது அவருடைய வல்லமைக்கான ஆயுதமாகும். உங்களுடைய அதிகாரமானது இயேசு கிறிஸ்துவிற்கூடாகவும், விசுவாசியென்ற அவருடைய உங்களுடைய நிலையிற்கூடாகவும் எதிரிகளின் மேல் வருகின்றது. உங்களுடைய எதிரியின் மேலான வல்லமை பரிசுத்த ஆவியானவருக்கூடாக வருகின்றது:

> **என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24:49)**

பொலிசாரைப்போன்று, தாக்கமுள்ள பரிந்துபேசுதலுக்கு அதிகாரமும் வல்லமையும் உங்களிடம் இருக்க வேண்டும், ஏனென்றால் பொதுவாக சாத்தானோடு ஆவிக்குரிய யுத்தம் செய்வதினால் ஆகும். புதிய பிறத்தலின் அனுபவத்திற்கூடாக விசுவாசிகள் அதிகாரத்தையும், அவர்களுடைய நிலையையும் பெற்றுக் கொள்வார்கள், ஆனால் சிலர் தாக்கமுள்ள பரிந்துபேசுதலின் அதிகாரத்தை இணைப்ப-தற்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பெற்றுக்கொள்ள ஒருபோதும் செல்லுவதில்லை.

சாத்தானுக்கு எல்லைக்குற்பட்ட வல்லமையுண்டு, ஆனால் அவனுக்கு அதிகாரம் இல்லை. இயேசு எதிரிகளின் அனைத்து வல்லமைகளுக்கும் மேலான வல்லமையையும் அதிகாரத்தையும் எமக்கு கொடுத்துள்ளார். பரிந்து பேசுதலின் விசேட குறிக்கோள்களின் உபயோகிப்பதற்கான நேரடியான வல்லமையை இயேசு கொடுத்துள்ளார்:

### எதிரிகளிற்கு மேலான வல்லமை:

குணமாக்குதல் மற்றும் விடுதலை தேவைப்படுவோருக்கு ஜெபத்தில் பரிந்து பேசுவதற்கு உங்களுக்கு அதிகாரம் உள்ளது:

> **அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து... (லூக்கா 9:1)**

### பாவத்திற்கு மேலான வல்லமை:

இரட்சிப்பை தேவைப்படுவோருக்கு ஜெபத்தில் பரிந்து பேசுவதற்கு உங்களுக்கு அதிகாரம் உள்ளது:

> **எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார். (யோவான் 20:23)**

### சுவிசேஷத்தை பரப்புவதற்கான வல்லமை:

சுவிசேஷத்தை பரப்புவதற்கான வேலையாட்களுக்கான ஜெபத்தில் பரிந்து பேசுவதற்கு உங்களுக்கு அதிகாரம் உள்ளது:

**தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றார். (மத்தேயு 9:37)**

## கட்டுதலும், கட்டவிழ்த்தலும்

“கட்டுதல்” என்னும் பதமானது எபிரெய வார்த்தையான அசார் என்பதை மருவி வருகின்றது, இதன் அர்த்தமானது “கட்டுதல், சிறைப்பிடித்தல், பிடி நிலை, இடைகட்டுதல், சுரண்டுதல்” என அர்த்தப்படுகின்றது. இந்த வார்த்தையானது எபிரெய பழைய ஏற்பாட்டில் ஏறத்தாள 70 தடவைகள் தோன்றியுள்ளது, அத்தோடு குதிரைகளையும், கழுதைகளையும் கட்டுதலை குறிப்பிடுவதற்கும் இந்த வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது (2 இராஜாக்கள் 7:10).

இந்த மாபெரும் முக்கியத்துவமானது மத்தேயு 12:28-29ல் இயேசுவின் குறிப்பில் உள்ளது.

**நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.**

**அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். (மத்தேயு 12:28-29)**

பலவானுடைய மனிதனை முதலில் கட்டினாலொழிய பலவானுடைய உடைமைகளை எடுத்தல் ஆகாத காரியமாகும். பலவானை பற்றி இயேசு பேசுவதாவது, சாத்தானை குறிப்பிடுவதாகும். அவனிடமிருந்து எடுக்கப்படவேண்டிய கட்டானது, அதாவது அவனால் அடிமையாக்கப்பட்ட காணாமல் போன தனிமனிதர்கள், “சாத்தானால் பிடிக்கப்பட்டவர்கள்” உட்பட எல்லா கட்டுக்களிலும் மேலான அவனுடைய கட்டுக்களிலிருந்தாகும்.

கட்டுதலுக்கும், விடுதலைக்குமான வல்லமைகளை இயேசு விசுவாசிகளுக்கு கொடுத்தார்:

**பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன், பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். (மத்தேயு 16:19)**

இயேசு தீய ஆவிகளை விரட்டுவதற்கு முன்னர் அவைகளை கட்ட வேண்டிய முக்கியத்துவத்தை போதித்தார், ஆனால் கட்டுவதற்கும் விடுவித்தலுக்குமான கொள்கை சாத்தான்களை துரத்துவதற்கு மேல் விரிவாக்கப்பட்டுள்ளது. உங்களுடைய ஜீவியத்தில், அமைப்பில், சபை ஐக்கியத்தில் சாத்தானுடைய வல்லமைகளை நீங்கள் கட்டலாம். நீங்கள் பாவத்தின் கட்டு, அழுத்தம், மற்றும் எதிரியினுடைய அதைரியங்கள் ஆகியவற்றை மனிதர்களிலிருந்து கட்டவிழ்க்கலாம். எல்லா நிலைகளிலும்... எல்லா பிரச்சினைகளிலும், எல்லா சவால்களிலும்... அங்கு ஓர் ஆவிக்குரிய திறவுகோல் உள்ளது. அந்த சாவியானது பரிந்து பேசுதலின் ஜெபத்திற்கூடாக கட்டுதலும், கட்டவிழ்த்தலுமாகும்.

## இயேசுவினுடைய நாமம்

நாம் பரிந்துபேசும்போது அதிகாரத்தின் மேலான வல்லமையானது இயேசுவின் நாமமாகும். இயேசு வாக்குறுதி அளித்தார்:

**என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். (யோவான் 14:14)**

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். (யோவான் 16:23)**

**விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்,**

**சர்ப்பங்களை எடுப்பார்கள், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது, வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற்கு 16:17-18)**

**அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.**

**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**

**நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:18-20)**

ஜெபிக்க, போதிக்க, உபதேசிக்க, ஞானஸ்நானம் கொடுக்க, பிசாசுகளை துரத்த, வியாதியஸ்தரை குணமாக்க, இயேசுவின் நாமத்திற்கூடாக எதிரியின் எல்லா வல்லமையையும் மேற்கொள்ள நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள்:

**எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக... (எபேசியர் 1:21)**

**ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,**

**இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,**

**பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலிப்பியர் 2:9-11)**

## இயேசுவினுடைய இரத்தம்

பரிந்து பேசுதலை அனுமதிக்கும் அடுத்த வல்லமையான ஆவிக்குரிய வளம் இயேசுவினுடைய இரத்தம் ஆகும். இது பிதாவாகிய தேவனை நாம் அடையும்பொருட்டு அவருடைய இரத்தத்திற்கூடானதாகும்:

**ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர்**

**தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால்,**

**அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,**

**தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிற படியினாலும்,**

**துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.**

**அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதி-யாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. (எபிரெயர் 10:19-23)**

தேவன் "பரிசுத்தமான" இடத்தில் வாசம் பண்ணுகின்றார். சமய சடங்குகள் மற்றும் சிக்கலான நடைமுறைகளுக்கு ஊடாக தேவனுடைய பிரசன்னத்தை நாம் அடைய முடியாது. நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தாத்தால் அதை அடைய முடியும்.

ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தல் வரைக்கும் முழுவேதாகமத்திற்கூடாகவும் செல்வது சிவப்பு நூலான இரத்தத்தை குறித்தான பொருளாகும். மனிதனுடைய வாழ்க்கையையும் இரத்தத்-திலுள்ள மிருகத்தை குறித்தே வேதாகமம் போதிக்கின்றது (லேவியராகமம் 17:11,14). ஏனென்றால் பாவத்திற்குரிய ஆக்கினை மரணமாகும் (ரோமர் 6:23). அத்தோடு வாழ்க்கையானது இரத்தத்திலி ருந்தாலும் கூட, இரத்தத்தை சிந்துவதற்கூடாக மட்டுமே பாவத்திற்கான மன்னிப்பு வருகின்றது என்னும் கொள்கையை தேவன் உண்டாக்கினார்:

**நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது. (எபிரெயர் 9:22)**

ஆதாம் மற்றும் ஏவாளின் பாவத்தின் பின் ஏதேன் தோட்டத்தில் முதலாவது இரத்த பலியை தேவன் செலுத்தி மிருகத்தை அடித்து, அதின் தோலை அவர்களுக்கு போர்த்தியது கிறிஸ்துவினுடைய நீதியை பிரதிபலித்து காட்டுகின்றது. ஆசாப்பு கூடாரத்தில் வேலியர்களுடைய பண்டிகைகளும், இஸ்ரவேலர்களுடைய விருத்ததேசத்தின் உடன்படிக்கையும், காயின் மற்றும் ஆபேலுடைய கதையின் மூலமாக இரத்தப்பலியின் முக்கியத்துவம் காட்டப்படுகின்றது. பழைய ஏற்பாட்டு காலங்களில் மனிதன் பாவம் செய்யும்போதெல்லாம் மிருகத்தினுடைய இரத்தம் பலியாக மீண்டும்மீண்டும் கொடுக்கப்பட்டது. எபிரெயர் 8 இந்த நடைமுறையை விபரிக்கின்றது, அத்தோடு "பழைய உடன்படிக்கையையும்" விபரிக்கின்றது.

புதிய ஏற்பாட்டில் தேவன் அனைவருக்கும், ஒரு தடவை இரத்தத்தை சிந்தும்படி இயேசுவை அனுப்பினார். அவருடைய இரத்தம் "புதிய உடன்படிக்கை" என விபரிக்கப்படுகின்றது (மாற்கு 14:24) அத்தோடு இந்த புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தவர் அவரே (எபிரெயர் 8:6). இது பழைய உடன்படிக்கையை வழக்கற்று செய்யப்பட்டது, இதன் அர்த்தமானது பாவத்திற்கு பலியாக கொடுப்ப-தற்கு மிருகத்தின் இரத்தம் ஒருபோதும் அவசியமில்லை:

**வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். (எபிரெயர் 9:12)**

எபிரெயர் 12:24 எம்மை குறிக்கு பேசும் இயேசுவினுடைய இரத்தத்தை குறிப்பிடுகின்றது, அத்தோடு அது நித்திய பெறுமதியான நன்மைகளை எமக்கு தருவதாக அறிக்கையிடுகின்றது. “நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல்” (எபிரெயர் 10:22) என்பது பரிசுத்தத்திற்கு அண்டையில் நாம் செல்லுதல் வேண்டும் என்று குறிப்பிடும் அதற்கு முன் உள்ள வசனத்திற்கு தொடர்புபடுகின்றது.

இயேசுவினுடைய இரத்தத்தின் நன்மைகளை நீங்கள் அறிக்கையிடுவதின் மூலமாக நீங்கள் இரட்சிக்கப் பட்டதைப்போன்றே ஜெபத்தில் தேவனுடைய பிரசன்னத்திற்கு நீங்கள் நுழைகின்றீர்கள்:

> **என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.**
>
> **நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். (ரோமர் 10:9-10)**

உங்களுடைய அறிக்கைகளுக்கு தேவன் கிரியை செய்கின்றார், இதற்கு அதிகாரம் இருக்கின்றது, ஏனென்றால் இயேசுவின் இரத்தத்தின் சாட்சியிற்கு அது அடிப்படையாக இருக்கின்றது. தேவன் வாசம் செய்து, பரிந்து பேசுதலின் மூலம் ஊழியம் செய்யும் மாபெரும் பரிசுத்த ஸ்தலத்திற்கு தற்போது நீங்கள் பிரவேசிக்கின்றீர்கள் என்பதை இரத்தம் அறிக்கையிடும்.

## உபவாசம்

வல்லமையுள்ள பரிந்துபேசுதலுக்கான இன்னொரு ஆவிக்குரிய வளம் உபவாசமாகும். உபவாசம், மிகவும் இலகுவான வரைவிலக்கணம், உணவில்லாமல் செல்லுதல். நாம் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஓர் காரியம் உபவாசம் ஆகும் (2 கொரிந்தியர் 6:3-10). ஜெபமும், உபவாசமும் ஆரம்ப கால சபையில் கிரியை செய்யப்பட்டது (அப்போஸ்தலர் 14:23) அத்தோடு பவுல் அதற்கு “எம்மை கொடுக்கும்படி” உற்சாகமளிக்கின்றார் (1 கொரிந்தியர் 7:5).

### உபவாசத்தின் வகைகள்:

வேதாகமத்தின் படி உபவாசம் இரண்டு வகைகளை கொண்டது. முழுமையான உபவாசம் என்பது நீங்கள் எல்லாவற்றையும் சாப்பிடாமல் உணவருந்தாமல் இருத்தல் ஆகும். அப்போஸ்தலர் 9:9ல் இதற்கான உதாரணம் ஒன்று காணப்படுகின்றது. பகுதியான உபவாசம் என்பது உணவு கட்டுப்பாட்டில் இருத்தலாகும். தானியேல் 10:3 ல் இதற்கான உதாரணம் ஒன்று காணப்படுகின்றது.

### உபவாசத்திற்கான வேதாகம உதாரணங்கள்:

-ஈசாக்கிற்கு ஏற்ற சரியான துணையை தேடும்போது ஆபிரகாமுடைய வேலைக்காரன் உபவாசித்தார் (ஆதியாகமம் 24:33).

-நியாயப்பிரமாணங்களின் வெளிப்பாடுகளையும், ஆசாரிப்பையும் பெறும் போது மோசே 40 நாட்கள் இரவும் பகலும் மோசே உபவாசம் இருந்தார் (யாத்திராகமம் 34).

-அன்னாள் பிள்ளையிற்காக உபவாசம் இருந்தாள் (2 சாமுவேல் 1:7-8).

-எருசலேமின் மீள் கட்டுதலுக்கு எரேமியா உபவாசித்தார் (நெகேமியா 1:4).

-ஆமானுடைய தீய மரணத்திற்கான ஆணையை தொடந்து விடுதலைக்காக யூதர்கள் உபவாசம் இருந்தனர் (எஸ்தர் 4).

-யோனாவுடைய மனந்திரும்புதலின் அழைப்பின் பிரதியுத்தரவாக நினிவே நகரம் முழுவதும் உபவாசம் இருந்தனர் (யோனா 3:5-10).

-தாவீது இஸ்ரவேல் இராஜாவாக தேவன் தந்ததை அடையும்பொருட்டு சற்று முன்னர் உபவாசம் இருந்தார் (1 சாமுவேல் 31).

-தானியேல் 21 நாட்கள் உபவாசம் இருந்து, இறுதியில் எபிரேய சிறையிருப்பின் திருப்புமுனையாக ஏற்படப்போகும் தேவனுடைய செய்தியை பெற்றார்.

-யோசபாத் யுத்தத்திற்கு முன்னர் உபவாசத்தை அறிவித்தார் (2 நாளாகமம் 20:3).

-அகாவா நதியண்டையிலே சிறையிருப்பில் மனந்திரும்புதலுக்கான உபவாசத்திற்கு எஸ்றா அழைத்தார் (எஸ்றா 8-9).

-இயேசு அவருடைய ஊழியத்திற்கு பிரவேசிப்பதற்கு முன்னர் உபவாசம் இருந்தார் (மத்தேயு 4).

-அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய மனந்திரும்புதலுக்கு பின் உபவாசம் இருந்தார் (அப்போஸ்தலர் 9).

-பேதுரு உபவாசம் இருக்கும் நேரத்தில் தான் புறஜாதிகளுடன் சுவிசேஷத்தை பரப்புவதற்காக அவருடைய அர்ப்பணிப்பை பெற்றார் அத்தோடு கொர்நேலியு வெளிப்படுத்துலை பெறுவதற்கு ஆயத்தமானான் (அப்போஸ்தலர் 10).

-பர்னபாவையும் சவுலையும் ஊழிய சேவைக்காக பரிசுத்த ஆவியானவர் பிரிக்கும்போது சீஷர்கள் உபவாசித்து ஜெபித்துக்கொண்டிருந்தனர் (அப்போஸ்தலர் 13:2).

## உபவாசத்தின் குறிக்கோள்கள்:

உபவாசம் தேவனை மாற்றாது. அது உங்களை மாற்றும். தேவன் அவரோடுள்ள உங்களின் உறவின் அடிப்படையில் உங்களோடு தொடர்புபடுகின்றார். நீங்கள் மாறும் போது, தேவன் உங்களோடு கொண்டுள்ள வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நீங்கள் தேவனை மாற்றுவதற்காக உபவாசம் இருக்கவில்லை, ஏனென்றால் தேவன் மாறாதவர். அவர் உங்களோடு எவ்வாறு தொடர்புபடுகின்றார் என்பதை உபவாசம் மாற்றாது. நினிவே நகரத்தில் இதற்கான உதாரணமாக யோவாவின் புஸ்தகத்தை வாசிக்க.

ஓர் சமயத்தில் வாலிபனுடைய பிசாசு பீடித்தலை வெளியே கொண்டுவருவதற்கு இயேசுவின் சீஷர்கள் தோல்வியுற்ற போது “இந்த வகையான”வைகள் உபவாசத்தினாலும், ஜெபத்தினாலும் மட்டுமே வெளியே வரும் என இயேசு விபரித்தார் (மாற்கு 9:29). வாழ்க்கையின் ஓர் சில சூழ்நிலைகளில், ஜெபம் மற்றும் உபவாசம் ஆகியவற்றிற்கு அப்பால் நீங்கள் முகங்கொடுக்க முடியாது. அதிகாரத்திற்கும் அதிகமாக இறுதி கட்டங்களை அடையும்போது, நாம் “இந்த வகையான” சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கின்றோம், அல்லது நாம் முன்னர் அனுபவிக்காக முக்கியமான கட்டங்களின்போது. “இந்த வகையான”வற்றிற்கு மேலான எமது வெற்றிக்கு உபவாசம் அவசியமாகின்றது.

உபவாசம் இருப்பதற்கு திட்டவட்டமான குறிக்கோள்கள் இருக்கின்றன. இந்த நோக்கங்களை நீங்கள் விளங்கிக்கொண்டிருப்பது முக்கியமானதாகும். நீங்கள் தவறுதலான காரணங்களுக்காக அல்லது குறிப்பிட்ட நோக்கங்கள் ஏதுவும் இன்றி உபவாசம் இருந்தால், உபவாசம் வல்லமையுள்ளதாய் இராது. கீழ்வரும் ஒவ்வொரு வசன குறிப்புக்களை படியுங்கள். அவைகள் உபவாசம் இருந்த மக்களை விபரிக்கும்:

| | |
|---|---|
| -தேவனுடைய செய்தியின் பிரதியுத்தரவுக்காக: | யோனா 3:5 |
| -வனாந்திரத்தின் பரிசோதனை தருணங்களின் நேரங்களில்: | லூக்கா 4:1 |
| -தேசத்தில் போரிடர் அல்லது போர் அச்சுறுத்தலின் போது: | 2 நாளாகமம் 20:3 |

-தேவனிடமிருந்து வெளிப்படுத்தல் அவசியமான தருணங்களில்: தானியேல் 9:3-4
-தீர்மானங்களை எடுக்கும்போது: அப்போஸ்தலர் 13:2-3
-அதிகாரிகளுக்கு முன் விசேட விண்ணங்களை எடுக்கும்போது: எஸ்தர் 4:16
-சாத்தானின் செயற்பாடுகளோடு தாக்குதலுக்கு ஆயத்தமாகும்போது: மாற்கு 9:29
-தம்மைத்தாமே தாழ்த்தும் போது: சங்கீதம் 35:13; 69:10
-பாவத்திலிருந்து மனந்திரும்பும்போது: யோவேல் 2:12
-பௌதீக மற்றும் ஆவிக்குரிய ரீதியில் ஏழைகளுக்கு உணவளிக்கும்போது: ஏசாயா 58:7
-தேவனிடமிருந்து கேட்கும்போது: 2 சாமுவேல் 12:16,22 யோனா 3:5,20
-துன்மார்களுடைய கட்டுக்களை அவிழ்ப்பதற்கு, பாரமான சுமைகளை தூக்குவதற்கு, விடுதலையாக்குவதற்கு, எல்லா கட்டுக்களையும் உடைப்பதற்கு: ஏசாயா 58:6

## உபவாசத்திற்கான நீளம்:

தேவன் உங்கள் ஆவியில் எதை பேசுகின்றாரோ அதன் அடிப்படையில் உங்களுடைய உபவாசத்தின் நீளம் இருக்கும். அவர் விரிவாக்கப்பட்ட உபவாசத்தையோ அல்லது நீளமான நேரத்திற்கோ வழி நடத்துவார். ஏசா மற்றும் யாக்கோபின் கதைகளை ஞாபகமா? யாக்கோபு உண்மையியேலே தனக்கு உணவொன்றை சமைக்கின்றார், ஆனால் பிறப்புரிமையை பெறுவதற்கு அதை புறக்கணித்தார். ஏசா அந்த உணவு உண்ணாமல் உபவாசமிருந்திருந்தால் எத்தனை சிறப்பாய் இருந்திருக்கும்!

நீங்கள் ஒருபோதும் உபவாசியாதிருந்தால் ஓர் உணவுக்கு பிறகு உபவாசமிக்க தொடங்குங்கள். பிற்பாடு நீங்கள் சூரிய அஸ்தமனத்திலிருந்து, அடுத்த நாள் இரவு சூரிய அஸ்தமனம் வரைக்கும் உபவாசம் இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். பிற்பாடு நீங்கள் உங்கள் உபவாசத்தின் நீளத்தின் காலத்தை அதிகம் கூட்டலாம். நீங்கள் நீண்ட உபவாசம் இருக்கும்போது எப்பொழும் நீர் அருந்துங்கள். நீங்கள் உணவின்றி நீண்ட காலத்திற்கு இருக்கலாம், ஆனால் உடல் செயற்பாட்டை பராமதிக்க நீர் அவசியமாகும்.

## பகிரங்க மற்றும் தனிப்பட்ட உபவாசம்:

தேவனுக்கும் தனிப்பட்டவருக்கும் இடையிலான தனிப்பட்ட காரியம் உபவாசமாகும். அது தனிப்பட்ட உபவாசமாக செய்யப்பட வேண்டும், அத்தோடு பெருமையாக பேசுதல் இல்லாதிருத்தல் வேண்டும்:

> **நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள். அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப் பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**
>
> **நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு.**
>
> **அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். (மத்தேயு 6:16-18)**

தலைவர்கள் பகிரங்க உபவாசத்திற்கு அழைத்து, முழு சபை ஐக்கியத்தையும் உபவாசிக்கும்படி வேண்டுகோள் விடுக்கலாம்:

**சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். (யோவேல் 2:15)**

## தேவனே உபவாசத்தை தீர்மானித்தார்:

தேவன் "தீர்மானித்தார்" என ஏசாயா 58 விபரிக்கின்றது அல்லது உபவாசத்தை தெய்வீகமாக ஏற்றுக் கொள்ளுகின்றது. தேவன் தேர்தெடுத்த உபவாசம் ஒன்று:

-நீங்கள் தேவனுக்கு முன்பாக உங்களை தாழ்த்தும்போது: வசனம் 5
-அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்க: வசனம் 6
-நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்க: வசனம் 6
-நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்க: வசனம் 6
-சுயநலமில்லாமல் நோக்கங்களை நிறைவேற்றவும், தொண்டு செய்யவும்: வசனம்7

## உபவாசமிருத்தலின் விளைவுகள்:

நீங்கள் உபவாசமிருக்கும்போது, முதலில் நடைபெறும் காரியமானது தேவன் அவரை உங்களில் வெளிப்படுத்த ஆரம்பிப்பார். "அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்: "இதோ, நான் இருக்கிறேன்" என்று சொல்லுவார்." (ஏசாயா 58:9). ஏசாயா 58ல் பட்டியலிடப்பட்ட உபவாசத்திற்கான வேறு விளைவுகள்:

**ஒளி வெளிச்சம்:** உங்களுடைய வாழ்க்கையின் இருள் காலங்கள், பகலைப்போல் வெளிச்சமாகும் என வசனம் 8 மற்றும் 10 வெளிப்படுத்துகின்றது. மற்றவர்கள் உங்களுடைய ஆவிக்குரிய வெளிச்சம் அணைக்கப்படும் என அவர்கள் எண்ணும்போது, அது மீள் எழும்பி, காலை போல் எழும்பும்.

**-வழிநடத்தல்:** "தேவன் உங்களை தொடர்ந்து வழிநடத்துவார்" என வசனம் 11 உறுதியளிக்கின்றது.

**-திருப்தியாக்குதல்:** "உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி" என தேவன் வசனம் 11ல் வெளிப்படுத்துகின்றார். (பௌதீக மற்றும் ஆவிக்குரிய இளைத்த தருணங்களில் இவைகளை நீங்கள் பிரயோகிக்கலாம்.) எல்லையற்ற ஆவிக்குரிய வளங்களையும் வசனம் 11 விபரிக்கின்றது. "நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும்" "வற்றாத நீரூற்றைப்போலவும்" நீங்கள் இருப்பீர்கள்.

**புத்துணர்வு:** தேவன் "எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்" என வசனம் 11 விபரிக்கின்றது அத்தோடு வசனம் 8 "சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து" என அறிவிக்கிறது.

**மீள் கட்டுதல்:** நீங்களும் உங்களுடைய ஆவிக்குரிய விதைகளும் "பூர்வமுதல் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள்; தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் கட்டுவாய்; திறப்பானதை அடைக்கிறவன் என்றும், குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் பெயர் பெறுவாய்" என வசனம் 12 குறிப்பிடுகின்றது.

## பரிந்து பேசுதலுக்கான வளங்கள்

வல்லமையுள்ள பரிந்துபேசுதலை ஏற்படுத்துவதற்கு விசுவாசிளுக்கு ஆவிக்குரிய வல்லமையுள்ள வளங்கள் காணப்படுதல் வேண்டும். இந்த அதிகாரத்தில் நீங்கள் கற்றதின் பிரகாரமாக, இதில் உள்ளடங்குபவை:

-வல்லமையையும், அதிகாரத்தையும் அளித்தல்,
-கட்டுதலும், கட்டவிழ்த்தலும்,
-இயேசுவினுடைய நாமம்,
-இயேசுவினுடைய இரத்தம்,
-உபவாசம்.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.......................................................................................................................................

.......................................................................................................................................

2. ஆவிக்குரிய வல்லமைக்கும், அதிகாரத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை விபரிக்க.

.......................................................................................................................................

.......................................................................................................................................

3. ஆவிக்குரிய ரீதியில் ஒன்றை கட்டுதல் என்றால் அதன் அர்த்தம் என்ன?

.......................................................................................................................................

.......................................................................................................................................

4. ஆவிக்குரிய ரீதியில் ஒன்றை கட்டவிழ்த்தல் என்றால் அதன் அர்த்தம் என்ன?

.......................................................................................................................................

.......................................................................................................................................

5. கட்டவும், கட்டவிழ்க்கவும் அதிகாரத்தை எமக்களித்த வேத வசனம் என்ன?

.......................................................................................................................................

6. பரிந்து பேசுதலுக்கு இயேசுவினுடைய நாமம் ஏன் வல்லமையுள்ள வளம் என்பதை விபரிக்க?

.......................................................................................................................................

7. எவ்வாறு இயேசுவின் இரத்தம் பரிந்து பேசுதலுக்கான வளம் என்பதை விபரிக்க.

.......................................................................................................................................

8. வேதாக உபவாசத்தின் இரண்டு வகைகளை பட்டியலிட்டு வரைவிலக்கணப்படுத்துக?

.......................................................................................................................................

.......................................................................................................................................

9. உபவாசத்திற்கான குறிக்கோள்களை சுருக்கமாக்குக?

..............................................................................................................................................

..............................................................................................................................................

10. தேவன் உபவாசத்தை “தேர்ந்தெடுத்தார்” என்பதை விபரிக்கும் வேதாகம வசனம் என்ன?

..............................................................................................................................................

11. உபவாசத்தின் சாதமான சில விளைவுகள் என்ன?

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

நாம் தேவனோடு பேசும்போது இயேசு கிறிஸ்துவின் நாமமே அதன் அதிகாரமாகும். “இயேசு” என்ற பெயரில் உள்ள மிகப்பெரிதான சக்தியை குறித்த உங்களது அறிவிற்கு மேலதிகமாக அவருடைய பெயர்களை கீழ்வரும் பட்டியல்களில் படிக்க:

| | |
|---|---|
| நீதிபரர் | 1 யோவான் 2:1 |
| சர்வவல்லமையுள்ளவர் | வெளிப்படுத்தல் 1:8 |
| அல்பாவும் ஓமெகாவும் | வெளிப்படுத்தல் 21:6 |
| ஆமென் | வெளிப்படுத்தல் 3:14 |
| எமது விசுவாசத்தை தொடங்குபவரும், முடிப்பவரும் | எபிரெயர் 12:2 |
| நித்திய இரட்சிப்பிற்கான ஆசாரியர் | எபிரெயர் 5:9 |
| தேவனால் பிறந்தவன் | 1 யோவான் 5:18 |
| சுவிகாரபுத்திரர் | எபேசியர் 1:6 |
| கிளை | சகரியா 3:8 |
| ஜீவ அப்பம் | யோவான் 6:48 |
| பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம் | வெளிப்படுத்தல் 22:16 |
| கர்த்தருடைய சேனையின் அதிபதி | யோசுவா 5:15 |
| மூலைக்கல் | 1 பேதுரு 2:6 |
| பதினாயிரம்பேர்களில் சிறந்தவர் | உன்னதப்பாட்டு 5:10 |
| கிறிஸ்து | யோவான் 1:41 |
| ஆலோசகர் | ஏசாயா 9:6 |
| விடுவிப்பவர் | ரோமர் 11:26 |
| வாசல் | யோவான் 10:9 |
| இம்மானுவேல் | மத்தேயு 1:23 |
| நித்திய ஜீவன் | 1 யோவான் 5:20 |
| உண்மையும் சத்தியமுமுள்ளவரும் | வெளிப்படுத்தல் 19:11 |
| உண்மையுள்ள சாட்சி | வெளிப்படுத்தல் 1:5 |
| முதற்பேறானவர் | எபிரெயர் 1:6 |
| ஆதியும் அந்தமும் | வெளிப்படுத்தல் 22:13 |
| மகிமையுள்ள கர்த்தர் | ஏசாயா 33:21 |
| மகா பிரதான ஆசாரியர் | எபிரெயர் 4:14 |
| சரீரத்திற்குத் தலை | கொலோசெயர் 1:18 |
| எல்லாவற்றிற்கும் மேலான தலை | எபேசியர் 1:22 |
| தலைக்கல் | சங்கீதம் 118:22 |
| சர்வத்துக்கும் சுதந்தரவாளி | எபிரெயர் 1:2 |
| இஸ்ரவேலின் பரிசுத்தர் | ஏசாயா 41:14 |
| மகிமையின் நம்பிக்கை | கொலோசெயர் 1:27 |
| நான் | யோவான் 8:58 |
| அதரிசனமான தேவன் | கொலோசெயர் 1:15 |
| நம்முடைய தேவனாலும் இயேசுகிறிஸ்து | ரோமர் 1:3 |
| மகிமையின் ராஜா | சங்கீதம் 24:7 |

| | |
|---|---|
| தேவ ஆட்டுக்குட்டி | யோவான் 1:29 |
| உலகத்திற்கு ஒளி | யோவான் 8:12 |
| பள்ளத்தாக்குகளின் லீலி | உன்னதப்பாட்டு 2:1 |
| ஜீவ அப்பம் | யோவான் 6:51 |
| சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் | வெளிப்படுத்தல் 4:8 |
| எல்லாருக்கும் கர்த்தர் | அப்போஸ்தலர் 10:36 |
| நீதியாயிருக்கிற கர்த்தர் | எரேமியா 36:6 |
| அன்பு | 1 யோவான் 4:8 |
| துக்கம் நிறைந்தவர் | ஏசாயா 53:3 |
| குரு | மத்தேயு 23:10 |
| மேசியா | தானியேல் 9:25 |
| மகா பரிசுத்தமுள்ளவர் | தானியேல் 9:24 |
| நசரேயன் | மத்தேயு 2:23 |
| ஒருவரே ஞானமுள்ள தேவன் | 1 தீமோத்தேயு 1:17 |
| பஸ்காவாகிய கிறிஸ்து | 1 கொரிந்தியர் 5:7 |
| வைத்தியன் | லூக்கா 4:23 |
| சமாதானப்பிரபு | ஏசாயா 9:6 |
| கிருபாதார பலி | ரோமர் 3:25 |
| மீட்பர் | ஏசாயா 59:20 |
| உயிர்த்தெழுதல் | யோவான் 11:25 |
| தாசனாகிய நீதிபரர் | ஏசாயா 53:11 |
| கன்மலை | 1 கொரிந்தியர் 10:4 |
| சாரோனின் ரோஜா | உன்னதப்பாட்டு 2:1 |
| உலகரட்சகர் | 1 யோவான் 4:14 |
| மேய்ப்பர் | யோவான் 10:11 |
| தேவ குமாரன் | ரோமர் 1:4 |
| மனுஷ குமாரன் | அப்போஸ்தலர் 7:56 |
| மரியாளுடைய குமாரன் | மாற்கு 6:3 |
| கல் | மத்தேயு 21:42 |
| அஸ்திபாரமாக ஒரு கல் | ஏசாயா 28:16 |
| ஆசிரியர் | யோவான் 3:2 |
| உண்மையானவர் | யோவான் 14:6 |
| சொல்லிமுடியாத ஈவு | 2 கொரிந்தியர் 9:15 |
| திராட்சச்செடி | யோவான் 15:1 |
| வழி | யோவான் 14:6 |
| அற்புதம் | ஏசாயா 9:6 |
| தேவனுடைய வசனம் | வெளிப்படுத்தல் 19:13 |

## அதிகாரம் நான்கு

# பரிந்து பேசுவது எவ்வாறு

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ எவ்வாறு பரிந்து பேசுவது என்பதை விபரிக்கவும்,
- ☐ வல்லமையான பரிந்து பேசுதலுக்கான கொள்கையை சுருக்கமாக்கவும்,
- ☐ எதற்காக பரிந்து பேச வேண்டும் என அடையாளம் காணவும்,
- ☐ பரிந்து பேசுவதற்கு தேவனுடைய வாக்குத்தத்தங்களை உபயோகிக்கவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

> **நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். (1 யோவான் 5:14-15)**

## அறிமுகம்

பரிந்து பேசுதலுக்கான ஜெபத்தின் திறவுகோல் ஆதாரமானது எவ்வளவு சத்தமாக நாம் ஜெபிக்கின்றோம் என்பது அல்ல அல்லது எமது ஜெபத்தில் நாம் எவ்வளவு பெலத்தை கொண்டுள்ளோம் என்பதும் அல்ல (இவைகள் தவறு என சொல்லப்படவில்லை), தேவனிடம் நமது விண்ணப்பங்களை எவ்வாறு செலுத்துகின்றோம் என்பதில் தான் உள்ளது. எமது பரிந்து பேசுதலின் இறுதி நிலை தேவனின் மகிமைப்படுதல் என்பதே மறுக்கமுடியாத நிலையாகும், ஆனால் சாத்தானுடைய பிரதான இலக்கு மகிமைப்படுதவதிலிருந்து தேவனை தவிர்த்தலாகும். ஆகவே, நாம் எமது பிரதான இலக்காக தேவனை மகிமைப்படுத்துதலை கொண்டிருந்து, எமது முழு ஆத்துமாவையும் அர்ப்பணித்து, பரிந்துபேசுதலில் நாம் எமது பங்களிப்பை செய்யும்போது, தேவன் தம்மில் வெளிப்படுவார். “அப்பொழுது என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். (எரேமியா 29:12-13)

ஜெபமானது விசுவாசத்தினூடாகவும், தேவனுடைய சித்தத்திற்கூடாகவும் செலுத்தப்படல் வேண்டும்:

> **நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். (1 யோவான் 5:14-15)**

நீங்கள் பரிந்து பேசுதல் எவ்வாறு என்றும், எதற்காக பரிந்து பேசுதல் என்றும் வேதாகமம் போதிப்பதை இந்த பாடத்தில் கற்றுக்கொள்ளுவீர்கள். தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தத்தின் மேல் எவ்வாறு உங்களுடைய பரிந்து பேசுதலின் அடிப்படை இருத்தல் வேண்டும் என்பதையும் கற்றுக் கொள்ளுவீர்கள்.

## எவ்வாறு பரிந்து பேசுவது

உங்களுடைய வேதாகமத்தில் கீழ்வரும் ஒவ்வொரு வசனங்களையும் பார்க்க. இந்த பகுதிகள் பரிந்து பேசுதலுக்கான வேதாகம வழிக்காட்டல்களை தரும்:

| | |
|---|---|
| -ஜெபம் தேவனுக்கு செலுத்தப்படல் வேண்டும்: | சங்கீதம் 5:2 |
| -அளவை விட தரமே வலியுறுத்தப்பட்டுள்ளது: | |
| "அதிகம் பேசுவதால்" ஜெபம் சித்தி பெறாது: | மத்தேயு 6:7 |
| -ஒன்றுமில்லாததை திரும்பதிரும்ப சொல்லுதல் தடையாகும், ஆனால் அக்கறையுடன் திரும்பதிரும்ப சொல்லுதல் தடையல்ல | தானியேல் 6:10; லூக்கா 11:5-13; 18:1-8 |
| -விளங்குதலோடு ஜெபத்தை செய்யுங்கள் (தெரிந்த பாஷையில்): | எபேசியர் 6:18 |
| -ஆவியின் மொழியில் ஜெபத்தை செய்யுங்கள்: | ரோமர் 8:26; யூதா 20 |
| -தேவனுடைய சித்தப்படி பரிந்து பேசுதலின் ஜெபத்தை செய்யுங்கள்: | 1 யோவான் 5:14-15 |
| -இரகசியமாக ஜெபத்தை செய்யுங்கள்: | மத்தேயு 6:6 |
| -எப்பொழுதும் ஜெபத்தை செய்யுங்கள்: | லூக்கா 21:36; எபேசியர் 6:18 |
| -இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள்: | ரோமர் 12:12; 1 தெசலோனிக்கேயர் 5:17 |
| -பிதாவிடம் இயேசுவின் நாமத்தினால் பரிந்து பேசுதலை செய்யுங்கள்: | யோவான் 14:13-14 |
| -தெளிவான குறிக்கோளுடன் ஜெபியுங்கள்: | 1 பேதுரு 4:7 |
| -மாதிரியின் ஜெபத்தை உதாரணமாக கொண்டு ஜெபியுங்கள்: | மத்தேயு 6:9-13 |
| -மன்னிப்பளிக்கும் ஆவியுடன் ஜெபத்தை செய்யுங்கள்: | மாற்கு 11:25 |
| -தாழ்மையுடன் ஜெபம் செய்யுங்கள்: | மத்தேயு 6:7 |
| -சிலசமயங்களில் உபவாசத்துடன் ஜெபத்தை செய்யுங்கள்: | மத்தேயு 17:21 |
| -உற்சாகமாக பரிந்து பேசுதலை செய்யுங்கள்: | யாக்கோபு 5:16; கொலோசெயர் 4:12 |
| -தேவனுக்கு அர்ப்பணிப்புடன் ஜெபத்தை செய்யுங்கள்: | லூக்கா 22:42 |
| -ஜெபத்தில் கட்டுதலும், கட்டவிழ்த்தலுமான உபாயத்தை பயன்படுத்துங்கள்: | மத்தேயு 16:19 |

## வல்லமையான பரிந்து பேசுதலுக்கான கொள்கைகள்

வசனங்களிலிருந்து எடுக்கப்பட்டதான வல்லமையான பரிந்து பேசுதலுக்கான சில கொள்கைகள் இங்கு தரப்பட்டுள்ளன:

1. தேவனாகிய இயேசுவைப்போல் அதே வல்லமையான ஊழியத்தில் ஈடுப்பட்டு ஒத்துழைப்பதற்காக தேவனை துதியுங்கள் (எபிரெயர் 7:25). மனிதர்களுடைய ஜெபங்களில் ஊடாக அவர்களின் விவாகாரங்களில் இயேசுவோடு ஒத்துழைத்து ஈடுபடுவதற்காக தேவனை துதியுங்கள்.

2. பரிசுத்த ஆவியானவரை பெறும்படிக்கு குற்றத்தை அறிக்கையிட்டு, அறிக்கைப்பண்ணப்படாத பாவங்கள் ஏதேனும் என ஆராய்ந்து, தேவனுக்கு முன்பாக உங்கள் இருதயம் தூய்மையாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்துங்கள். (சங்கீதம் 66:28; 29:23-24)

3. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும், அவருடைய வழிகாட்டுதலினாலும் அன்றி உண்மையிலேயே ஜெபம் பண்ண முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள் (ரோமர் 8:26). முற்றிலும் அவருடைய ஆவியினால் கட்டுப்படுத்தும்படியாக நீங்கள் தேவனிடம் கேளுங்கள், அவர் கிரியை செய்வார் என விசுவாசியுங்கள், அவருக்கு நன்றி செலுத்துங்கள் (எபேசியர் 5:18).

4. எதிரியுடன் எதிர்த்து நில்லுங்கள். தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் எல்லா வல்லமையுடனும், தேவனுடைய வசனமாகிய "ஆவியின் பட்டயத்தோடும்" (யாக்கோபு 4:7) அவனுக்கு எதிராக வாருங்கள்.

5. உங்களுடைய சொந்த கற்பனைகள், வாஞ்சைகள், நீங்கள் ஜெபிக்க வேண்டும் என உணரும் சுமைகளில் மரியுங்கள். (நீதிமொழிகள் 3:5-6; 28:26; ஏசாயா 55:8).

6. நீங்கள் செய்யப்போகும் மறக்கமுடியாத ஜெபத்தின் விசுவாசத்திற்காக இப்பொழுது தேவனிடம் துதி செலுத்துங்கள். அவர் மறக்கமுடியாத தேவனும், அவருடைய குணாதிசயத்தின்படி சில சாதகமான காரியங்களை செய்வார்.

7. அமைதியான எதிர்பார்த்தலோடு தேவனுக்கு முன்பாக நில்லுங்கள், அவருடைய வழி நடத்துதலுக்காக கேளுங்கள். (சங்கீதம் 62:5; மீகா 7:7; சங்கீதம் 81:11-13).

8. கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசத்தோடு, தேவன் உங்கள் மனதில் கொண்டு வருபவதற்றை பூரணமாக நம்பிக்கை கொள்ளுங்கள் (யோவான் 10:27). தேவனுடைய வழிநடத்துதலுக்காக கேளுங்கள், அதை அவர் உங்களுக்கு தரும்படியாக எதிர்பாருங்கள். அவர் தருவார் (சங்கீதம் 32:8). முக்கியமாக குழுவாக ஜெபிக்கும்போது, இந்த சுமைகள் சம்பந்தமாக அவர் உங்களுக்கு சொல்ல வரும் எல்லா காரியங்களையும் வெளியேற்றும் தேவனுடைய நேரம் வரும் வரைக்கும் மற்ற காரியத்தில் செல்லாமல் இருப்பதற்கு உறுதிப்படுத்தி கொள்ளுங்கள். மோசே, தானியேல், பவுல், அன்னாள் போன்றவர்களின் வாழ்க்கையின் ஜீவியத்தில் பரிந்து பேசும்போது தேவன் கொடுத்த வெளிப்படுத்தல்களை அறிந்து அவர்களுடைய வாழ்க்கை மூலம் உற்சாகப்படுங்கள்.

9. முடிந்தால், தேவன் உங்களுக்கு வழி காட்டும்படிக்கு உங்களுடைய வேதாகமத்தை உங்களோடு வைத்திருங்கள் அல்லது அதிலிருந்து உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் (சங்கீதம் 119:10-15).

10. தேவன் உங்களுடைய மனதில் ஜெபிக்கும்படிக்கு கொண்டுவரும் காரியங்களுக்கும், அவர் செய்த காரியங்களுக்கும் துதித்தலோடும், நன்றியோடும் முடித்துக்கொள்ளுங்கள். “சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக! ஆமென். (ரோமர் 11:36)” (1) என்பதை உங்களில் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

## எதற்காக பரிந்து பேச வேண்டும்

எதற்காக பரிந்து பேச வேண்டும் என வெளிப்படுத்தும் கீழ்வரும் வேதாக வசனங்களை படியுங்கள்:

| | |
|---|---|
| -எருசலேமின் சமாதானத்திற்காக: | சங்கீதம் 122:6 |
| -வயல்வெளியிலுள்ள வேலையாட்களுக்காக: | மத்தேயு 9:38; லூக்கா 10:2 |
| -நீங்கள் சோதனையிற்குள் பிரவேசிக்காதபடிக்கு: | லூக்கா 22:40-46 |
| -உங்களை நிந்திக்கிறவர்களுக்காக (உங்கள் எதிரி): | லூக்கா 6:28 |
| -அனைத்து பரிசுத்தவான்களுக்காக: | எபேசியர் 6:18 |
| -வியாதியஸ்தர்களுக்காக: | யாக்கோபு 5:14 |
| -ஒருவர் ஒருவருக்காக (மற்றவர்களுடைய பாரத்தை சுமத்தல்): | யாக்கோபு 5:16 |
| (மற்றவர்களுக்காக ஜெபிப்பதை புறக்கணிக்கும் உங்கள் பாவம்: | 1 சாமுவேல் 12:23) |
| -அனைத்து மனிதர்களுக்கும், ராஜாக்கள் மற்றும் அதிகாரங்கள்: | 1 தீமோத்தேயு 2:1-4 |
| -தினசரி தேவைகளுக்காக: | மத்தேயு 6:11 |
| -ஞானத்திற்காக: | யாக்கோபு 1:5 |
| -குணமாக்குதலுக்காக: | யாக்கோபு 5:14-15 |
| -மன்னிப்பிற்காக: | மத்தேயு 6:12 |
| -தேவனுடைய சித்தத்திற்காகவும், இராஜ்ஜியம் நிறுவப்படவும்: | மத்தேயு 6:10 |
| -தாக்குதல்களிலிருந்து விடுபடும்படியாக: | யாக்கோபு 5:13 |
| -கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியத்திற்காக: | யோவான் 17 |
| -உலகத்தில் உபத்திரவப்படும் சபைகளுக்காக: | எபிரெயர் 13:3 |

## வாக்குத்தத்தங்களோடு பரிந்து பேசுதல்

தேவன் அவருடைய சித்தத்தின்படி பதிலை தருகின்றார், அத்தோடு அவருடைய சித்தமானது அவருடைய வசனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வாக்குத்தத்தங்களில் அடிப்படையில் உங்கள் ஜெபங்களை நீங்கள் கேட்காவிட்டால் ஜெபமானது பதிலளிக்கப்பட மாட்டாது.

> **நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க-வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள். (யாக்கோபு 4:3)**

இது ஒரு தகப்பன் எவ்வாறு ஒரு பிள்ளைகளோடு தொடர்புபடுகின்றார் என்பதை ஒத்தது. தமது பிள்ளைகள் அவர்களுக்கு தேவையானதொன்றையும் அல்லது அவர்கள் கேட்காத ஒன்றை எந்த பெற்றோரும் கொடுக்கமாட்டார்கள். அவர் சில காரியங்களை செய்வார் என்றும், சில காரியங்களை செய்வதில்லை என்றும் அவர் தெளிவாக குறிக்கின்றார். இந்த எல்லையிற்குள் ஓர் தகப்பன் தனது பிள்ளையின் விண்ணப்பத்திற்கு பதிலளிக்கின்றார்.

தேவனுடைய வழியும் இதுவேயாகும். அவர் வாக்குத்தத்தங்களை கொடுத்துள்ளார், அவைகள் ஜெபத்திற்கான சரியான அடிப்படைகளை உருவாக்குகின்றன. தேவன் நிச்சயித்தவைகளை படித்து, இந்த வாக்குத்தத்தங்களின்படி ஜெபியுங்கள். இதற்கான ஓர் வழி வேதாகமத்திற்கூடாக சென்று, தேவனுடைய அனைத்து வாக்குத்தத்தங்களையும் குறித்து, இந்த வாக்குத்தத்தங்களின் படி உங்கள் ஜெபத்தை செய்யுங்கள். நீங்கள் ஒரு வாக்குத்தத்தத்தை ஜெபிக்கும்போது, நீங்கள் தேவனுடைய வார்த்தையை அவருக்கு திருப்பி அறிக்கையிடுகின்றீர்கள். இங்கு ஓர் உதாரணம் தரப்பட்டுள்ளது:

> *"நான் கேட்பதற்கு முன்னரே என்னுடைய தேவைகளை நீர் அறிந்திருப்பதினால் தேவனே உமக்கு நன்றி (மத்தேயு 6:8). நான் இயேசுவின் நாமத்தில் உம்மிடம் வருவதோடு, அந்த நாமத்தின் வல்லமையை அறிந்திருக்கின்றேன் (யோவான் 14:14). தேவனுடைய இராஜ்ஜியத்தின் விரிவாக்கத்திற்காக அறுவடைக்கு வேலையாட்கள் எழுப்பப்படவேண்டும் என நான் ஜெபிக்கின்றேன் (மத்தேயு 9:37-38)..."* போன்றவை.

இங்கு வேதாகம வாக்குத்தத்தங்களின் உதாரணங்களுக்கு சில தரப்பட்டுள்ளன. இந்த வாக்குத்தத்-தங்கள் முக்கியமாக ஜெபத்தின் பொருளை மையப்படுத்துகின்றது:

| | |
|---|---|
| -நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவைகளை பிதா அறிந்திருக்கின்றார்: | மத்தேயு 6:8 |
| -இருவர் ஜெபத்தில் இணைந்திருந்தால், அது கேட்கப்படும்: | மத்தேயு 18:19 |
| -தேவனால் எல்லா காரியங்களும் ஆகும்: | மத்தேயு 19:26; லூக்கா 18:27 |
| -விசுவாசத்தோடு இணைக்கப்பட்ட ஜெபம் வல்லமையுள்ளது: | மத்தேயு 21:22; மாற்கு 11:24 |
| -நீங்கள் இயேசுவினுடைய நாமத்தினால் கேட்டால், அது செய்யப்படும்: | யோவான் 14:14 |
| -நீதிமானுடைய வல்லமையான ஊக்க ஜெபம் அதிகம் பதிலளிக்கப்படும்: | யாக்கோபு 5:16 |

(1) வல்லமையான பரிந்து பேசுதலுக்கான கொள்கைகள் 1992 Personal Prayer Diary நூலிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். (Seattle, Washington: Youth With A Mission, 1991), 16.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2. ஓர் நபர் ஜெபத்தில் எவ்வாறு பரிந்து பேசுகின்றார்?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

3. ஜெபத்தில் எதற்காக நாம் பரிந்து பேசுதல் வேண்டும்?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

4. இந்த பாடத்தில் நீங்கள் கற்ற வல்லமையுள்ள பரிந்து பேசுதலின் சில கொள்கைகளை சுருக்கமாக தருக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

5. ஜெபத்தின் பரிந்து பேசுதலில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை எவ்வாறு நீங்கள் பயன் படுத்தலாம் என்பதை விபரியுங்கள்?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

பரிந்துபேசுதலின் ஜெபத்தில் ஈடுபட்டுள்ள உலக தலைவர்கள், நகரங்கள் மற்றும் ஜாதிகளுக்கு ஜெபிப்பதற்கு "ஆவிக்குரிய வரைப்படம்" என அழைக்கப்படும் உபாயத்தை உபயோகித்-துள்ளனர். சாராம்சமாக, "ஆவிக்குரிய வரைப்படமானது" ஒரு நகரத்தை அல்லது ஜாதியை, அல்லது உலகத்தை உள்ளதுப்போல் பார்ப்பதற்கோ அல்லது இல்லாமலிருப்பதற்கோ ஆகும். இந்த உபாயமானது இயற்கையின் பின்னால் காணப்படும் ஆவிக்குரிய உண்மைகளை அனுமானிப்பதற்கு அடிப்படையாக உள்ளது. இது சேனைகளை விளங்கிக்கொள்ளுதற்கான எமது சிந்தனைகளையும், உலகின் சூழ்நிலைகளிலும், இடங்களிலும் அமையும் ஆவிக்குரிய நிகழ்வுகளையும், காட்புலனாகும் மற்றும் காட்புலனாகாத இடையேயுள்ள வேறுபாட்டை தீவிரமாக எடுக்கும்.

உலகில் எம்மை சுற்றி காணப்படும் அநேக காரியங்களுக்கு பின்புலமாக ஆவிக்குரிய சேனைகள், உண்மையில் காணப்படாத இடங்கள், காணப்படுதலை விட அதிகமான எல்லை யற்ற முக்கியத்துவங்களை கொண்டதென ஆவிக்குரிய வரைப்படம் ஒப்புக்கொள்ளுகின்றது. எமது சமூகங்கள், நகரங்கள், ஜாதிகளில் கிரியை செய்யும் ஆவிக்குரிய சேனைகளை பெயரிடவும், அடையாளம் காணவும் ஆவிக்குரிய வரைபடம் உள்ளடங்குவதோடு, இதை ஆவிக்குரிய யுத்தத்திற்கான ஜெபத்தில் உள்ள உபாயத்தில் இந்த அறிவை பிரயோகிக்க செய்கின்றது.

ஆவிக்குரிய வரைப்படத்தின் வசனத்தின் கட்டளையானது எசேக்கியேல் தீர்க்கதரிசியோடு தேவன் பேசிய வசனத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது, அவர் சொன்னார்:

> **மனுபுத்திரனே, நீ ஒரு செங்கலை எடுத்து, அதை உன்முன் வைத்து, அதின்மேல் எருசலேம் நகரத்தை வரைந்து, (எசேக்கியேல் 4:1)**

எசேக்கியேல் களிமண்ணின் துண்டை கொண்டு நகரத்தை வரைகின்றார். தேவன் அவரிடம் "அதற்கு விரோதமாக முற்றிக்கைபோடும்படி" கூறினார். இது முற்றிலும் பௌதீகத்திற்கு விரோதமான முற்றிகை அல்ல, ஆனால் ஆவிக்குரிய யுத்தமாகும். அவன் ஒரு இரும்பு துண்டை எடுத்து, அவனுக்கு இடையில் அதை வைத்து, அதை நகரத்தின் மதிலை போல் ஆக்கி, அதற்கு எதிராக அவர் முற்றிகை இட்டார்.

ஆவிக்குரிய வரைப்படத்திற்கு அநேக மட்டங்கள் உள்ளன. வரைப்படமானது உங்கள் அயலான இடங்களையோ அல்லது உங்கள் நகரத்திலுள்ள குறிப்பிட்ட பகுதியையோ செய்யப்படலாம். ஒரு நகரத்தின் முழுமையாக, ஒரு நகரத்தையும் அதை சுற்றியுள்ள பகுதிகளையும், ஒரு மாகாணத்தையும் அல்லது பிராந்தியத்தையும் அல்லது முழு தேசத்தையும் ஒரு வரைபடம் செய்யப்படலாம். சிலர் ஜாதிகளின் பிரிவாக வரைப்படம் இருக்க வேண்டுவர்.

ஆவிக்குரிய வரைப்படத்திற்கு இரண்டு பகுதிகள் காணப்படுகின்றன. முதலாவது, நீங்கள் தகவல்களை திரட்டுகின்றீர்கள். இரண்டாவது, நீங்கள் கண்டுப்பிடித்தவற்றிற்கு ஜெபம் செய்கின்றீர்கள். உள்ளூர் நூலகத்தை சந்திப்பதின் மூலம், வரலாற்று அருங்காட்சியங்கள், வணிக கழகங்கள், உள்ளூர் பத்திரிக்கைகளின் பழைய பிரதிகளை ஆராய்வதின் மூலம் அல்லது பழைமை வாய்ந்த வீட்டாளர்களை சந்திப்பதின் மூலம், உங்களுடைய நகரத்தில வரலாற்று சமூகத்திலுள்ள அங்கத்தவர்கள் மூலம் (இருந்தால்) நீங்கள் தகவல்களை திரட்டலாம்.

கீழ்வரும் அறிவுறுத்தல்களின் சுருக்கம் பெயரிடுவதற்கு உங்களுக்கு உதவுவதோடு, உங்க-ளுடைய சொந்த நகரத்தில் கிரியை செய்யும் ஆவிக்குரிய சேனைகளை வரைவதற்கு உதவும்.

## ஆவிக்குரிய வரைப்படத்தின் நோக்கங்கள்:

1. எதிரியினுடைய திட்டங்கள், உபாயங்களை மற்றும் குறிப்பிட்ட புவியியல் பகுதிகளிலுள்ள கட்டடங்களை அறிந்து கொள்ளுதவதற்கு.

2. அறிவார்ந்த உபாயம் - ஆவிக்குரிய யுத்தத்திற்கான மட்டத்தில் இந்த அறிவை பிரயோகிப்பதற்கும், குறைந்த பட்ச அபாயம் மற்றும் இழப்புக்களோடு குறைந்த நேரத்தில் வெற்றியாளராக மாறுவதற்கும்.

## வரலாற்று ஆராய்ச்சி:

### அ. நகரத்தை கண்டுப்பிடித்தல்

1. நகரத்தை கண்டுப்பிடித்த மக்கள் யார்?

2. அவர்களுடைய தனிப்பட்ட அல்லது நகரத்தை கண்டுபிடித்தலுக்கான காரணம் என்ன? அவர்களுடைய நம்பிக்கைகளும் தத்துவங்களும் என்ன? நகரத்தின் எதிர்காலத்தின் அவர்களுடைய தரிசனம் என்ன?

3. நகரத்தின் உண்மையான பெயரின் முக்கியத்துவம் என்ன? அந்த பெயர் மாற்றப்பட்டுள்ளதா? குறித்த நகரத்திற்கு வேறு ஏதாவது பெயர்கள் அல்லது பிரபல அடையாளங்கள் உண்டா? இந்த பெயருக்கு அர்த்தம் உள்ளதா? அவர்கள் எதாவது சமயத்தோடு சம்பந்தப்பட்டுள்ளார்களா? அவர்களுக்கு சாத்தானின் அல்லது அமானுஷ்ய பெயர்கள் இருக்கின்றதா? அவர்கள் ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்களை அடையாளப்படுத்துகின்றார்களா?

### ஆ. நகரத்தின் வரலாற்று பின்னணி

1. ஜீவியத்தில் நகரம் கொண்டுள்ள அளவு மற்றும் முழு ஜாதியிற்கான பிரதிபதிப்பு?

2. முக்கிய தலைவர்கள் நகரத்தில் இருத்தலின் படி, நகரத்திற்கான அவர்களுடைய தரிசனம் என்ன?

3. நகரத்தின் அரசியல் தலைவர்களில் அல்லது அரசாங்கத்தில் அடிப்படையிலான மாற்றங்கள் ஏதோனும் நிகழ்ந்துள்ளதா?

4. நகரத்தின் பொருளியல் வாழ்க்கையில் அடையாளங்கள் அல்லது திடீர் மாற்றங்கள் உள்ளதா? பஞ்சம்? அழுத்தங்கள்? தொழில்நுட்பம்? கைத்தொழில்? இயற்கை வளங்களின் கண்டுபிடிப்பு?

5. குடியேற்றங்களின் ஏதோனும் அடையாளங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா? முழுமையான நகரத்தின் கலாச்சாரத்தில் அல்லது புதிய பாஷையில் ஏதோனும் சுமத்துதல்கள் இருந்ததா?

6. குடியேற்றவாசிகளும், சிறுபான்மையினரும் எவ்வாறு நடத்தப்படுகின்றனர்? இனங்களும், இன குழுக்களும் ஒவ்வொருவருக்கொருவர் எவ்வாறு தொடர்புபடுகின்றனர்? நகரத்தின் சட்டங்கள் எதேனும் வகையிலான இனவெறியை கொண்டுள்ளதா?

7. நகரத்தின் தலைவர்கள் எதாவது ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகளை உடைத்துள்ளார்களா?

8. எதாவது யுத்தங்கள் நகரத்தை நேரடியாக தாக்கியுள்ளதா? ஏதாவது யுத்தங்கள் நகரத்தில் நடைபெற்றுள்ளதா? இரத்தம் சிந்துதல் உள்ளதா?

9. ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நகரம் எவ்வாறு நடத்துகின்றது? நகர தலைவர்கள் பேராசை கொண்டுள்ளார்களா? அரசியல், பொருளியல், அல்லது சமய தலைவர்கள், நிறுவனங்கள் ரீதியான ஊழல்களுக்கு ஏதாவது ஆதாரங்கள் உள்ளதா?

10. நகரத்தை தாக்கிய இயற்கையின் அழிவுகள் என்ன?

11. நகரத்திற்கு அடையாளங்களும் அல்லது கருத்துக்களும் உள்ளதா? அதன் அர்த்தம் என்ன?

12. மக்கள் எந்த வகையான இசைகளை கேட்கின்றார்கள்? அந்த இசையிலிருந்து அவர்கள் பெற்றுக்கொள்ளும் செய்தி என்ன?

13. இன்றைய நகரத்தில் நேர்மறையான காரியங்களின் குணாதிசயங்களை அநேக மக்கள் உபயோகிப்பதற்கான நகரத்தின் ஐந்து வார்த்தைகள் என்ன? மறையான காரியங்களின் குணாதிசயங்களை உபயோகிப்பதற்கான நகரத்தின் ஐந்து வார்த்தைகள் என்ன?

## நகரத்தின் சமய வரலாறு:

**அ. கிறிஸ்தவம் அல்லாத சமயம்**

1. நகரம் கண்டுப்பிடிக்கப்பட முன்னர் அப்பகுதியில் மக்கள் செல்வாக்கு செலுத்திய சமய கருத்துக்களும் நடைமுறைகளும் என்ன?

2. நகரம் கண்டுபிடிப்பதற்கு சமயம் ரீதியானவை முக்கியமானதாக இருந்தா?

3. முக்கியமான காரியங்களுக்காக கிறிஸ்தவம் அல்லாத சமயங்கள் நகரத்தில் பிரவேசித்ததா?

4. நகரத்தில் காணப்படும் இரகசிய கட்டளைகள் (விடுதலை கட்டுநர் போன்ற) என்ன?

5. மந்திரவாதி குழுக்கள், சாத்தானின் குழுக்கள் அல்லது வேறு துர் கலாச்சாரம் நகரத்தை செயற்படுத்தியதா?

**ஆ. கிறிஸ்தவம்**

1. எப்பொழுது இந்நகரத்திற்கு கிறிஸ்தவம் அடைந்தது? எந்த சூழ்நிலையில்?

2. ஆரம்ப அல்லது பிற்கால கிறிஸ்தவ தலைவர்கள் விடுதலை கட்டுநராக இருந்துள்ளார்களா?

3. நகரத்தின் முழுமையான ஜீவியத்தில் கிறிஸ்தவ அமைப்புக்கள் செல்வாக்கு செலுத்தியது என்ன? இதில் ஏதாவது மாற்றங்கள் உள்ளதா?

4. நகரத்தில் கிறிஸ்தவம் வளருகின்றதா அல்லது புறக்கணிக்கப்படுகின்றதா?

**இ. உறவுகள்**

1. நகரத்தில் சமயம் சம்பந்தமான மோதல்கள் இருந்துள்ளதா?

2. கிறிஸ்தவர்களுக்குள் மோதல்கள் இருந்துள்ளதா?

3. நகரத்தில் சபைகளின் வரலாறு எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது?

**பௌதீக ஆராய்ச்சி**

1. நகரத்தின் வித்தியாசமான வரைப்படங்களை தேர்ந்தெடுங்கள், முக்கியமான பழைமையான படங்கள். நகரத்தின் பௌதீக குணாதிசயத்தில் இடம்பெறும் மாற்றங்கள் என்ன?

2. நகரத்தை வரைந்து திட்டமிட்டவர்கள் யார்?

3. குறிப்பிடப்படும்படியான வித்தியாசமான அடையாளங்கள் அல்லது உண்மையான திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இலட்சினைகள் அல்லது நகரத்தில் அமைப்பில் காணப்படுகின்றதா?

4. கட்டிடங்களில் ஏதாவது அடையாளங்கள், அமைப்புக்கள் அல்லது மத்திய கட்டிடங்களில் மைய உறவுகள் ஏதேனும் காணப்படுகின்றதா? முக்கியமாக அரசியல், பொருளியல், கல்வியை பிரதிபலிப்போர் அல்லது நகரத்திலுள்ள சமயத்தின் வல்லமை?

5. அதிகம் கட்டிடங்கள் உள்ள இடத்தில் அல்லது கட்டிடத்தின் குறிப்பிட்ட நிலத்திற்கு மேல் ஏதேனும் வரலாற்று அடையாளங்கள் காணப்படுகின்றதா? இந்த நிலத்தின் உண்மையான உரிமையாளர் யார்?

6. நகரத்தின் பூங்காக்கள், கட்டிடங்களின் பின்னணி என்ன? அவைகளை நியமித்து, நிதியளித்தது யார்? அவர்களுடைய பெயர்களில் காணப்படும் அடையாளங்கள் என்ன?

7. நகரத்தின் நினைவு சின்னங்கள், சிலைகளின் விசேட அடையாளங்கள், மற்றும் அதன் பின்னணி என்ன? ஏதேனும் சாத்தானுடைய குணாதிசயத்தை பிரதிபலிக்கின்றதா அல்லது சிருஷ்டிகரை விட சிருஷ்டிப்பை மகிமைப்படுத்துகின்றதா?

8. நகரத்தில் உள்ள வேறு கலை பொருட்கள் என்ன, முக்கியமாக பொது கட்டிடங்களுக்குள் அல்லது வெளியில், காட்சிசாலைகள் அல்லது திரைபட நிலையம்? உணர்ச்சிபூர்வமான அல்லது சாத்தானின் கலைகளை முக்கியமாக கவனிக்க.

9. நகரத்தில் எந்தொரு முக்கிய தொல்பொருள் நிலையங்கள் உள்ளதா? அவை கொண்டுள்ள அர்த்தங்கள் என்ன?

10. கருக்கலைக்கும் நிலையங்கள், பாலியல் புத்தங்கள் அல்லது திரைபட நிலையங்கள், விபச்சாரம், சூதாட்டம், விடுதிகள், ஓரின சேர்க்கை நடவடிக்கைகள் போன்ற பெரிதான தோன்றக் கூடிய பாவத்தின் நிலையங்கள் என்ன?

11. பேராசை, சுரண்டல்கள், வறுமை, பாரபட்சம், வன்முறை, நோய் அல்லது பொதுவான விபத்துக்கள் போன்ற பகுதிகள் என்ன?

12. படுகொலை, போர், கொலையிற்கூடாக கடந்த அல்லது தற்காலத்தில் இரத்தம் சிந்தப்பட்ட இடங்கள் என்ன?

13. மரங்கள், மலைகள், கற்களின் நிலைகள் அல்லது ஆறுகளின் அமைப்புக்கள் ஏதேனும் குறிப்பிடக்கூடிய மாதிரியை கொண்டுள்ளதா?

14. நகரத்தின் நில குறிப்புக்கள் தேவனை மகிமைப்படுத்தான பெயர்களை கொண்டுள்ளதா?

15. நகரத்தின் உயரமான புவியியலின் புள்ளி என்ன மற்றும் அங்கு என்ன கட்டப்பட்டுள்ளது அல்லது அமைந்துள்ளது? இது அதிகாரத்தின் வாக்கியமாக கூட இருக்கலாம்.

16. நகரத்தில் அவர்களுடைய சொந்த குணாதிசயத்தை காணக்கூடிய மண்டலங்கள் அல்லது துறைகள் அல்லது சுற்றுவட்டாரங்கள் என்ன? வித்தியாசமான ஆவிக்குரிய சூழ்நிலைகளை காணக்கூடிய நகரத்தின் பகுதிகளை கண்டுகொள்ள முயற்சியுங்கள்.

## ஆவிக்குரிய ஆராய்ச்சி:

**அ. கிறிஸ்தவம் அல்லாதவை**

1. நகரத்தில் முற்காலத்திலும் அல்லது தற்காலத்திலும் தொடர்புபடுத்தப்பட்டுள்ள பிராந்திய ஆவிகள் அல்லது தெய்வங்களுடைய கொள்கைகளின் பெயர்கள் என்ன?

2. மேடைகள், பீடங்கள், கோயில்கள், நினைவுச்சின்னங்கள் அமைந்துள்ள இடங்கள் அல்லது மாந்திரீகம், அமானுஷ்யம், அதிஷ்டம் கூறுதல், சாத்தானியம், விடுதலை கட்டுநர், மொர்மனியம், கிழக்கத்தைய மதங்கள், யெகோவாவின் சாட்சிகள் மற்றும் இது போன்றவற்றோடு தொடர்புபடும் கட்டிடங்கள் ஆகியவற்றின் இருப்பிடங்கள் என்ன? வரைப்படத்தில் இவைகளை பதியும் போது ஏதாவது அமைப்பை ஏற்படுத்துகின்றதா?

3. நகரம் கண்டுப்பிடிக்கப்படுதலின் முன்னரிலும் கூட, கடந்தகாலத்திலிருந்து பிசாசின் வழிபாட்டு தளங்கள் என்ன?

4. சாத்தானுடைய வழிபாட்டுடன் தொடர்புடைய கலைகள் அல்லது கலைகளை கொண்ட வித்தியாசமான கலாச்சார நிலையங்கள் என்ன?

5. சாத்தானுடைய கடவுள்களுக்கும் அல்லது அதன் கொள்கைகளுக்கும் ஏதோனும் நகரத்தின் சமய தலைவர்கள் அவனை அல்லது அவளை தெரிந்துகொண்டு அர்ப்பணித்துள்ளார்களா?

6. நகரத்தில் மக்கள் காணப்படும் இடத்தில் அல்லது இடத்தில் காணப்படும் மக்களில் ஏதேனும் சாப காரியங்கள் நடைபெற்று உள்ளதா?

**ஆ. கிறிஸ்தவம்**

1. தேவனுடைய தூதுவர் நகரத்தில் எவ்வாறு பெறப்பட்டுள்ளார்?

2. சுவிசேஷம் கடினமானதாவும் அல்லது இலகுவானதாகவும் உள்ளதா?

3. சபைகள் எங்கு அமையப்பட்டுள்ளன? “ஜீவனை கொடுக்கும்” சபைகள் என நீங்கள் காண்பவை எவை?

4. நகரத்தின் சபையின் ஆரோக்கியம் என்ன?

5. “சபையின் மூப்பர்” என கொள்ளப்பட்ட கிறிஸ்தவ தலைவர் யார்?

6. நகரத்தின் அனைத்து இடங்களிலும் எளிதாக ஜெபம் பண்ண முடிகின்றதா?

7. இன அல்லது ஸ்தாபன எல்லைகளிற்கூடான கிறிஸ்தவ தலைவர்களின் ஐக்கிய நிலை என்ன?

8. கிறிஸ்தவ அறநெறி நோக்கிய நகரத்தின் தலைவர்களின் பார்வை என்ன?

**இ. உறவு**

1. நகரத்தை குறித்தான தேவனுடைய சத்ததின் உயர்விலான பரிந்துபேசுதலில் அறிந்தவை என்ன?

2. நகரத்தின் முழுமை அல்லது நகரத்தின் குறிப்பிட்ட பகுதியின் ஜீவியம் அல்லது எல்லையின் கட்டுப்பாட்டில் காணப்படும் தரவரிசையின் துரைத்தனங்களின் அடையாளங்கள் என்ன?

**இப்பொழுது.... ஜாதியிற்கு, நகரத்திற்கு, அல்லது உங்கள் அயலவர்களுக்கு ஜெபிப்பதற்கு நீங்கள் பெற்ற தகவல்களை பயன்படுத்துங்கள். நீங்கள் இனங்கண்ட தீய சேனைகளுக்கு எதிராக விசேடமாக ஜெபியுங்கள்.**

## அதிகாரம் ஐந்து

# வல்லமையான பரிந்து பேசுதலுக்கான தடைகள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ வல்லமையான பரிந்துபேசுதுலுக்கான தடைகளை அகற்றவும், அடையாளம் காணவும்,
- ☐ எப்பொழுது ஜெபிக்க கூடாது என்பதை அறியவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க-வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள். (யாக்கோபு 4:3)**

## அறிமுகம்

நீங்கள் பரிந்துபேசுதலை சரியாக செய்யவேண்டுமாயின் வல்லமையான பரிந்து பேசுதலிற்கான தடை-களை நீங்கள் அறிந்து கொள்ளுவதோடு, உங்களுடைய ஜீவியத்திலிருந்து அவைகளை அகற்ற வேண்டும். “தடைகள்” என்பது உங்களை பரிந்து பேசுதலை செய்யாதவாறு தடுக்கும், உங்கள் வழியில் இடையில் நிற்கும் ஏதாவது ஒன்று ஆகும்.

## வல்லமையான பரிந்து பேசுதலுக்கான தடைகள்

வல்லமையான பரிந்து பேசுதலுக்கான தடைகளை வெளிப்படுத்தும் கீழ்வரும் வேத வாக்கியங்களை படியுங்கள்:

| | |
|---|---|
| -ஏதாவது வகை பாவம் | ஏசாயா 59:1-2; சங்கீதம் 66:18; ஏசாயா 1:15 நீதிமொழிகள் 28:9 |
| -இருதயத்திலுள்ள விக்கிரகங்கள்: | எசேக்கியேல் 14:1-3 |
| -மன்னிப்பை கொடுக்காத ஆவி: | மாற்கு 11:25; மத்தேயு 5:23 |
| -சுயநலம், பிழையான நோக்கங்கள்: | நீதிமொழிகள் 21:13; யாக்கோபு 4:3 |
| -வல்லமை இன்மை, சாதகமான பிராத்தனைகள்: | யாக்கோபு 4:2-3 |
| -வாழ்க்கை துணைவர்களின் தவறான நடத்தை: | 1 பேதுரு 3:7 |
| -சுய நீதி: | லூக்கா 18:10-14 |
| -அவிசுவாசம்: | யாக்கோபு 1:6-7 |
| -கிறிஸ்துவிலும், அவருடைய வசனத்திலும் கீழ்ப்படிவின்மை: | யோவான் 15:7 |
| -இரக்க உணர்வு இன்மை: | நீதிமொழிகள் 21:13 |
| -பாசாங்கு, பெருமை, அர்த்தமற்றதை திரும்ப திரும்ப சொல்லுதல்: | மத்தேயு 6:5; யோபு 35:12-13 |
| -தேவனுடைய சித்தத்தின்படி கேட்காமை: | யாக்கோபு 4:2-3 |
| -இயேசுவினுடைய நாமத்தின்படி கேட்காமை: | யோவான் 16:24 |

-சாத்தானுடைய, பிசாசினுடைய தடைகள்: தானியேல் 10:10-13; எபேசியர் 6:12
-தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலில் தேடாமை: முதலாவது இராஜ்ஜியத்தை தேடும் போது மட்டுமே “மற்ற காரியங்கள்” கொடுக்கப்படும்: மத்தேயு 6:33
-உங்களுக்கு ஜெபிக்க தெரியாதிருக்கும் போது நீங்கள், ஜெபம் தடையாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே பரிசுத்த ஆவியானவரை உங்களுக்கூடாக ஜெபத்தை செய்ய அனுமதிப்பதின் முக்கியத்துவம் ஆகும்: ரோமர் 8:26

## பரிந்து பேசுதலுக்கான தடைகளை அகற்றுதல்

பரிந்து பேசுதலுக்கான தடைகளை அடையாளம் காணுதல் மாத்திரம் போதாது, ஆனால் நீங்கள் உங்கள் வாழ்க்கையிலிருந்து அவைகளை அகற்றும்படியான உதவியை தேவனிடம் கேட்க வேண்டும். அத்தோடு பதிலளிக்கப்படாத ஜெபங்களானது உங்கள் வாழ்க்கையிற்கு தடைகள் இருப்பதாக அர்த்தப்படாது. முதலாம் அதிகாரத்தில் நாம் குறிப்பிட்டுள்ளதுபோல, ஜெபத்திற்கான பதில்கள் தாமதப்படலாம் (லூக்கா 18:7) அல்லது எமது வாஞ்சைகளில் வித்தியாசமான பதிலளிக்கப்படும் (2 கொரிந்தியர் 12:8-9).

## எப்பொழுது ஜெபிக்க கூடாது

கிரியை செய்யும் முன் பாதையிற்காகவும், அவருடைய வழிகாட்டுதுலுக்கும் தேவனுக்கு முன்பாக ஜெபத்தில் பரிந்து பேசும்போது எவ்வாறு பொருத்திருப்பது என்பதை கற்றல் மிகவும் முக்கியமானது. எப்பொழுது ஜெபிக்க கூடாது என அறிந்திருத்தலும் இதற்கு சமாமான முக்கிமானதாகும். சில சமயங்களில் உங்களுடைய பரிந்து பேசுதலுக்கான ஜெபம், அதிகமாக ஜெபிப்பதற்கு பதிலாக கிரியை செய்யும்படியான தேவனுடைய அழைப்பை உங்களில் ஏற்படுத்தும்.

மாராவின் கசப்பான நீர் நிலையில் இஸ்ரவேலின் கதையிற்கூடாக இது காட்டப்படுகின்றது. நீருக்காக அவசியமான நிலையிலும், இந்த விஷ நீரோட்டத்திலிருந்து நீரை அருந்த முடியவில்லை. மோசே தேவனிடம் பரிந்துபேசுதலுக்கான ஜெபத்தை செய்யும்போது, தண்ணீரை இனிப்பாக்குவதற்கு உண்மையில் என்ன செய்ய வேண்டும் என தேவன் அவனிடம் காட்டினார். ஜெபத்தில் தேவனோடு மேலதிகமாக காத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவன் வெளிப்படுத்திய விதத்தில் மோசே கிரியை செய்தார். ஆயியில் துன்பப்பட்டு படுதோல்வியை அடைந்த இஸ்ரவேலருக்காக பரிந்து பேசிய யோசுவாவின் கதையிலும் இதேநிலை உண்மையாகும். மக்கள் மத்தியில் பாவம் காணப்படுகின்றது என தேவன் வெளிப்படுத்தினார், அத்தோடு அவர் யோசுவாவிடம் கூறினார்....

> **எழுந்திரு, நீ இப்படி முகங்குப்புற விழுந்துகிடக்கிறது என்ன? இஸ்ரவேலர் பாவஞ் செய்தார்கள். எழுந்திரு. நீ ஜனங்களைப் பரிசுத்தம்பண்ணு....**
> **(யோசுவா 7:10,12,13ன் பகுதிகள்)**

இது ஜெபம் பண்ணும் நேரம் அல்ல, ஆனால் ஜெபத்தில் தரப்பட்ட வழிகாட்டல்களின்படி கிரியை செய்யும் நேரமாக இருக்கின்றது. சில மக்கள் தேவன் அவர்களிடம் சொன்னதை செய்யாதிருக்கும் படியான ஓர் பரிந்து பேசுதலை உபயோகிக்கின்றனர். வல்லமையுள்ள பரிந்துபேசுதலானது வல்லமையுள்ள நடவடிக்கையின் கிரியையிற்காக மாறும். சில மக்கள் தேவன் ஏற்கனவே பதில் அளித்திருப்பினும் பரிந்து பேசுதலை தொடர்ந்து செய்கின்றனர், ஆனால் அவர்களுக்கு பதில் பிடிப்பதில்லை. எண்ணாகம் 22 பிலேயாமின் கதையை மீளாய்வு செய்க. 18-19 வசனங்களை குறிப்பிட்டு பார்க்க. பிலேயாம் தேவனிடம் அதே காரியத்திற்கு செல்லுவதற்கு அனுமதி இல்லை, ஏனென்றால் தேவன் ஏற்கனவே அவனுக்கு பதில் அளித்து விட்டார் (வசனம் 12ஐ பார்க்க).

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

2. இந்த அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்டுள்ள வல்லமையான பரிந்து பேசுதலை தடை செய்யும் சிலவற்றை பட்டியலிடுக?

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

3. எப்பொழுது ஜெபம் செய்ய கூடாது?

................................................................................................................................................

................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

இந்த அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்டுள்ள வல்லமையான பரிந்து பேசுதலை தடை செய்பவற்றை பட்டியல்படுத்துக. உங்கள் ஜெபத்தை தடுக்கும் ஏதாவது இருப்பின் அதற்கு சரி அடையாளம் இடுக. உங்களுடைய வாழ்க்கையின் இந்த தடைகளை எவ்வாறு நீங்கள் அகற்றுதல் செய்யலாம்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

## அதிகாரம் ஆறு

# பரிந்து பேசுதலுக்கான ஓர் மாதிரி ஜெபத்தை உபயோகித்தல்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ இரண்டு மாதிரி ஜெபத்திற்கான வேதாகம வசனங்களை கொடுக்கவும்,
- ☐ தேவனுடைய ஜெபம் பொதுவாகவே ஏன் பரிந்து பேசுதலுக்கான ஜெபம் என்பதை விபரிக்கவும்,
- ☐ மாதிரி ஜெபத்தை மனனமாக கூறவும்,
- ☐ பரிந்து பேசுதலுக்கு வழிகாட்டியாக மாதிரி ஜெபத்தை உபயோகிக்கவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

**பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,**
**உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.**
**உம்முடைய ராஜ்யம் வருவதாக.**
**உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப்**
**பூமியிலேயும் செய்யப்படுவதாக.**
**எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.**
**எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல**
**எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.**
**எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,**
**தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்,**
**ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.**
**(மத்தேயு 6:9-13)**

## அறிமுகம்

“தேவனுடைய ஜெபம்” அல்லது “மாதிரி ஜெபம்” என இரண்டு வகையான ஜெபங்கள் காணப்படுகின்றன. ஒன்று மத்தேயு 6:9-13இலும், இன்னொன்று லூக்கா 11:2-4இலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. வித்தியாசமான ஜெபங்கள் என்பதை விட அவைகளுக்கிடையிலான ஒரே ஜெபத்தின் இரண்டு வகைகள், அமைப்பு சம்பந்தமாக அவைகளின் நீதியின் ஒத்தத்தன்மையை பெரும்பாலான வேதாகம அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றார்கள்.

மத்தேயுவின் வகை இயேசு மலைப்பிரசங்கத்தில் போதிக்கும்போது கொடுக்கப்பட்டது. லூக்கா புத்தகத்திலுள்ள ஜெபம் இரண்டரை வருடங்கள் கழித்து சீஷர்கள் இயேசுவிடம் வந்து அவர்களுக்கு ஜெபம் பண்ணுதலை உபதேசிக்கும்படி அவரிடம் கேட்டபோது கொடுக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில், இயேசு ஜெபம் பண்ணுபவற்றை சீஷர்கள் அவதானித்து, அவருடைய ஜெபத்தின் அனுபவத்தின் மூலமான விளைவின் வல்லமையை சாட்சி பகர்ந்தனர். இது சீஷர்களிடம் ஜெபத்தை கற்றுக் கொள்ளுதவற்கான வாஞ்சையை ஏற்படுத்தியது, அகவே அவருடைய போதகரிடம் அவர்கள் வந்து, “தமக்கு ஜெபிக்க கற்றுத்தரும்படி” கேட்டனர்.

இயேசு “தேவனுடைய ஜெபம் என்று அழைக்கப்படும் வார்த்தையின் மூலமாக பிரதியுத்தரவு அருளினார்:

> **நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது:**
> **பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,**
> **உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.**
> **உம்முடைய ராஜ்யம் வருவதாக.**
> **உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப்**
> **பூமியிலேயும் செய்யப்படுவதாக.**
> **எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.**
> **எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல**
> **எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.**
> **எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,**
> **தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்,**
> **ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.**
> **(மத்தேயு 6:9-13)**

## பரிந்து பேசுதலுக்கான ஜெபம்

இயேசுவிடம் சீஷர்கள் வந்து, “ஓர் ஜெபத்தை கற்று தாரும்” என்று அல்லாமல் “ஜெபிக்க கற்று தாரும்” என கேட்டார்கள். யூத போதகர்களாக வேலைசெய்பவர்களின் பொதுவான முறையை பயன்படுத்தி அவர்களுடைய விண்ணப்பத்திற்கு இயேசு பிரதியுத்தரவு செய்தார். யூத போதகர்கள் கூட உண்மையின் தலைப்புகளில் சிலவற்றை பட்டியலிட்டனர், பின் ஒவ்வொரு குறிப்புக்களிலும் முழுமையான மேலோட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாதிரியின் ஜெபத்தில், இயேசு இந்த அதே போதனையின் வடிவமைப்பையே உபயோகித்தார். அவர் தலைப்பை கொடுத்து, “நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது” என அறிவுறுத்தினார். “நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது” (கிரேக்க எழுத்தில் ஹுன்டஸ் ஓன்) இதன் அர்த்தம் “இந்த வாக்கியத்தோடு ஜெபம் பண்ணுங்கள்” என்பதாகும். வசனத்திற்கு வசனமாக ஜெபத்தை மீள் சொல்லும்படிக்கு இயேசு அவருடைய சீஷர்களுக்கு கட்டளையிடவில்லை, ஆனால் “ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது” என ஜெபிக்கும்படி கூறினார்.

அவருடைய ஜெபமானது பன்மையான மறுபெயர் சார்ந்த உரிச்சொல்லான “எங்கள்” என்பதிலிருந்து ஆரம்பமானது. ஜெபத்திற்கு மேலதிகமாக “எங்களுக்கு” “எங்கள்” “எங்களை” போன்ற வாக்கியங்களை நாம் பார்க்கின்றோம். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், மாதிரி ஜெபமானது ஒரு பரிந்து பேசுதலுக்கான ஜெபம் ஆகும், ஏனென்றால் நீங்கள் உங்களுக்காக ஜெபம் செய்வதோடு, மற்றவர்களுக்காக ஜெபம் செய்கின்றீர்கள்.

## ஜெபத்தின் ஆய்வு

இந்த மாதிரி பரிந்து பேசுதலின் ஜெபத்தின் விரிவான ஆய்வு கீழ்வருமாறு:

**பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,**

“எங்கள் பிதாவே” என்னும் வசனம் அருகில் உள்ளமையையும், “பரமண்டலங்களிலிருக்கிற” என்னும்

வசனம் தூரத்தையும் காட்டுகின்றது. எவ்வாறாயினும், சங்கீதம் 139 தேவன் எங்கும் இருக்கின்றார் என்பதை வெளிப்படுத்துகின்றது. நாம் "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என ஜெபிக்கும் போது, பிதாவிற்கும் எமக்கும் இடையிலான தூரத்தை இது காட்டாது, ஆனால் இது உடனடியாக இயற்கையான உலகிலிருந்து வல்லமையான ஆவிக்குரிய திட்டத்திற்குள் எம்மை கொண்டு வருகின்றது. தேவன் தம்மிடம் உள்ள இயற்கை பகுதியில் உள்ள முழு வளங்களும் மாதிரி ஜெபத்தில் மீதியாக காணப்படும் விண்ணப்பங்களில் கொடுக்கப்பட்டுள்ள பிரதிபலனே என அது எமக்கு உறுதியளிக்கின்றது. நாம் "பரமண்டலங்களிலிருக்கின்ற எங்கள் பிதாவே" என ஜெபிக்கும் போது, நாம் உடனடியாக இயற்கையான தேவனுடன் பரிந்து பேசுதல் ஜெபத்தில் உபயோகிக்கப் படும் எல்லையற்ற இயற்கை வளங்களுடன் கிறிஸ்துவில் இணைக்கப்படுகின்றோம்.

## உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக:

தேவனுடைய குடும்பத்தில் நாம் அங்கத்துவராக மாறும்பொழுது, இயற்கையான உலகத்தில் தத்தெடுக்கப்படும் ஓர் குழந்தை புதிய தகப்பனின் பெயரால் கருதுவதுபோல், எமக்கு பரலோக தகப்பனின் பெயர் கொடுக்கப்படும். எமது ஆவிக்குரிய தத்தெடுப்பானது தேவனை "பிதா" என அழைக்கும் உரிமையை தருவதோடு, அவருடைய நாமத்தினால் தொடர்புபடும் அனைத்து நன்மை-களையும் பெற முடியும், எனென்றால் இப்பொழுது நாங்கள் பரலோக ராஜ்ஜியத்தின் சந்ததியாய் இருக்கின்றோம்.

தேவனுடைய பெயரானது அடையாளத்தை காட்டும் காகித துண்டு அல்ல, ஆனால் இது அவருடைய இயற்கையையும், அடையாளத்தையும் வெளிப்படுத்தும். நாம் "உமது நாமம் பரிசுத்தப்படுவதாக" என கூறினால், நாம் நபரையும், வல்லமையையும், தேவனுடைய அதிகாரத்தையும் அறிவிக்கின்றோம். நீங்கள் மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது, அவர்களுடைய வாழ்வில் தேவன் கிரியை செய்யும் பொருட்டு பரிந்து பேசுதலில் இந்த பெயரை நீங்கள் உபயோகிக்கலாம். இங்கு ஓர் உதாணம் உள்ளது:

> *"நான் எனது மனைவிக்காக ஜெபிக்கின்றேன், இது நீர் அவளுக்கு யொகோவா-சாலோமாக இருக்கின்றீர். இன்றைய நாளின் ஒவ்வொரு தேவைகளையும் அவளுக்கு கொடுக்க, நீர் அவளுடைய ஜெகோவா-ஜய்ரே ஆக இருப்பதற்கு ஜெபிக்கின்றேன். ஜேகோவா-நிசி, அவளுடைய வாழ்க்கைமேல் ஆளுகை செய்யும் கொடியாக இருக்க வேண்டும் என நான் ஜெபிக்கின்றேன். ஜேகோவா-எம்"கட்டேஸ் ஆக இருக்கும் நீர் இந்த நாளில் அவளை பரிசுத்த படுத்தவேண்டும் என நான் ஜெபிக்கின்றேன்... (போன்றவை)"*

கீழ்வரும் பட்டியலானது தேவனுடைய பெயரான எழு வகைகளை இனங்காணுவதோடு, அதன் அர்த்தங்களையும் கொண்டுள்ளது:

| **பெயர்** | **அர்த்தம்** | **வசனம்** |
|---|---|---|
| ஜேயோவா-சிட்கேனு | ஜேகோவா நீதியாயிருக்கிற கர்த்தர் | எரேமியா 23:6 |
| ஜேகோவா-எம்"கட்டேஸ் | ஜேகோவா எம்மை பரிசுத்தப்படுத்துபவர் | யாத்திராகமம் 31:13 |
| ஜேகோவா-சாலோம் | ஜேகோவா சமாதானமுள்ளவர் | நியாயாதிபதிகள் 6:24 |
| ஜேகோவா-சம்மா | ஜேகோவா இருக்கின்றார் | எசேக்கியேல் 48:35 |

| | | |
|---|---|---|
| ஜேகோவா-ராப்பா | ஜேகோவா குணமாக்குகின்றார் | யாத்திராகமம் 15:26 |
| யேகோவா-யீரே | ஜேகோவா பார்த்துக்கொள்வார் | ஆதியாகமம் 22:14 |
| யேகோவா-நிசி | தேவன் எமது கொடி | யாத்திராகமம் 17:15 |
| யேகோவா-ரோகி | தேவன் எனது மேய்ப்பர் | சங்கீதம் 23:1 |

**உம்முடைய ராஜ்யம் வருவதாக:**

கிரேக்கம், எபிரெயம், அரமெயிக் ஆகியவற்றில் தேவனுடைய "ராஜ்யம்" என்பது இராஜத்துவம், ஆளுகிறவர், ஆளுனர், அல்லது தேவனுடைய கிரியையின்படி ஆளுபவர் என அர்த்தப்படும். இது கிரியையில் தேவனுடைய சுபாவத்தை வெளிப்படுத்துகின்றது. தேவனுடைய ராஜ்யத்தின் பூலோக அமைப்பின் அதன் உள்ளடக்கமாக தேவனுடைய கிரியை செய்யும் பகுதியை பார்க்கலாம். தேவனுடைய ராஜ்யத்தின் விரிவாக்கமானது அதன் உள்ளூர் சபைகளின் அமைப்புக்களினூடாக காணப்படுகின்றது. அத்தோடு ராஜ்யமானது தனிப்பட்டவர்களினால் அமைக்கப்பட்டுள்ளது, அதாவது, இந்த ராஜ்ஜியத்தின் எல்லா உண்மையான விசுவாசிகளும் மறுபடியும் பிறந்துள்ளார்கள்.

எதிர்காலத்தின் தேவனுடைய இராஜ்யமானது சிலவேளைகளில் காட்புலனாக அமைக்கப்படும். இதன் சரியான நேரத்தை நாம் அறியோம் (அப்போஸ்தலர் 1:7), ஆனால் தேவனுடைய வசனத்தின்படி இது உண்மையானது. அனைத்து "உலகத்தின் ராஜ்யங்களும்" தேவனுடையவைகளாகி, சாத்தானுடைய தீய ராஜ்யம் தோற்கடிக்கப்பட்டு, எமது ராஜா நித்தியமாக ஆளுவார் (வெளிப்படுத்தல் 11:15).

இராஜ்ஜியத்தின் மையமான செய்தியானது புதிய ஏற்பாட்டு பதிவுகளில் தெளிவாக உள்ளது. இது 49 தடவைகள் மத்தேயுவிலும், 16 தடவைகள் மாற்கிலும், 38 தடவைகள் லூக்காவிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இராஜ்ஜியத்தின் வருகையை அறிவிப்பதிலிருந்து அவருடைய பூலோக ஊழியத்தை இயேசு தொடங்கினார் (மத்தேயு 4:17). இராஜ்யத்தின் சம்பந்தமான காரியத்தை பேசியபடி அவர் தமது பூலோக ஊழியத்தை முடித்தார் (அப்போஸ்தலர் 1:3). அவருடைய பூலோகத்தின் ஊழியத்தின் ஆரம்பம் மற்றும் முடிவுற்கு இடையில், இராஜ்ஜியத்தையே எப்போதும் வற்புறுத்தினார். மற்ற இடங்களுக்கும் அதன் செய்தியை தொடர்ந்தும் போதிக்க வேண்டும் என அழுத்தமாக வற்புறுத்தினார் (லூக்கா 4:43). இயேசுவினுடைய ஒவ்வொரு உவமையும் இராஜ்யத்தை தொடர்பாயிருந்ததோடு, அவருடைய வாழ்க்கை அதன் கொள்கைகளில் மாதிரியாக இருந்தது.

விசுவாசிகள் என்ற வகையில், இராஜ்ஜயத்திற்கு ஒத்த உரியவைகளை கொடுக்கும்படியாக, எமக்கு இயேசு குறிப்பிடுகின்றார்:

> **எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே. (மத்தேயு 6:33)**

எமது ஜெபம், போதனை, உபதேசம் மற்றும் வாழ்க்கையை நாம் மையப்படுத்த வேண்டும் என இந்த வசனங்கள் குறிப்பிடுகின்றன. அவை எல்லாம் தேவனுடைய ராஜ்ஜியத்தை நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். நாம் "முதலில் தேவனுடைய ராஜ்ஜியத்தை தேடினால்" மாதிரி ஜெபத்தில்

தொடரும் மற்ற காரியங்களில் பதிலளிக்கப்படும் என இது உறுதியளிக்கின்றது.

“உம்முடைய ராஜ்யம் வருவதாக” என ஜெபித்தல் இயேசுவின் வருகை மற்றும் இறுதியான வடிவத்தில் ராஜ்யத்தை நிறுவுதல் விடவும் அதிகமான ஜெபம் ஆகும். “உம்முடைய ராஜ்ஜயம் வருவதாக” என நாம் ஜெபிக்கும்போது, பூலோகத்திலும், அவிசுவாசிகளிலும், விசுவாசிகளுடைய வாழ்க்கையிலும் எமது தேவன் ஆளுகின்றார் என நாம் பொதுவாக அறிக்கை செய்கின்றோம். நாம் பரிந்து பேசும் போது தேவன் ராஜாவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார், அத்தோடு இவ்வுலகில் இருக்கும் வாழ்க்கை யானது அவருடைய கட்டளைகளினால் ஆட்சி செய்யப்படும்.

“உம்முடைய ராஜ்யம் வருவதாக” என நாம் கூறும்போது, எம்மிலும் மற்றவர்களிலும் உள்ள வார்த்தைகள், குறிக்கோள்கள், வாஞ்சைகள், நடத்தைகள் உட்பட அவரது ராஜ்ஜியத்திற்கு எதிராக உள்ள ஏதேனும் கலகத்தை அகற்றும்படி நாம் பொதுவாக தேவனிடம் கேட்கின்றோம்.

## உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

தேவனுக்கான வசனத்தில் “சித்தம்” என்னும் வார்த்தை இரண்டு வார்த்தைகளால் கிரேக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வார்த்தை “பௌலிமா”. பூலோகத்தில் நடைபெறும் எல்லா அவருடைய திட்டமிட்டவைகள் தேவனால் ஆளப்படுகின்றன என இந்த வசனம் குறிப்பிடும். இந்த வகையான “தேவனுடைய திட்டங்கள்” மனிதனால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் அல்லாமல் நிறைவேறும். இது உலகத்திற்கான அவருடைய முன்னனி திட்டம் ஆகும், அவருடைய ஆளுகையின் சித்தத்தின் அடிப்படையில் அனைத்து காரியங்களும் தேவனுடைய கிரியையின்படி பூலோகத்தில் கொண்டு வருதல் ஆகும்:

> **தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்-தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம். (எபேசியர் 1:12)**

“பௌலிமா” என்னும் தேவனுடைய சித்தம் மனிதனுடைய ஒத்துழைப்பிற்கு அவசியம் அல்ல. “பௌலிமா” என்னும் தேவனுடைய சித்தத்தில், வெளியரங்கமானவை முன்னர் தீர்மானிக்கப்பட்டவை. “பௌலிமா” என்னும் தேவனுடைய சித்தம் அவருடைய வார்த்தையில் எழுதப்பட்டுள்ளதோடு, அவை தெளிவானது. இந்த தேவனுடைய சித்தத்தை நாம் தேட வேண்டிய அவசியம் இல்லை, ஏனென்றால் இது வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தேவனுடைய சித்தத்திற்கான மற்றொரு வார்த்தை “தெளிமா” ஆகும், அவருடைய தனிப்பட்ட அல்லது ஒவ்வொரு மனிதருக்குமான திட்டங்களை இது குறிக்கின்றது. “தெளிமா” என்னும் அவருடைய சித்தத்தை தேவன் நிறைவேற்றுவதற்கு, மனிதனுடைய கூட்டுமுயற்சி அவசியமானது. தேவனுடைய சித்தமான “தெளிமா”வில் நடப்பதா அல்லது இல்லையா என தேர்ந்தெடுக்கும் வல்லமை மக்களுக்கு உள்ளது. “உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக” என நீங்கள் உங்கள்மேல் ஜெபிக்கும்போது, தேவனுடைய சித்தமான “தெளிமாவை” செய்யும்படியாக நீங்கள் பரிந்து பேசுகின்றீர்கள்.

## எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்:

மாதிரி ஜெபத்தில், எம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கு மேலும் “உம்முடைய ராஜ்யம் வருவதாக” என நாம் அறிக்கை செய்யும்போது நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலாவதாக பார்க்கின்றோம். “உம்முடைய சித்தப்படி செய்யப்படுவதாக” என்னும் அறிக்கையூடாக பரலோக தேவனுடைய சித்தத்தை நீதியிற்கூடாக நாம் கொடுக்கின்றோம். இப்பொழுது நாம் “எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்” என நம்பிக்கையுடன் கேட்கலாம். அவருடைய ராஜ்யத்தை விரிவாக்கி, அவருடைய சித்தம் நிறைவேற எம்முடைய தேவைகளை கேட்டல் வேண்டும்.

“எங்களுக்கு தாரும்” என்பது தேவன் எமக்கு ஆதாரம் என்பதை ஏற்றுக்கொள்ளுகின்றது, இது பிரிவையோ அல்லது ஒரு நிறுவனத்தின் காசோலையையோ காட்டவில்லை. இந்த மாதிரி ஜெபத்திலுள்ள “தினமும்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, வேதாகமத்தில் எங்கும் காணப்படவில்லை. அதன் அர்த்தமானது “தேவையான அல்லது தேவையுள்ள அப்பம், எமக்கு ஆதாரமான ஒத்துழைப்பான தேவை” ஆகும். இந்த பந்தியில் பயன்படுத்தப்பட்டவை இயேசு போதித்த மாதிரி ஜெபம் ஒவ்வொரு நாளும் செய்யப்படவேண்டியவை என காட்டுகின்றது.

“அப்பத்திற்கான ஜெபமானது” ஆவிக்குரிய மற்றும் பொருளாதார ஆதாரங்களுக்கான இரண்டையும் குறிப்பிடுகின்றது. “எமக்கு” என்னும் வார்த்தை நமக்காகவும், மற்றவர்களுக்காகவும் இந்த “தின அப்பத்திற்கு” அளிப்பதற்கான பரிந்து பேசுதலை குறிப்பிடுகின்றது.

## எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

மற்றவர்களால் எமக்கு ஏற்பட்ட தீமைகளையும், எமது சொந்த தனிப்பட்ட செய்கைகளுக்காகவும் மன்னிப்பை பெற்று மற்றும் கொடுத்தலை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். உங்களுடைய சொந்த பாவத்தின் மூலம் தேவனுக்கு தீங்கு செய்தால் எமது தனிப்பட்ட செய்கைகள் ஏற்படுகின்றன. “எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்” என்று நீங்கள் சொல்லுவதிலிருந்து உங்களை மன்னிப்பதற்கான வேண்டுகோளை நீங்கள் செய்கின்றீர்கள். வேதாகமம் கூறுகின்றது:

> **நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1:8-9)**

நீங்கள் அறிந்த பாவத்தை அறிக்கை செய்தால், உங்களுக்கு தெரியாத பாவத்தை தேவன் மன்னித்து, எல்லா அநீதிகளிலிருந்தும் உங்களை சுத்தப்படுத்துவார்.

மன்னித்தல் வெளிப்படுத்தப்படும் இரண்டாவது பகுதியானது நேரடியாகவும், மறைமுகமான செய்கை களினாலும் மற்றவர்களை மன்னித்தலாகும். சிலரால் உங்களுக்கு தீங்கு செய்யப்படும்போது நேரடியான செய்கை ஏற்படுகின்றது. ஒருவர் ஒரு நண்பருக்கு அல்லது உறவினருக்கு தீங்கு செய்து, அவர்களுடைய தீங்கை நீங்கள் ஏற்றுக்கொள்ளுவதின் மூலம் மறைமுகமான செய்கைகள் ஏற்படுகின்றது. இவ்வாறான தவறுகளுக்கு “எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்” என ஜெபம் செய்யும்படி இயேசு எமக்கு போதித்தார்.

கிரேக்கத்தில் இந்த வசனத்திற்கான இலக்கிய முறையானது “எமது கடனாளிகளை நாம் மன்னிக்கின்றது போல்” ஆகும். ஆகவே இந்த வசனமானது “நாம் மற்றவர்களை மன்னிக்கின்றது போல, எமது கடன்களை எமக்கு மன்னியும்.” தேவனுக்கு எதிராக எமது பாவங்களுக்கு மன்னித்தலை நாம் பார்ப்பதற்கு முன், எமக்கு எதிராக பாவம் செய்தவர்களுக்கு நாம் ஏற்கனவே மன்னிப்பு கொடுத்தல் வேண்டும் என்பதே நிலை ஆகும். மத்தேயு 18:22-35ல் பொல்லாத ஊழியக்காரனின் கதையில் இந்த கொள்கைகளை இயேசு போதித்தார். இந்த கதை மனித மன்னித்தல்களே தேவ மன்னித்தலை ஏற்படுத்துகின்றது என காட்டுகின்றது. தேவனுடைய மன்னித்தலை பிரதிபலிப்பது மனித மன்னித்தலே ஆகும், நாம் ஒருவருக்கொருவர் மன்னித்தலை சித்தம்கொள்ளும் போது மாத்தரமே எமக்கான தேவனுடைய மன்னித்தலின் நிலை உண்மை ஆகும்.

இந்த உண்மைகளை இயேசு சுருக்கமான அறிக்கையிடும்போது சுருக்கமான கூறினார்:

> **நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். (மாற்கு 11:25)**

உங்களுடைய சபையில், வியாபார உறவுகளில், நண்பர்களுக்கு இடையில், குடும்பத்தில் சாத்தான் தீங்குகளை ஏற்படுத்துகின்றான். “தீங்குகள் வரும்” என வேதாகமம் குறிப்பிடுகின்றது (மத்தேயு 18:7). இவைகள் எழும்போது இதனோடு எவ்விதம் நீங்கள் சம்பந்தப்படுவீர்கள்? ஜெபங்களில் அவைகளுக்காக நீங்கள் பரிந்து பேசுவீர்களா அல்லது வீண்பேச்சுக்கள் மூலம் மாத்திரம் அவைகளை குறித்து பேசுவீர்களா?

## எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

“எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்” என ஜெபிக்கும்படி இயேசு எமக்கு போதித்தார், ஆனால் தேவன் மனிதனை சோதிப்பவர் அல்ல என யாக்கோபு குறிப்பிடுகின்றார்:

> **சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லா-திருப்பானாக, தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. (யாக்கோபு 1:13)**

இயேசு கூறும் சோதனையாளர் யார்? வேதாகமமானது இந்த பாத்திரம் எமது எதிரியான சாத்தான் என வேதாகமம் வெளிப்படுத்துகின்றது (மத்தேயு 4:3; 1 தெசலோனிக்கேயர் 3:5). சோதனை சாத்தானிலிருந்து வருகின்றது என வேதாகமம் தொடர்ந்தும் எச்சரிக்கின்றது (மத்தேயு 4:1; 1 கொரிந்தியர் 7:5; 1 தெசலோனிக்கேயர் 3:5). வேதாகமம் விபரிக்கின்றதாவது...

> **அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும். (யாக்கோபு 1:14-15)**

சாத்தான் ஒரு சோதனையாளர், ஆனால் எமது சரீர இச்சைகளுக்கு நாம் அனுமதித்தால் அவனுடைய சித்ததிற்கு நாம் கொண்டுபோகப்படுவோம். பிறப்பின் பாவத்திலானான வாஞ்சைகளும், மரணத்தினால் உருவான பாவங்களும் போன்றவை. உள்ளான தீய கட்டுப்படுத்தமுடியாத வாஞ்சைகள் எழுவதின் மூலம் சாத்தான் சில தாக்குதல்களை செய்கின்றான், கேட்டல், பார்த்தல், உணர்தல், தொடுதல் மற்றும் ருசித்தல் போன்ற எமது ஐம்புலன்கள் அல்லாமல் வேறு மற்ற சோதனைகள் வருகின்றது. அவைகளுக்கு என்ன ஆதாரமாயிருந்தாலும், அப்போஸ்தலனாகிய பவுல் எமக்கு உறுதியளிக்கின்றார்:

> **மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப் படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.**
> **(1 கொரிந்தியர் 10:13)**

“எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்” என நாம் ஜெபிக்கும்போது, பாவத்திற்கு நாம் இணங்குதலை நீக்கும்படியாக தேவனிடம் கேட்கின்றோம். இயேசு கூட சோதனைகளிலிருந்து விடுவிக்கப் படவில்லை, ஆனால் அது தவிர்க்கப்பட்டது (எபிரெயர் 4:15). அப்போஸ்தலனாகிய யோவான் எமக்கு உறுதியளிக்கின்றார்:

> **தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம். தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான். (1 யோவான் 5:18)**

எபேசியர் 6:10-18ல், அப்போஸ்தலனாகிய பவுல் தீய ஒன்றை குறித்தும், தேவன் எமக்கு பாதுகாப்புக்காக கொடுத்த ஆவிக்குரிய ஆயுதம் குறித்தும் விரிவாக்கப்பட்ட தகவல்களை கொடுக்கின்றார். நாம் தேவனில் மற்றும் அவரின் மகிமையில் வல்லமையாக இருக்க வேண்டும் எனவும் தீய சேனைகளுக்கு முன்பாக தைரியமாக நிற்க வேண்டும் எனவும் பவுல் அழுத்தமாக அறிவிக்கின்றார். (எபேசியர் 6:10,11,13). பிசாசினுடைய ஒவ்வொரு வஞ்சகத்திற்கும் (ஏமாற்றுதல், தந்திரம், சூது) எதிராக நிற்கும்படியான இயலுமையை அவர் தீர்மானம் செய்கின்றார். நாம் நல்ல போராட்டத்தை செய்ய வேண்டும் (1 தீமோத்தேயு 1:18), வல்லமையுள்ள விசுவாசத்தின் யுத்தத்தை செய்தல் வேண்டும் (1 தீமோத்தேயு 6:12), குறிக்கோளோடு ஞானத்தின் யுத்தம் செய்தல் வேண்டும் (1 கொரிந்தியர் 9:26) என பவுல் எச்சரிக்கின்றார்.

யுத்தமானது இயற்கையானது ஒன்றல்ல எனவும், ஆவிக்குரிய ஆயுதம் வல்லமையற்றது எனவும் பவுல் வலியுறுத்துகின்றார். ஆவிக்குரிய யுத்தமானது ஆவிக்குரிய ஆயுதத்தினால் செய்யப்பட வேண்டும்:

> **ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.**
>
> **சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்,**

**சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்,**

**பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.**

**இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.**

**எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்கா-கவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். (எபேசியர் 6:13-18)**

ஆயுதத்தின் நோக்கமானது எதிரியான சாத்தானின் வஞ்சகத்திற்கு எதிராக நிற்கும்படியான இயலு-மைக்காக ஆகும். பவுல் இந்த ஆவிகுரிய ஆயுதத்தை “தரிக்கும்படியாக” உங்களுக்கு கட்டளை-யிடுகின்றார், இதன் அர்த்தமானது தேவன் கொடுக்கும் உங்களுடைய பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுதல் உங்கள் பொறுப்பாகும். “தரித்தல்” என்பது ஏதோவொன்றை எடுத்து உங்களில் நீங்கள் பிரயோகிப்பது ஆகும். ஒவ்வொரு நாளும் உங்களில் மற்றும் மற்றவர்களில் நீங்கள் பரிந்து பேசும் போது எவ்வாறு செய்ய வேண்டும் என இங்கு தரப்பட்டுள்ளது:

| **பட்டயம்** | **செய்யப்படவேண்டிய அறிக்கை** | **பெறவேண்டிய வாக்குத்தத்தம்** | **கட்டப்படவேண்டிய எதிராளியின் ஆவி** |
|---|---|---|---|
| உண்மையின் சங்கிலியால் பிணைக்கப்பட்ட சிங்கம் | இயேசு நீர் எனது உண்மையானவர் | யோவான் 14:6 | வஞ்சகம் |
| இயேசுவின் மார்க் கவசம், நீதி | நீர் எனது நீதி | 2 கொரிந்தியர் 5:21 | அநீதி |
| இயேசுவினுடைய அரி சுவடி, சுவிசேஷத்திற்கு ஆயத்தமாகுதல் | நீரே எனது உற்சாகம் | பிலிப்பியர் 4:13 | சோம்பல் |
| விசுவாசத்தின் மார்க் கவசம் | இயேசு, நீரே எனது விசுவாசம் | கலாத்தியர் 2:20 | அவிசுவாசம் சந்தேகம் |
| இரட்சிப்பின் தலைக்கவசம் | இயேசு, நீரே எனது விசுவாசம் | எபிரெயர் 5:9 | வீணான எண்ணம் தீய எண்ணம் |
| ஆவியின் பட்டயம் (வசனம்) | இயேசு நீரே என ஜீவனுள்ள தேவன் | யோவான் 1:14 | சாத்தானுடைய பொய்கள் |

## ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே:

மாதிரியான ஜெபம் ஜெபிக்கும்படியான அதிகாரத்தை "என்றென்றைக்கும்" என்னும் வசனம் குறித்து நிற்கின்றது. இதன் அர்த்தமானது ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் தேவனுக்கு சொந்தமான-தால், இந்த ஜெபத்தின் உடன்படிக்கை, வாக்குத்தத்தம், பாதுகாப்பை நாம் பெறலாம். இந்த மாதிரி ஜெபத்தின் இறுதி நிலையை நாம் அடைந்ததும், "ராஜ்யம் உம்முடையவைகளே" என அறிக்கை யிடும்போது, தேவன் அவருடைய ராஜ்யத்தை குறித்து சொன்ன அனைத்து ஒப்பந்தங்களுடனும் நாம் வருகின்றோம்:

> **பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார். (லூக்கா 12:32)**

இது அவருடைய ராஜ்யம், ஆனால் சுதந்திரவாளிகள் என்ற வகையில், இது எமது ராஜ்யமாகும். இது சட்டரீதியாக எமது பிதாவினால் அளிக்கப்பட்டுள்ளதோடு, அதை எமக்கு தரும்படி அவர் வாஞ்சிக்கிறார்.

வல்லமைக்கான வார்த்தையான "dunamis" என்பது ஆங்கில வார்த்தையான "dynamic" and "dynamite come" லிருந்து வந்ததாகும். "வல்லமையும் உம்முடையவைகளே" என நாம் எமது ஜெபத்தை முடிவுசெய்யும்போது, எமது பொருத்தனைகளை நிறைவேற்றுவதற்கான தேவனுடைய வல்லமையான சக்தியை ஏற்றுக்கொள்ளுகின்றோம். "வல்லமையும் உம்முடையவைகளே" என நாம் அறிக்கையிடும் போது, "நான் உனக்கு எதிரிகளின் மேல் உள்ள அனைத்து வல்லமைகளையும் தருகின்றேன்" என்று இயேசுவினுடைய வசனத்தை எமக்கு தேவன் எதிரொலிக்கச்செய்கின்றார். மாதிரி ஜெபத்தில் நீங்கள் பரிந்து பேசிய அனைத்திற்கான பதிலையும் இது உறுதிப்படுத்துகின்றது.

"மகிமையும் உம்முடையவைகளே" என பிற்பாடு அறிக்கையிடும்போது, "மகிமை" என்பது ஆங்கில பாஷையில் மிகவும் பெறுமதியான வார்த்தைகளில் ஒன்றாகும். எந்த ஒரு வார்த்தையும் நல்ல அர்த்தத்தை கொடுக்காது, ஆனால் இங்குள்ள சில வார்த்தைகள் அதை விபரிக்கின்றது: மகிமை, துதி, பிரகாசம், ஒளி, வல்லமை, மேன்மை, தகுதி, போன்ற, அழகு, கீர்த்தி, செழிப்பு. இயேசு சொன்னார்:

> **நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். (யோவான் 17:22)**

பிதாவினால் மகிமையடைந்த இயேசுவின் அதே மகிமையே உங்களுக்கான அன்பளிப்பாகும். நீங்கள் செய்யவேண்டியது எல்லாம் அதை உரிமையாக்கிக்கொள்ளுவதே ஆகும். நீங்கள் மகிமையிலிருந்து மகிமையிற்கு செல்ல வேண்டுமே ஒழிய, தோல்வியிலிருந்து தோல்வியிற்கு அல்ல. நீங்கள் ஊக்கமிழந்து, அதைரியமடைந்து, ஆவியற்ற வாழ்க்கையை செய்யலாம், ஆனால் இன்று உங்களுக்கான தேவனுடைய வசனமானது.....

> **எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும், ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார். அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். (ஏசாயா 60:2)**

தேவனுடைய மகிமை தருபவை:

| | |
|---|---|
| -ஆகாரம்: | பிலிப்பியர் 4:19; எபேசியர் 3:16 |
| -பலம்: | கொலோசெயர் 1:11 |
| -மகிழ்ச்சி: | ஏசாயா 66:5; 1 பேதுரு 1:8; 2 நாளாகமம் 16:10 |
| -சுதந்திரம்: | ஏசாயா 60:1 |
| -ஓய்வு: | ஏசாயா 11:10 |
| -பரிசுத்தப்படுத்துதல்: | யாத்திராகமம் 29:43 |
| -மற்ற விசுவாசிகளோடான ஐக்கியம்: | யோவான் 17:22 |

இந்த வசனம் அது எதை சொல்லுகின்றதோ அதையே அர்த்தப்படுத்துகின்றது.... "என்றென்றைக்கும்" என்பது "நித்தியம், முடிவற்றது" ஆகும். உங்களுடைய ஜெபத்தை முடிக்கும்போது, ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உமது தகப்பனுக்கே.. என குறித்து காட்டுகின்றீர்கள். உங்களுடைய தகப்பனோடு நித்திய இணைப்பில் உங்களில் நீங்கள் இணைக்கின்றீர்கள் ஏனென்றால் அவருடைய ராஜ்யத்தையும், வல்லமையும், மகிமையையும் நீங்கள் பகிர்கின்றீர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளுகின்றீர்கள்.

## ஆமென்:

நாம் "ஆமென்" என்னும் வார்த்தையை உபயோகிக்கும்போது, அது எமது ஜெபத்தை வல்லமையுள்ள அதிகாரத்தினால் முத்திகரிக்கின்றது ஏனென்றால் "ஆமென்" கிறிஸ்துவின் ஓர் பெயராகும் (வெளிப்படுத்தல் 3:14) கிறிஸ்து தேவனுடைய ஆமென் என அழைக்கப்படுகின்றார், ஏனெனில் தேவனுடைய அனைத்து வாக்குத்தத்தங்களும் அவரில் நிறைவேறியுள்ளது. நாம் "ஆமென்" என சொல்லும்போது, நாம் எமது அனைத்து விண்ணப்பங்களையும் இயேசுவினுடைய நாமத்தினால் ஜெபித்திருக்கின்றோம்.

"ஆமென்" என்னும் வார்த்தை "முடிவுற்று வெறியேறுதல்... நான் ஜெபத்தை முடித்துவிட்டேன்!" என்று அர்த்தப்படுத்துவது அல்ல. இந்த வார்த்தையின் அர்த்தம், "நான் ஜெபித்திருக்கும்போது, இது செய்யப்படும்," ஆகவே நீங்கள் "ஆமென்" என்று சொல்லும்போது விசுவாசத்தின் அறிக்கையை பொதுவாக செய்கின்றீர்கள்.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை (தேவனுடைய ஜெபம்) மனனமாக எழுதவும்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

2. வேதாகமத்திலுள்ள மாதிரி ஜெபத்தின் இரண்டு வகைகள் எங்குள்ளது?

..............................................................................................................................................

3. தேவனுடைய ஜெபம் பொதுவாக என் பரிந்துபேசுதலின் ஜெபமாக காணப்படுகின்றது?

..............................................................................................................................................

..............................................................................................................................................

4. மாதிரி ஜெபத்தை பரிந்து பேசுதலுக்காக நீங்கள் எவ்வாறு பயன்படுத்தலாம்?

..............................................................................................................................................

..............................................................................................................................................

5. மற்றவர்களுக்கு பரிந்து பேசுதலுக்காக தேவனுடைய பெயரை நீங்கள் எவ்வாறு பயன் படுத்தலாம்?

..............................................................................................................................................

..............................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தத்தை ஜெபித்தல் உங்களுடைய ஜெபத்திற்கான பதிலை உறுதி செய்யும். உங்கள் வேதாகமத்திற்கூடாக நீங்கள் வாசித்து, குறித்த ஓர் நிறத்தில் ஒவ்வொரு வாக்குத்தத்தங்களையும் குறிப்பிடுக அல்லது உங்களுடைய வேதாகமத்தின் ஓரத்தில் 'p" என்னும் எழுத்தில் அடையாளமிடுக.

உங்கள் ஜெபத்திற்கான இந்த வாக்குத்தத்தத்தை உபயோகிக்க தொடங்குங்கள். நீங்கள் இதை பொதுவாக வாக்குத்தத்ததின் ஜெபத்தின் போது செய்யுங்கள். உதாரணத்திற்கு, சங்கீதம் 9:9-10ல் நீங்கள் இவ்வாறு ஜெபம் செய்யலாம்:

> *"துன்ப நேரத்தில் அவனுக்கு/அவளுக்கு நீரே பாதுகாப்பாய் இருப்பதற்கு நான் (பெயர்) ஜெபிக்கின்றேன். அவள் உம்மில் நம்பிக்கை வைப்பாள் என நான் ஜெபிக்கின்றேன், ஏனென்றால், நீர், தேவனே, உம்மை நோக்கு-வோரை நீர் புறக்கணிப்பதில்லை."*

இப்பொழுது... இதை முயற்சி செய்யுங்கள். வேதாகமத்தில் ஓர் வாக்குத்தத்தத்தை தெரிந்தெடுத்து, ஜெபத்தின் வடிவமான அதை கீழே எழுதுங்கள்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

## அதிகாரம் எழு

# எழுப்புதலுக்கான பரிந்து பேசுதல்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ எழுப்புதலை வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ எழுப்புதலுக்கு நாம் எவ்வாறு ஆயத்தப்படுவது என்பதை விபரிக்கவும்,
- ☐ எழுப்புதல் எப்பொழுது அவசியமாகின்றது என்பதை அறியவும்,
- ☐ தவறான நிலைகளுக்கான ஆதாரங்களை அடையாளம் காணவும்,
- ☐ எழுப்புதலுக்கான வேதாக கொள்கைகளை சுருக்கமாக்கவும்,
- ☐ எழுப்புதலுக்கான தடைகளை இனங்காணவும்,
- ☐ எழுப்புதலுக்கான பரிந்து பேசுதலுக்கு "தேவனுடைய எழுப்புதலின் திட்டத்தை" எவ்வாறு உபயோகித்தல் என்பதை விபரிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்-துக்கு ஷேமத்தைக்கொடுப்பேன். (2 நாளாகமம் 7:14)**

## அறிமுகம்

பரிந்து பேசுதலுக்கான அதிகம் முக்கியமான ஓர் கடமை எழுப்புதலுக்காக ஜெபித்தலாகும். இந்த பாடத்தில் நீங்கள் எழுப்புதலை வரைவிலக்கணப்படுத்தவும், அதை எவ்வாறு ஆயத்தம் செய்வது என்பதையும், அது தேவைப்படும்போது எவ்வாறு அடையாளம் காண்பது என்பதையும் கற்பீர்கள். எழுப்புதலை தடைசெய்யும் தடைகளை எவ்வாறு இனம்காணுதல் என்பதையும், அதற்கு எவ்வாறு பரிந்து பேசுதல் என்பதையும் கூட நீங்கள் கற்பீர்கள்.

## எழுப்புதலின் வரைவிலக்கணம்

முதலில், எழுப்புதல் இன்மை என்பதை நாம் ஆராய்வோம். எழுப்புதல் ஓர் உணர்ச்சிபூர்வமானது அல்ல. மக்கள் எழுப்புதலுக்கு உணர்ச்சிபூர்வமாக பதிலளிப்பார்கள், ஆனால் உணர்ச்சிகள் எழுப்பு-தலின் ஓர் பகுதி ஆகும், ஆனால் அவைகள் எழுப்புதல் அல்ல. உண்மையான எழுப்புதல் முழு மனிதனிலும் தாக்கத்தை ஏற்படுத்தும், எவ்வாறாயினும், இது அதன் உணர்வுகளை உள்ளடக்கும். ஞானத்தின் காரணிகள் ஒருபோதும் மனிதனை அசைக்காது. மதுபான பாவனையால் ஏற்படும் மரணத்தின் எண்ணிக்கையின் விபரப்புள்ளியானது, குடியாளரை மாற்றாது. குற்றத்தின் அதிகமான விபரப்புள்ளி குற்றங்களை மாற்றாது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான அறிவுறுத்தல்கள் ஒரு மனிதனின் ஆவிக்குரிய மற்றும் உணர்வு ரீதியான தாக்கத்தை ஏற்படுத்த அவனில் தொடப்பட வேண்டும்.

எழுப்புதல் இசைகளின் பெரிய சத்தங்களுமோ அல்லது "பாதாள-அக்கினிக்கான" பிரசங்கமோ அல்ல. இது வரவை அதிகப்படுத்துவதற்கான புதிய அங்கத்தவர்களின் கூட்டமும் அல்ல. எழுப்புதலின் காரணமாகவே சபை வளருகின்றது, ஆனால் அது எழுப்புதலுக்கு சமானம் அல்ல. எழுப்புதல் சுவிசேஷமும் அல்ல. சுவிசேஷம் என்பது நல்ல செய்தியை அறிவிப்பது ஆகும். எழுப்புதல் சுவிசேஷத்தை நடத்துகின்றது, இறந்த விசுவாசிகள் "எழுப்புதல்" அடையும்போது, சுவிசேஷத்தின் விளைவாகின்றது. இறுதியில், எழுப்புதல் என்பது தேவனுடைய ஆளுகையின் அசைவாடுதலினால் தொடப்படும் விசேட கூட்டங்களை தவிர... குறிப்பிட்ட கூட்டங்களின் தொடர் அல்ல.

எழுப்புதல் என்பது...

> **'எழுப்புதல் தொடர்பாக தேவனுடைய வார்த்தையாக ரேமாவில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகளை பிரயோகித்து, கற்றுக்கொண்ட மக்களுக்கூடாக தேவனுடைய மகத்துவமான கிரியைகளின் ஓர் வல்லமையாகும்.'**

எழுப்புதல் ஓர் வல்லமையாகும், இது மனிதனால் உற்பத்தி செய்ய முடியாது. அது மகத்துவமானது, ஏனென்றால் அது தேவனுடைய விசேட கிரியை ஆகும். குறிப்பிட்ட மக்கள் குழுவில் அல்லது அதன் ஓர் பகுதியில் எழுப்புதலானது கிரியை செய்யும். எழுப்புதலை ஆயத்தம் செய்வதற்கு, எழுப்புதல் தொடர்பான தேவனுடைய வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கொள்கைளை நாம் பிரயோகிக்க வேண்டும். எழுப்புதலை குறித்து வேதாகமம் போதிக்கும் ஒவ்வொன்றும் "ரேமா" அல்லது "குறிப்பிட்ட" பொருளை கொண்ட தேவனுடைய வசனம். நாம் எழுப்புதல் இவைகள் என்றும் கூட சொல்லலாம்:

-ஓர் எழுச்சியை, புத்துயிர் ஊட்டுதல், தேவனுடைய மக்களை மீள் கட்டுதல், மீதியாயிருக்கும் காரியங்களை பலப்படுத்துதல்.

-வாழ்க்கைக்கு அல்லது உணர்வு நிலைக்கு திரும்புதல். அது புத்துயிர் அடைந்து, செயற்பாட்டு நிலையை அடைந்து, மீண்டும் மலர்ச்சியடையும்.

-சரீரத்திலுள்ள ஆவியின் அச்சுறுத்தல் மரணத்திற்கேதுவான அச்சுறுத்தலை கொடுக்கும்.

-தேவனுடைய பிரசன்னத்திலான நேரத்தின் மறுமலர்ச்சி. (அப்போஸ்தலர் 3:19)

## எழுப்புதலுக்கு ஆயத்தம் செய்தல்

விவசாயத்தினுடைய கடமையை எழுப்புதலின் ஆயத்தத்தோடு நாம் ஒப்பிடுவோம். ஒரு விவசாயி சுற்றி இருந்து, நல்ல அறுவடைக்காக ஜெபிக்கலாம், ஆனால் அவர் வயல்வெளியை ஆயத்தம் செய்யாவிட்டால், விதைக்காவிட்டால், நீர் கொடாவிட்டால், அது வளராது.

அதேபோல் இந்த பகுதிக்கான கடமையை செய்தால் அறுவடை உறுதி என்று நினைக்கும் விசுவாசியும் முட்டாளே. அது மழை, சூரிய ஒளி, பயிரை வளர்வதற்கு கொண்டுவருவதற்கான சரியான கால அமைப்புக்களுக்கூடாக தேவனுடைய ஆளுகை நடைபெற வேண்டும். விதைப்பும் அறுப்பும் ஆகிய கொள்கைகளின் ஒத்துழைப்புடன் விவசாயி வேலை செய்கின்றார், தேவனுடைய வசனமே விதைப்பின்

நேரத்தையும், அறுவடையையும் வெளிப்படுத்துகின்றது. தேவனே இன்னும் ஆளுகின்றார், மழை, சூரியன், சரியான கால நிலைகள் அவரிடமிருந்தே வருகின்றன.

எழுப்புதலுக்கும் இதே ஒற்றுமையே பயன்படுகின்றது. இது தேவனுடைய ஆளுகையின் அசைவாகும், ஆனால் எழுப்புதலை “அறுவடை” செய்ய, தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கீழ்வரும் கொள்கைகளை நாம் ஆயத்தம் செய்ய வேண்டும். தேவனுடைய மக்களின் பிரதிபலிப்பும், தேவனுடைய ஆவியின் அசைவாடுதலின் இணைப்பே எழுப்புதல் ஆகும்.

## எழுப்புதல் எப்பொழுது அவசியமாகின்றது

எழுப்புதல் எப்பொழுதும் நிச்சயமாகவே தேவையாகும், ஆனால் ஒழுக்க நிலைகளில் பின்வாங்கும் போது அது இன்னும் அவசியமாகும். பின்வாங்கும் நிலைகளை விளங்கிக்கொள்ளுதவற்கு, இஸ்ரவேலின் உதாரணத்தை கொள்க. “பின்வாங்கும் நிலைகள்” இஸ்ரவேலின் பிரச்சனைகள் என எரேமியா அழைத்தார் (எரேமியா 1:3-4). வேதாகமம் கூறுகின்றது:

> **பின்வாங்கும் இருதயமுள்ளவன் தன் வழிகளிலேயும், நல்ல மனுஷனோ தன்னிலே தானும் திருப்தியடைவான். (நீதிமொழிகள் 14:14)**

எரேமியாவின் அதிகாரம் 2ற்கு திருப்புங்கள். இஸ்ரவேலுக்கு காணப்பட்டதை நீங்கள்....

-தேவன் அவர்களுக்கு முன் இருந்ததுபோல் முக்கியத்துவம் இல்லை என்பதை உணரலாம் (எங்களை நடத்தினவருமாகிய கர்த்தர்...): 2:5

-கடந்த காலத்தில் தேவன் அவர்களுக்கு செய்த மாபெரும் காரியங்களை மறந்தார்கள்: 2:6-7

-இஸ்ரவேலின் சமய தலைவர்கள் கூட பின்வாங்குதலின் இணைந்தார்கள். “கர்த்தர் எங்கே-யென்று” ஆசாரியர்கள் கேட்க மறந்தார்கள்?” 2:8

-அவர்களுடைய ஜீவியத்திலிருந்து தேவன் வெளியேறுவதற்கு, அவர்கள் மற்ற காரியங்களுக்கு திரும்பினார்கள்... தற்போதான காரியம் விக்கிரகங்கள் ஆகும்: 2:11-12; 27-28

-அவர்கள் உண்மையான ஜீவத்தண்ணீர் விட்டுவிட்டு, தண்ணீர் நிற்காத தொட்டிகளைத் வெட்டிக் கொண்டார்கள்: 2:13

-அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் தளர தொடங்கினார்கள்: 2:19

-அவர்கள் சுய-நீதியின் நிலைக்குள் பிரவேசித்தார்கள்: 2:22-23

-அவர்கள் தங்களுக்குத்தானே நீதியை கொடுத்துக்கொண்டார்கள்: 3:11

-அவர்கள் அவர்களுடைய தீங்கிற்குள் மற்றவர்களை இழுத்துக்கொண்டார்கள்: 2:33-34

பின்வாங்குதல் என்னும் பாவமானது தேவனை வெளியேற்றிவிட்டு, ஒருவரின் வாழ்க்கையை சுயத்தால் நிரப்புதல் ஆகும். இது கழுவப்பட்ட பன்றி மீண்டும் சேற்றுக்குள் செல்வதற்கும், நாய் தான் தின்றதையே கக்கும் எனவும் இது விபரிக்கப்பட்டுள்ளது. (2 பேதுரு 2:21-22)

## பின்வாங்கும் நிலைகளுக்கான ஆதாரங்கள்

பின்வாங்கும் நிலைகளுக்கான சில ஆதாரங்கள் இங்கே தரப்பட்டுள்ளன. நீங்கள் இந்த பட்டியலை படித்து உங்களுடைய சொந்த இருதயத்தையும், ஜீவியத்தையும் பரீட்சிக்க. நீங்கள் பின்வாங்கும் நிலைமையிற்கு செல்லுகின்றீர்கள்...

1. ஜெபம் உங்கள் வாழ்கையின் முக்கியமான பகுதியாக வெளியேறும் போது. "ஜெபத்தினுடைய சிதைவுகளால் எழுப்புதல் தாமதமாகின்றது" என சொல்லப்படுகின்றது.

2. வேதாகமத்தினுடைய உண்மையான கேள்விகள் நிறுத்தப்படும்போது, நீங்கள் ஏற்கனவே பெற்ற அறிவின்படி உள்ளடக்கப்படுகின்றீர்கள். இது வேதாகமத்தை வாசிக்காதிருப்பதால் பின்வாங்குதல் இல்லை என சொல்லப்படவில்லை. அநேகர் பணிவான பக்தியை கொண்டிருந்தபோதும், தேவையான ஞானத்தின் வசனத்தை அவர்கள் வாசித்து அதன் காரணிகளை கொண்டிருந்தபோதும், தமது ஜீவியத்தில் அதை பிரயோகிக்காது இருத்தல்.

3. நித்திய காரியங்களுக்கான எண்ணங்கள் நிறுத்தப்பட்டு சாதாரண மற்றும் முக்கிய காரணங்களிலான மாறுதல்.

4. "நான் ஒரு குப்பை என தேவனுக்கு தெரியும்" அல்லது "நான் அதன் வழியே" என்று உங்களுடைய பாவத்தின் நிலையை சுய நீதியினால் கூறும்போது...

5. ஆவிக்குரிய கலந்தாலோசனைகள் சங்கடமாகவும், உங்களுக்கு சங்கடமாகவும் இருத்தல்.

6. உங்களுடைய வாழ்க்கையில் புத்தாக்கம், விளையாட்டு, பொழுதுபோக்குகள் முதல் காரிய-மாக ஏற்படுதல்.

7. நீங்கள் மனச்சாட்சி இல்லாமல் பாவத்தின் காரியத்தில் ஈடுபடும்போது.

8. உங்களுடைய ஜீவியத்தில் கிறிஸ்து போன்ற ஒளியின் அபிலாஷைகள் தொடர்ந்தும் ஆளாதபோது...

9. உங்களுடைய எண்ணங்களில் பணம் மற்றும் பொருட்களை கையகபடுத்த எண்ணும் போது...

10. தேவனுடைய நாமம் வீணாக்கப்படும்போது, ஆவிக்குரிய விசயங்கள் பரியாசம் பண்ணப்படும் போது நீங்கள் அதை கேட்டு, நித்திய காரியங்களில் முக்கியத்துவமின்மையாக நடத்தி கோபம் மற்றும் கிரியைகளிலான பகுதிகளுக்கு செல்லாதிருக்கும்போது...

11. "துதி" அலுப்பு பெறும் போது. சபை கூட்டங்கள் அதன் உற்சாகத்தை இழந்து, உங்களுடைய வாய் ஆவிக்குரிய பாடல்களை பாடி, இருதயம் இல்லாத வார்த்தைகளாயிருந்து,

உங்கள் இருதயத்தில் பாடல்கள் இல்லாமல் இந்து, மகிழ்ச்சியான வட்டத்தில் துதி இல்லாதிருக்கும்போது...

12. ஐக்கியத்தின் இணைப்பை மீறி, நீங்கள் அக்கறையற்றிருக்கும்போது.

13. கிறிஸ்தவ சேவையிலிருந்து உங்களை விலக்கும் சாதாகமான சூழ்நிலைகளை விட்டுக் கொடுக்கும் போது....

14. உங்களுடைய மாம்ச உணர்வுகள் கட்டுப்படாமல் இருக்கும்போது: நீங்கள் இழிவான படங்கள், தொலைக்காட்சிகள் பார்த்தால், தேவனல்லாத இசைகளை கேட்டல், ஒழுக்க ரீதியில் பலவீன இலக்கியங்களை படித்தல் போன்றவை.

15. உலக வாழ்க்கையை சந்தோஷமாக சாதாமாக நீங்கள் அமைக்கும்போது: உதாரணத்திற்கு கொடுக்கப்படாத கடன்கள், திவால், பொய், நேர்மையின்மை, நிறைவேற்றாத நியமனங்களும், வாக்குறுதிகளும், ஆடைகளின் அடக்கமற்ற நடைகள், உங்களுடைய வேலையாளின் முழு நாள் வேலையை ஏமாற்றுதல் போன்றவை...

16. உங்களில் தொடர்ந்து இருப்பதற்கு ஆவிக்குரிய வல்லமையை உங்களிடம் இல்லாதிருத்தல்: உங்களுடைய வாழ்க்கையில் தேவனிலும், அவருடைய வல்லமையிற்கும் மேலான அமை-தியற்ற ஏங்குதல் இல்லாமை.

17. ஆவிக்குரிய சரிவில் உங்களுடைய சபை வீழும் போது, உங்களுடைய சபையில் தேவ-னுடைய வசனமானது வல்லமையால் போதிக்கப்படாதபோது, இன்னும் அதில் நீங்கள் உள்ளடக்கமாக இருத்தல்.

18. உலகத்தின் மற்றும் உங்கள் ஜாதியின் ஒழுக்கம், அரசியல், ஆவிக்குரிய மற்றும் கலாச்சார நிலைகளில் நீங்கள் கவனமில்லாதிருக்கும்போது...

19. உங்களுடைய இருதயம் கடினமாக இருக்கும்போது: உங்களுடைய கண்ணீர் இலகுவில் விடப்படுவதில்லை, நீங்கள் கவனம் எச்சரிக்கை இல்லாதிருக்கின்றீர்கள் போன்றவை. இழந்து போன நகரம், மனிதனுடைய ஆவிக்குரிய நிலை, மற்றவர்களுடைய துன்பம் போன்றவற்றில் இயேசு அழுததை போன்று நீங்கள் அழாது இருத்தல்.

20. நீங்கள் உங்களுடைய ஆவிக்குரிய பலத்தை இழந்து, அதை இன்னும் உணராதிருக்கும் போது..

## எழுப்புதலுக்கான வேதாக கொள்கைகளை

பழைய ஏற்பாட்டில் எழுப்புதலை உருவாக்கிய வேதாகம கொள்கைகள் எழுப்புதலுக்கான ஜெபத்திற்கு எம்மை வழிகாட்டும். இரண்டு எழுப்புதல்களும் ஒன்றல்ல, ஆனால் கீழ்வருவன பழைய ஏற்பாட்டு பதிவுகளின் கொள்கைகளுக்கான ஆதாரமாகும்:

1. அநேக பழைய ஏற்பாட்டு எழுப்புதல்கள் ஆழமான ஆவிக்குரிய புறக்கணிப்பு மற்றும்

நம்பிக்கைக்கு முற்பட்ட காலமாக இருந்தன. உங்களை சுற்றி புறக்கணிப்புக்கள் இடம் பெறும்போது, நம்பிக்கையிழப்பு, களியாட்டம் போன்றவற்றிற்கு நீங்கள் சோதிக்கப்படுகின்றீர்கள். நீங்கள் தான் எழுப்புதலை கொண்டுவரல் வேண்டும்.

2. மற்றவர்களுடைய எழுப்புதலுக்காக தேவனுடைய கருவியாக உபயோகிக்க வரும் ஓர் மனிதனுடைய இருதயத்திலிருந்து ஒவ்வொரு எழுப்புதல்களும் தொடங்குகின்றன. தேவன் உங்களுடைய இருதயத்தை எழுப்புதலின் அக்கினியினால் தொட்டால், நீங்கள் மற்றவர்களில் எழுப்புதலின் தீயை ஏற்படுத்துவீர்கள்.

3. தேவனுடைய வசனத்தின் வல்லமையான அறிவிப்பின் பலனாக ஒவ்வொரு பழைய ஏற்பாட்டு எழுப்புதல்களும் தங்கியிருக்கின்றது. பாவம், நகரம், வல்லமை மட்டுமல்லாது தேவனுடைய நியாயத்தீர்ப்பு, அன்பு, சமாதானம், செல்வம் போன்றவற்றில் எழுப்புதலின் செய்தி நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். மோசேயினுடைய (உபாகமம் 11:26-28); சாமுவேலு-டைய (1 சாமுவேல் 7:3); எசேக்கியேலினுடைய (எசேக்கியேல் 33:7-8); எலியாவினுடைய (1 இராஜாக்கள் 18:21) எழுப்புதலின் செய்தியை கவனிக்க.

4. பாவத்திலிருந்து மனந்திரும்புதல் எப்பொழுதும் எழுப்புதலை கொண்டு வரும்: எல்லா விக்கிரகத்தின் அழிவிற்கும், உலகத்திலிருந்து பிரிதலுக்கும் மனந்திரும்புதல் உள்ளடக்கும்.

5. மற்றவர்களை கவனித்தல், ஓய்வுநாளை கடைப்பிடித்தல், கொடுத்தல், ஜெபம், தேவனுடைய வசனம் உள்ளடக்கமாக சரியான முன்னுரிமைகளுக்கான திரும்புதல் ஒன்று உள்ளது.

6. உண்மையான தேவனுக்கான வழிபாட்டின் திரும்புதல் உள்ளது. இந்த வழிபாடானது சாதாரண சடங்கு அல்ல, ஆனால் மகிழ்ச்சிகரமான, தமது கடவுளுக்கு மக்கள் கொடுக்கும் உணர்ச்சிபூர்வமான பிரதிபலிப்பாகும்.

7. பெருகுதல், செழிப்பு, மாபெரும் சந்தோஷம், மகிழ்ச்சியான தருணங்கள் ஒவ்வொரு எழுப்பு-தல்களோடும் தொடர்கின்றன.

## எழுப்புதலுக்கான தடைகளை

சபையில் தேவனுடைய பரிபூரணமான நடவடிக்கைகளுக்கான அசைவாட்டத்தை தடுக்கும் சில காரியங்கள் இங்கே உள்ளன:

### தலைமைத்துவ தடைகள்:

தேவனுடைய வார்த்தையை வல்லமையாக பிரசங்கித்து போதிக்காத தலைவர்கள் எழுப்புதலை தடுக்கின்றனர். ஜெப வாழ்க்கை இல்லாதவர்கள், வேதாகம படிப்பு முறைகள் இல்லாதவர்கள், வல்லமையின் வெளிப்படுத்தல்கள் இல்லாதவர்கள், வசனங்களை பகிர்வதில் அர்ப்பணிப்பு இல்லாதவர்கள் எழுப்புதலை தடை செய்கின்றார்கள். கூட்டத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள், தேவனுடைய ஆவியை அவிக்கிறவர்கள் கூட அவருடைய ஆளுகையின் அசை வாட்டத்தை தடை செய்யும்.

மந்தைகளின் மேல் உண்மையில்லாத தலைவர்களும் எழுப்புதலை தடை செய்கின்றனர். புல்லுள்ள இடங்களிலும், அமர்ந்த தண்ணீர்கள் அண்டையிலும் அவர்களுடைய தேவையை பெற மந்தையை தலைவர்கள் அனுமதிப்பதில்லை. இறந்த உலகத்திற்கான தங்களுடைய அர்ப்பணிப்பை இழந்த தலைவர்களும் எழுப்புதலை தடை செய்கின்றார்கள். எழுப்புதலில் தலைவர்களுக்கான தங்கள் பொறுப்பை அநேகர் உணர்ந்து கொள்ளுவதில்லை (யோவேல் 2:15-18).

### கூட்டத்தின் தடைகள்:

தேவனுடைய மக்களுக்கான கூட்டத்திலும் எழுப்புதலுக்கான தடைகள் காணப்படலாம். ஓர் கூட்டம் எழுப்புதலோடு பாரம்பரியம் தலையிடுவதை நேசிக்கலாம். எழுப்புதலும் மாற்றமும் ஒத்த கருத்-துடையவவை. தேவன் ஒழுங்கானவரும், நம்புக்கூடியவரும் ஆவார், ஆனால் அவர் புதியவரும், உயர்நிலையில் உள்ளவரும் ஆவார். அவர் பாரம்பரியமானவர் அல்ல. சபையானது மனிதனுடைய பாரம்பரியத்திற்கு ஏற்ப நடைபெறுமாயின், அது தேவனுடைய வல்லமையும், பிரசன்னமும் இல்லாமல் நடைபெறும்.

ஓர் கூட்டமானது சம்பிரதாயத்தை நேசிக்குமாயின் எழுப்புதலை தடை செய்யும். தாவீதின் மனைவியாகிய மீகாள் அவனை கண்டித்தாள், ஏனென்றால் அவனுடைய உணர்வுபூர்வமான துதியிலாலும், பலன் இல்லாத நிலையிலும் இருந்ததினால் ஆகும். பலனில்லாத சபை சம்பிரதாய கட்டளைகளையும், சடங்குகளையும் நேசிக்கும். சுருக்கமாக இருப்பதற்கு நேசித்தலும் எழுப்புதலை தடை செய்யும். ஞாயிறு காலையில் நாம் ஒழுங்கமைத்த இரண்டு மணித்தியாலத்தில் தேவன் எழுப்புதலை அனுப்பும் படியாக நாம் வேண்டுகின்றோம்.

சௌகரியமான உண்மைகளை அநேக கூட்டங்கள் நேசிக்கின்றது. கிறிஸ்துவின் மேல் அவர்களுடைய உரிமைக்கோரல்களை இருப்பதற்கும் அல்லது பாவத்தையும் நியாயத்தீர்ப்பையும் குறித்துபோதிப்ப-தற்கும் அவர்கள் வேண்டப்படுவதில்லை. சௌகரியம் எப்பொழுதும் எழுப்புதலுக்கான உண்மையான அவசியம் அல்ல. மற்றவர்களால் மதிக்கப்படுவதற்கு நேசித்தல் கூட எழுப்புதலை தடை செய்யும். தேவன் என்ன நினைக்கின்றார் என்பதை விட “மக்கள் என்ன நினைக்கின்றார்கள்” என்பது குறித்தே அதிக கூட்டங்கள் அதிகம் கவனம் செலுத்துகின்றன.

### பொதுவான தடைகள்:

தலைமைத்துவம் மற்றும் கூட்டங்கள் ஆகிய இரண்டிலும் வேறு தடைகளும் கூட காணப்படலாம். சபைகளிலுள்ள விசேட ஆசனங்கள் அல்லது பிரசங்க மேடைகளில் மனிதர்களில் காணப்படும் அநீதிகள் எழுப்புதலை தடை செய்யும்:

> **இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை, கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.**
>
> **உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. (ஏசாயா 59:1-2)**

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதிமொழிகள் 28:13)**

"இப்பொழுது கடைசி காலம் அத்தோடு கெடுதலுக்கும் கெடுதலுமான காரியங்களையே எம்மால் எதிர் பார்க்க முடியும்" என்னும் குறிக்கோள் கொண்டிருத்தல் கூட எழுப்புதலை தடை செய்யும். ஜெபத்திற்கும் வார்த்தைக்கும் கவனம் இன்மை, தாழ்மையாயிருக்க மறுக்கப்படுதல், தேவனை தேட மறுத்தல் அனைத்தும் எழுப்புதலை தடை செய்யும். தேவனை எல்லையிற்குள் வைத்திருத்தல் எமக்கு இடை யிலான அவருடைய ஆளுகையின் அசைவாட்டத்தை தடை செய்யும்:

**அவர்கள் திரும்பி தேவனைப் பரீட்சை பார்த்து, இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தி-னார்கள். (சங்கீதம் 78:41)**

**அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை. (மத்தேயு 13:58)**

வித்தியாசமின்மை எழுப்புதலை தடைசெய்யும். மற்றவர்களுடைய தேவைகளுக்கு கிரிஸ்துவை உரிமை கோருவதால் மக்கள் வித்தியாசமின்மைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். ஆவிக்குரிய நிலையில் மற்றும் தேவனுடைய ஆவியின் அசைவாட்டத்தில் உணர்வு இல்லாதல் இருத்தலும் எழுப்புதலை தடை செய்யும்.

## தேவனுடைய எழுப்புதலின் திட்டம்

நாம் கலந்தாலோசித்த ஒவ்வொரு தடைகளையும் பரிந்து பேசுதலிற்கூடாக அகற்ற முடியும் ஏனென்றால் எழுப்புதல் ஜெபத்தின் பிரதியுத்தரவாக வருகின்றது. எழுப்புதலுக்காக எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என இங்கு தரப்பட்டுள்ளது:

**என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்-துக்கு ஷேமத்தைக்கொடுப்பேன். (2 நாளாகமம் 7:14)**

எழுப்புதலுக்கான அநேக முக்கியமான கொள்கைகளை கொண்ட கொள்கைகள் இந்த வசனம் கொண்டுள்ளது. முதலாவது, தேவன் அவருடைய மக்களோடு பேசுகின்றார் என்பதை குறிக்க (என் ஜனங்கள்). உலகத்திலுள்ள பாவிகள் அல்லது இதையொத்த பொதுவான எவரிடமும் அவர் பேசுவது இல்லை. தேவன் "அவருடைய நாமம் தரிக்கப்பட்ட" என்னும் தன்னுடைய மக்களோடு பேசுகின்றார். தேவனுடைய மக்கள் எழுப்புதலை அனுபவிக்கும்போது அவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள்:

### 1. "தங்களை தாழ்த்த வேண்டும்":

உங்களை நீங்கள் தாழ்மைபடுத்துதல் என்பது தேவனுக்கு முன்பாக உங்களை கீழ்ப்படுத்தலுக்கு கொண்டு வருவதாகும் (லேவியராகமம் 26:40-41ஐ படிக்க). இந்த தாழ்மை தேவனுக்கு (2 நாளாகமம் 34:1-13); அவருடைய வசனத்திற்கு (2 நாளாகமம் 34:14-28); அவருடைய மக்களுக்கு (2 நாளாகமம் 34:29-33) முன்னால் உங்களை தாழ்மையிற்கு கொண்டு வருவதாகும்.

## 2. “ஜெபியுங்கள்”:

(1) முகத்தை தேடி (2) பொல்லாத வழிகளை விட்டு ஆகிய குறிப்பிட்ட ஜெபங்களை நீங்கள் செய்ய வேண்டும். நாம் “கேட்பது இல்லை”யான படியால் எம்மிடம் “இருப்பதும் இல்லை” அல்லது நாம் ஒழுங்கற்று கேட்கின்றோம். நாம் தேவனிடம் எமது இருதயத்தில் அவருடைய ஆவியின் அசைவாடுதலின் ஆயத்தத்திற்காக மனந்திரும்புதலோடும், குறிப்பிட்ட அறிக்கையிடுதலின் ஜெபத்தை ஜெபிப்பதினூடாகவும், எமக்கு எழுப்புதலை தரும்படியும் கேட்க வேண்டும்.

## 3. “என் முகத்தை தேடி”:

“முகத்தை தேடுதல்” என்னும் பந்தி கீழ்வரும் பழைய ஏற்பாட்டு பகுதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

> யாத்திராகமம் 33:7; உபாகமம் 4:29; எஸ்றா 8:22; 2 சாமுவேல் 12:16; 21:1; 1 நாளாகமம் 16:10-11; 2 நாளாகமம் 7:14; 11:16; 15:4; 20:4; சங்கீதம் 105:3-4; 24:6; 27:8; 40:17; 69:7; 70:5; நீதிமொழிகள் 28:5; ஏசாயா 51:1; எரேமியா 29:13; 50:4; ஓசியா 3:5; 5:6-7,15; 7:10; தானியேல் 9:3; செப்பனியா 1:6; சகரியா 8:21; மல்கியா 3:1

இந்த பந்திகளின் மேலோட்டமானது தேவனை தேடுதலின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துவதாவது:

1. தன்னிச்சையாக மற்றும் முழு இருதயத்தோடு தேவனிடம் திரும்புதல்.
2. அவரை சேவிப்பதற்கான உள்ளான குறிக்கோளின் அர்ப்பணிப்பு.
3. அனைத்து தீமைக்கும் அப்புறமாக திரும்புதலுக்கான தீர்மானம்.
4. அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கான தீர்மானம்.
5. ஓர் ஆர்வமுள்ள ஜெபத்திற்கான அர்ப்பணிப்பு.

தேவனை தேடுதலின் முதன்மையான அர்த்தம் தீமையை தவிர்த்தலே ஆகும் (ஆமோஸ் 5:4,14). இது உண்மையான தாழ்மையின் ஆதாரமாகும் (செப்பனியா 2:3). இது தேவனுடைய பிரசன்னத்தை உணர்தலின் அடிப்படையானது (ஓசியா 5:15). அது வாழ்க்கையை கொண்டு வருகின்றது (ஆமோஸ் 5:4-6). இது முழு இருதயத்தோடு செய்யப்படல் வேண்டும் (எரேமியா 29:12-13).

## 4. “தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால்”

ஜெபித்தலும், தேவனை தேடுதலும் மட்டும் அவர்களுக்கு போதுமானதல்ல. வழியை மாற்றுதவற்கான உண்மையான மனந்திரும்புதலில் அவர்கள் அடைய வேண்டும். தேவனுக்கு நேராக உங்களுடைய துன்மார்க்கத்தின் வழியை விட்டு திரும்புதல் வேண்டும். அனைத்து வேதாமத்தின் எழுப்புதல்களிலும் உண்மையான வலியுறுத்தலானது மனந்திரும்புதல் ஆகும். இது அனைத்து பழைய ஏற்பாட்டு எழுப்புதலிலும் ஆதாரமாயுள்ளது. சபையானது மனந்திரும்புதலோடு அழைக்க தொடங்குகின்றது (அப்போஸ்தலர் 2). வெளிப்படுத்தலின் இறுதி அழைப்பானது மனந்திரும்புதலாகும் (வெளிப்படுத்தல் 22:16).

உங்களுடைய வாழ்க்கையின் வழியை மாற்ற முடிவதற்கான தேவனுடையதான வரமே மனந் திரும்புதல் ஆகும் (அப்போஸ்தலர் 5:29-31; 11:15-18; 2 தீமோத்தேயு 2:22-26). எல்லா மனிதர்களும் மனந்திரும்ப கட்டளையிடப்பட்டுள்ளனர் (அப்போஸ்தலர் 17:30). அனைவரும் மனந்திரும்புதல் தேவனுடைய சித்தமாகும் (2 பேதுரு 3:9) மனிதர்களை மனந்திரும்புதலுக்கு இழுத்துக்கொள்ள

தேவன் கிருபையாய் கிரியை செய்கின்றார் (ரோமர் 2:4) மனந்திரும்புதல் இல்லாவிட்டால் நீங்கள் ஆக்கினைக்குட்படுவீர்கள் (லூக்கா 13:3,5). அனைத்து ஜாதியினரிடமும் அவருடைய நாமத்தினால் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் போதிக்கப்படல் வேண்டும் என இயேசு கட்டளையிட்டார் (லூக்கா 24:47).

பாவத்திலிருந்தான விடுபடுதலின் திரும்புதலில் (நீங்கள் செய்ய கூடாத காரியத்தை செய்யாதிருத்தல்) அர்ப்பணிப்பில் (தவறான காரியங்களை நீங்கள் செய்தல்) மேற்கொள்ளுதல் (பாவத்தை செயற்படுத்தலில் தேவனிடமிருந்து ஆலோசனையை தேடாமல் மேற்கொள்ளுதல்) மனந்திரும்புதல் உள்ளடக்கி யுள்ளது. “செத்த கிரியைகைகளிலிருந்து” திரும்புதலையும் மனந்திரும்புதல் உள்ளடக்கும்.

(எபிரெயர் 6:1-3). “செத்த கிரியை” என்பது மனித முயற்சியினால் தேவனிடமிருந்து புண்ணியம் பெறுவதற்காக செய்யப்படும் ஏதாவது சமய கிரியைகள் ஆகும்.

துதித்தல், காணிக்கை, இரக்கத்தின் கருமங்களினாலும் கூட செத்த கிரியைகள் செயற்படுத்தலாம். துதித்தல் ஆவியோடும், உண்மையோடும் இருக்க வேண்டும் அல்லது இது செத்த கிரியையாய் இருக்கின்றது. கட்டாயமாக கொடுத்தல், உணர்ச்சியடைதல் அல்லது நீங்கள் காணிக்கை தட்டை உங்கள் முன்னால் கடக்க பண்ண முயற்சித்தல் செத்த கிரியையாய் இருக்கின்றது. இரக்கத்தின் கருமங்கள் அல்லது கடமையிற்காக ஊழியம் செய்தல் அல்லது மகிமையை பெறுதல் கூட செத்த கிரியையாய் இருக்கின்றது.

பரிசுத்த ஆவியானவரினால் உயிருடன் எழுப்ப தகுதியில்லாத எந்த கிரியையும் செத்த கிரியையாய் இருக்கின்றது. உதாரணத்திற்கு, அனைத்து நேரங்களிலும் இடங்களிலும் மனிதர்களுக்கு தேவனுடைய ஆவியின் ஏவுதல் இல்லாமல் சுவிசேஷத்தை பரப்பதலானது முத்துகளைப் பன்றிகள்முன் போடுவதை (மத்தேயு 7:6) மற்றும் பரியாசக்காரனைக் கண்டிக்கின்றது போன்றதாகும் (நீதிமொழிகள் 9:7-8). பரிசுத்த ஆவியானவரின் வல்லமை இல்லாமல் மாம்சத்தின் பலத்தினால் செய்யப்படும் எந்தவொரு கிரியையும் செத்த கிரியையாய் இருக்கின்றது.

உங்களுடைய ஆவிக்குரிய நிலை, உங்களுடைய நோக்கம், ஊழியத்தின் வகைளை நீங்கள் தொடந்து பரீட்சித்து, திரும்புதல், அர்ப்பணித்தல், மேற்கொள்ளுதல், செய்த கிரியைகள் ஆகியவற்றின் கிரியைகளிலிருந்து நீங்கள் மனந்திரும்புதல் வேண்டும்.

**சுருக்கம்:**

எழுப்புதலை ஆயத்தப்படுத்துவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது:

-உங்களை தாழ்மைப்படுத்துங்கள்
-ஜெபியுங்கள்
-தேவனுடைய முகத்தை தேடுங்கள்
-உங்களுடைய பொல்லாத வழிகளிலிருந்து விலகுங்கள்

தேவன் உங்களுக்கு பிரதியுத்தரவு தரும் விதமானது:

-“பரலோகத்திலிருந்து கேட்பார்”: பிரதியுத்தரவு
-“அவர்களுடைய பாவத்தை மன்னிப்பார்”: செயற்பாடு
-“அவர்களுடைய தேசத்தை குணமாக்குவார்”: மீள்கட்டுதல்

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2. எழுப்புதலை வரைவிலக்கணப்படுத்துக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

3. நாம் எவ்வாறு எழுப்புதலுக்கு ஆயத்தம் செய்யலாம்?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

4. எப்பொழுது எழுப்புதல் அவசியமாகின்றது?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

5. இந்த அதிகாரத்தில் கலந்துரையாடிய தடைசெய்யும் நிலைகளின் சில ஆதாரங்களை சுருக்கமாக்குக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

6. இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட எழுப்புதலுக்கான வேதாகம கொள்கைகளை பட்டியலிடுக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

7. “தேவனுடைய எழுப்புதலின் திட்டத்திற்கான” வேதாகம வசனத்தை தருக?............................

8. எழுப்புதலுக்கான பரிந்துபேசுதலில் “தேவனுடைய எழுப்புதலின் திட்டத்தை” எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விபரிக்க.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

எழுப்புதலுக்கான பழைய ஏற்பாட்டின் வசனங்களானது இந்த கொள்கைகளின் மேலதிக படிப்பிற்காக கொடுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ளதான நிலை, எழுப்புதலுக்கான காரணகள், எழுப்புதலுக்கான விளைவுகள் ஆகியவற்றின் சுருக்கத்தை ஒவ்வொரு ஆவிக்குரிய எழுப்புதலும் கொண்டிருக்கும். உங்களுடைய சொந்த ஆய்வை தொடர்ந்து செய்வதின் மாதிரிக்காக முதலாவது உதாரணமாக செய்யப்பட்டுள்ளது. இந்த பாடத்திலுள்ள உங்களுடைய படிப்பின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலை நீங்கள் அதிகம் உருவாக்கிக்கொள்ளலாம்.

### யாக்கோபின் கீழான எழுப்புதல்: ஆதியாகமம் 35:1-15
### தற்போதுள்ள நிலை:

1. குடும்பத்தின் தலையானது தேவனுடனான ஐக்கியத்தில் இல்லை: ஆரம்பத்திலிருந்தே யாக்கோபு ஏமாற்றுபவராகவும், அதற்கு உடந்தையாகவும் இருந்தவர் ஆவர். ஏசாவின் கடுங்கோபத்தில் விலகிச்செல்லும்போது அவர் தேவனை சேவிப்பதாக வாக்குறுதி அளித்தார், ஆனால் சீக்கிரத்தில் இந்த வாக்குத்தத்தத்தை மறந்தார். யாக்கோபு தனது தேவைகளை தானே பூர்த்தி செய்பவராக காணப்பட்டார். தேவனிடமிருந்து வருவதை குறித்து அவன் கண்ணோக்கமாய் இருக்கவில்லை, ஆனால் தேவனுடைய ஆசீர்வாதத்தை எதிர்பார்த்தார். அவன் தன்னில் தானே ஆசீர்வாதத்தை பெற முடியும் என எண்ணினார். யாக்கோபு தேவனுடைய உறவை விட பொருள்களை சேகரிப்பவனாகவும், அந்த செயற்பாட்டில் அதிகம் கவனம் செலுத்துபவனாகவும், தனக்கும் தன்னுடைய குடும்பத்திற்கும் போஷிப்பனாகவும் காணப்பட்டான்.

2. அவனுடைய குடும்பத்தின் கட்டமைப்பானது வேதாகம அடிப்படையில் இல்லை: யோசேப்பிற்கு பாராபட்சம் காட்டப்பட்டது. யாக்கோபு தன்னுடைய சொந்த வீட்டை சரியாக ஆளவில்லை. அத்துடன் தனது மகளை கற்பழித்தவர்களுக்கான நன்மையை அவனுடைய மகன்கள் எடுத்துக்கொண்டார்கள் (ஆதியாகமம் 34). அவர்களுடைய மனைவிமார் ஏமாற்றுபவராகவும், பெறுமையுள்ளவர்களாகவும், உடந்தைகளாகவும் காணப்பட்டனர்.

3. சரியான ஆவிக்குரிய சூழல் இன்மை: அவனுடைய மனைவிமார் அவர்களுடைய தகப்பனின் பொய்யான தேவர்களை திருடினர். அவனுடைய மகன்மார் கொலை செய்து, களவெடுத்து, கொள்ளையடித்தனர். அவனும் அவனுடைய குடும்படும் பாவமுள்ளவர்களும், விக்கிரக ஆராதனையாளர்களுமாக இருந்தனர்: ஆதியாகமம் 35.

### எழுப்புதலுக்கான காரணிகள்:

1. யாக்கோபுடைய எழுப்புதலுக்கு சில பயங்கரமான அதிர்ச்சி சம்பவங்கள் நடந்தன: ஆதியாகமம் 35.

2. தேவனுடைய வசனத்தின் மூலம் எழுப்புதல் ஆயத்தமாக்கப்பட்டது: ஆதியாகமம் 35:1

### விளைவு:

இந்த எழுப்புதல் வீட்டில் ஏற்பட்டது. எமது வீடு எழுப்புதல் அடைந்தால், சபை எழுப்புதல் அடையும்!

1. குடும்பம் அவர்களுடைய விக்கிரகங்களுக்கு எச்சரிக்கையாகி, தங்களைதாங்கள் சுத்தமாக்கிக்கொண்டார்கள்: ஆதியாகமம் 35:2

2. அவர்கள் உண்மையான தேவனை ஏற்றுக்கொண்டார்கள்: ஆதியாகமம் 35:3

3. ஆவிக்குரிய அனுபவமுள்ள இடத்தில் அவர்கள் திரும்பினார்கள்: (பெத்தேலுக்கு செல்லுதல்): ஆதியாகமம் 35:3

4. அவர்கள் ஒரு தூணை நிறுத்தி, மனந்திரும்பி, உண்மையான ஆராதனைக்கு திரும்பினார்கள்: ஆதியாகமம் 35:7

5. அவர்களுடைய வாழ்க்கை மாற்றமடைந்தது: யாக்கோபினுடைய பெயர் மாற்றம் இந்த ஆவிக்குரிய மாற்றத்தை அடையாளப்படுத்துவதாய் உள்ளது: யாக்கோபு 32:24-32

6. யாக்கோபு தேவனுடைய புதிய உறவை பெற்றான்: தேவன் தான் “வல்லமையுள்ள தேவன்” என அறிவித்தார். இதன் அர்த்தமாவது அவர் அனைத்து வல்லமை உள்ளவர் என்பதோடு, தேவைகளை பூர்த்தி செய்யும் ஒருவர்: ஆதியாகமம் 32:24-32

இப்பொழுது..... பழைய ஏற்பாட்டின் எழுப்புதலின் கொள்கைகளை நீங்கள் கற்பதற்காக இந்த அதிகாரத்தை தொடந்து இறுதியில் பட்டியலை செய்ய கீழ்கண்ட வசனங்களை பயன்படுத்-துங்கள்..

| | |
|---|---|
| மோசேயின் கீழான எழுப்புதல்: | யாத்திராகமம் 32:1-35; 33:1-23; அதிகாரம் 34-35 |
| சாமுவேலின் கீழான எழுப்புதல்: | 1 சாமுவேல் 7:1-17 |
| எலியாவின் கீழான எழுப்புதல்: | 1 இராஜாக்கள் 17-18 |
| ஆசாவின் கீழான எழுப்புதல்: | 2 நாளாகமம் 14-15, அதையொத்த கதை 1 இராஜாக்கள் 15:9-24 |
| யோசபாத்தின் கீழான எழுப்புதல்: | 2 நாளாகமம் 20 |
| எசேக்கியாவின் கீழான எழுப்புதல்: | 2 நாளாகமம் 29:1-36; 30:1-27; 31:1-21 |
| யோசியாவின் கீழான எழுப்புதல்: | 2 நாளாகமம் 34:1-33; 35:1-19 |
| செருபாபேலின் கீழான எழுப்புதல்: | ஆகாய் 1; சகரியா 1:1-6 |
| சாலெமோனின் கீழான எழுப்புதல்: | 1 நாளாகமம் 6-7 |
| யோனாவின் கீழான எழுப்புதல்: | யோனாவின் புத்தகம் |
| நெகேமியாவின் கீழான எழுப்புதல்: | நெகேமியா 8-10 |

## பழைய ஏற்பாட்டு எழுப்புதல்கள்

**எழுப்புதலின் கீழ்:.......................................................................**

**வசனம்:............................................................................................**

**தற்போதுள்ள நிலை:**

**எழுப்புதலுக்கான காரணி:**

**விளைவு:**

## அதிகாரம் எட்டு

# ஆரம்பித்தலும், தொடர்ந்து செல்லுதலும்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ ஒழுங்கமைக்கப்பட்ட ஜெபத்தின் திட்டத்தை உருவாக்கவும்,
- ☐ தனிப்பட்ட ஜெப கையேட்டை உருவாக்கவும்,
- ☐ சர்வதேச பரிந்துபேசுதலில் சம்பந்தப்படவும்,
- ☐ ஆரம்பித்தலும், தொடர்ந்து செல்லுவதற்கான பிரச்சனைகளையும், தீர்வுகளையும் இனங் காணவும்,
- ☐ ஒழுங்குமுறையிலிருந்து வெளிச்சத்திற்காக பரிந்துபேசுதலை மாற்றவும்,
- ☐ பரிந்து பேசுதலின் ஊழியத்தில் உங்களை அர்ப்பணிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். (மத்தேயு 6:6)**

### அறிமுகம்

பரிந்துபேசுதலுக்கான எமது ஜெப படிப்பு நேரத்தில் அது என்ன எனவும், அதை எமக்கு செய்யும் படியாக கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய வளங்களையும், இந்த வகையான ஜெபங்களை எவ்வாறு செய்தல் வேண்டும் என்பதையும் நாம் கற்றோம். தேவனாகிய இயேசு கிறிஸ்துவை மாதிரி பரிந்து பேசுபவராக நாம் கவனம் செலுத்தினோம், வல்லமைக்கான ஜெபத்தின் தடைகளை அடையாளம் கண்டு, அதனுடன் சம்பந்தப்பட நாம் கற்றோம். பரிந்து பேசுதலுக்கான ஜெப ஊழியத்தில் அதை எவ்வாறு ஆரம்பித்தலும், பின் தொடர்ந்து செல்வதும் குறித்து ஆலோசனைகளை இந்த இறுதி அதிகாரம் வழங்கும்.

### ஜெபத்திற்காக ஒழுங்கமைத்தல்

வல்லமையான பரிந்து பேசுபவராக நீங்கள் மாறவேண்டுமாயின் நீங்கள் ஜெபத்திற்கு நேரம் ஒதுக்க வேண்டும். இதை செய்வதற்கான ஒரு வழியானது தனிப்பட்ட முறையிலும், மற்றவர்களோடும் ஜெப நேரத்தை ஒழுங்காக திட்டமிடுதல் ஆகும். ஒழுங்கமைக்கப்பட்ட ஜெப சேனைக்கான கீழ்வரும் கட்டமைப்பை புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகின்றது:

**தனிப்பட்ட ஜெபம்:**

ஜெபமானது தனிப்பட்ட அடிப்படையில் தனியாக செய்யப்படல் வேண்டும்:

> **நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. அப்பொழுது,**

**அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். (மத்தேயு 6:6)**

ஜெபத்திற்காக விசேடமாக ஒவ்வொரு நாளையும் ஒதுக்குங்கள், பொதுவாக உங்களுடைய நாளை தொடங்குவதற்கு முதல் அதிகாலை நேரத்தை ஒதுக்குங்கள். நீங்கள் “காலைக்கான நபராக” இல்லா விடத்து அதிகம் பொருந்தக்கூடிய இன்னொரு நேரத்தை தெரிவு செய்து கொள்ளுங்கள். இது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் விண்ணப்பத்தோடும், பரிந்து பேசுதலோடும் நின்று, தேவனுக்கு முன்பாக துதி-யோடும் ஆராதனையோடுமான உங்களுடைய ஆசாரியத்துவ ஊழியத்தை நீங்கள் செய்யும் நேரமாய் இருக்கின்றது. நீங்கள் பரிந்து பேசுவதற்கு முன் தனிப்பட்ட மனந்திரும்புதலுக்கான நேரத்தை ஏற்படுத்தி, உங்களுடைய எல்லா பாவத்திலிருந்தும் கழுவும்படியாக தேவனிடம் கேளுங்கள். வல்லமையான பரிந்துபேசுதலுக்கான அடிப்படையாக மனந்திரும்புதல் உள்ளது.

## இருவராக ஒன்றாகி ஜெபியுங்கள்:

இருவராக ஒன்றாகி ஜெபித்தலானது, ஒத்துழைக்கும் ஜெபத்தின் சிறு பங்கானது ஆகும். இது வேதாகமத்தின் கட்டமைப்பு என்பதோடு, அதிலிருந்து வல்லமை பெறப்படும் என கீழ்வரும் வாக்கியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

**அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 18:19)**

பரிந்து பேசுவதற்கு விருப்பமுள்ள ஓர் நண்பர் ஒருவரை தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள், பின் ஒழுங்காக இருவரும் ஜெபம் செய்ய ஆரம்பியுங்கள். நீங்கள் திருமணம் செய்திருந்தால் உங்கள் துணைவரை கூட தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். உங்களோடு ஜெபம் செய்யும் ஒருவர் இருப்பாராயின், நீங்கள் ஊக்கம் இழக்கும்போது அவர்கள் உங்களுக்கு உதவி செய்யலாம்.

## சிறு குழுக்கள்:

சிறு குழுக்கள் எனப்படுதல் (ஜெப கட்டம் என சில சமயங்களில் அழைக்கப்படலாம்) இரண்டு தனிப்பட்டவர்களுக்கு மேல் ஒன்றாக சேர்ந்து பரிந்து பேசுதலில் ஈடுபடுதல் ஆகும். இந்த நோக்கத்-திற்காக இருவர் அல்லது மூவர் ஒன்றாக கூடுதலின் போது மாபெரும் வல்லமை காணப்படும்:

**இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். (மத்தேயு 18:20)**

நண்பர்கள், சக வேலையாட்கள், அல்லது உறவினர்கள் உள்ளடக்கிய சிறு குழுக்களாலான ஜெபத்திற்காக வாரத்திற்கு நீங்கள் சந்தித்து கொள்ளலாம்.

## முழு கூட்ட ஜெபம்:

கூட்டுறவு ஜெபத்திற்கான நேரத்திற்கு முழு சபையும் கூட சேர்ந்து கொள்ளலாம்:

**அங்கே இவர்களெல்லாரும், ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். (அப்போஸ்தலர் 1:14)**

அப்போஸ்தலர் 12:5ல் பேதுரு சிறைச்சாலையில் இருந்த சமயத்தில் சபையினால் சஞ்சலமில்லாமல் பரிந்து பேசுதலில் ஈடுபட்டதை வெளிப்படுத்துகின்றது. நீங்கள் போதகராக இருப்பீர்களாயின் ஒத்துழைப்பிற்கான ஜெபத்தின் நேரத்தை திட்டமிடுதல் உங்களுடைய பொறுப்பாகும்.

## தனிப்பட்ட ஜெப கையேட்டை உருவாக்குதல்

உங்களுடைய பரிந்துபேசுதலை வழிநடத்துவதற்கு தனிப்பட்ட ஜெப கையேட்டை உருவாக்குதல் உதவியாய் இருக்கும். வித்தியாசமான பகுதிகளால் பிரிக்கப்பட்ட குறிப்புப்புத்தகத்தை பயன்படுத்துங்கள். நீங்கள் கீழ்வரும் பகுதிகளை கொண்டிருக்கலாம்:

-பரிந்துபேசுதலுக்கான ஜெபம் மற்றும் உபவாசத்திற்கான படிப்பு குறிப்புக்கள்.

-உங்களுடைய நகரம், மாவட்டம், நாடு: உங்களுடைய நகரம், மாவட்டம், நாடுகளை கொண்ட வரைப்படத்தை அவைகளின் மேல் ஜெபிக்கும்படியாக பெற்றுக்கொள்ளுங்கள். அரசியல், சமய அலுவலர்களின் பட்டியலை அவர்களின் பெயர்களிற்கு மேலாக ஜெபிப்பதற்கு பெற்றுக்கொள்ளுங்கள்.

-தனிப்பட்ட பரிந்துபேசுதல்: உங்களுடைய குடும்பம், நண்பர்கள் மற்றும் மற்றவர்களுடைய தனிப்பட்ட ஜெப தேவைகளை பட்டியல்படுத்தி ஒவ்வொரு நாளும் இவற்றிற்காக பரிந்து பேசுங்கள். பரிந்து பேசுதலின் ஊழியத்தில் உங்களை ஊக்கப்படுத்தும்பொருட்டு பதிலளிக்கப்பட்ட ஜெபத்தை பதிவு செய்யுங்கள்.

-உங்களுடைய சபை: உங்களுடைய சபையிற்கான அமைப்பு அட்டவணையை அல்லது தலைவர்களுக்கான பெயர் பட்டியலை பெற்றுக்கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் அவர்களுக்காக ஜெபியுங்கள். உங்களுடைய சபையின் ஒவ்வொரு அங்கத்துவர்களுக்காகவும் அவர்களின் பெயரால் ஜெபியுங்கள்.

-உங்களுடைய ஊழியம்: உங்களுடைய சொந்த தனிப்பட்ட ஊழியத்திற்காக பரிந்து பேசுங்கள். நீங்கள் வேதாகம வகுப்பில் போதித்தால், உங்களுடைய மாணவர்களுக்காக ஜெபியுங்கள். நீங்கள் ஒரு போதகரானால், உங்களுடைய கூட்டத்திலுள்ள ஒவ்வொரு நபருக்காகவும் அவர்களுடைய பெயரால் ஜெபியுங்கள். நீங்கள் ஒரு உறவினர் ஆயின், உங்களுடைய பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள் (உங்கள் ஊழியத்தில் பகுதியாய் இருப்பவர்கள்). நீங்கள் ஓர் ஊழியராகவும், நற்செய்தியாளராகவும் இருப்பீர் ஆயின், சுவிசேஷத்தின் கதவுகள் திறக்கப்பட ஜெபியுங்கள், உங்களுடைய மனமாற்றமடைந்தவர்கள், சீஷர்கள், சக ஊழியர்கள் ஆகியோருக்கு ஜெபியுங்கள்.

-சர்வதேச பரிந்துபேசுதல்: தேவனுடைய இராஜ்ஜியத்தின் விரிவாக்குதல் மற்றும் உலக ஜாதிகளுக்காக பரிந்து பேசுதலின் பகுதியை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். சர்வதேச அறுவடையநேர வலையமைப்பானது உலக நற்செய்தியில் நோக்கமாக கொண்டுள்ளது, நாம் எமது குறிக்கோளின் அனைத்து வல்லமையான தொடர்பையும் ஜெபத்தின் மூலமாக ஒன்றிணைக்கின்றோம். இதன் காரணமாக, சர்வதேச பரிந்து பேசுதலின் வழிகாட்டியாக கீழ்வரும் விபரங்களை நாம் கொடுக்கின்றோம்.

## சர்வதேச பரிந்துபேசுதல்

முழு சபை ஐக்கியத்தினால் அல்லது சிறு குழுக்களினால் அல்லது தனிப்பட்டவர்களினால் உபயோ-கிக்கக்கூடிய சர்வதேச பரிந்துபேசுதலிற்கான விசேட வழிகாட்டி இங்கு தரப்பட்டுள்ளது:

### துதி தேவனை செல்லுகின்றது: (10 நிமிடங்கள்)

நாம் தேவனுடைய வாசல்களில் துதியோடும், புகழ்ச்சியோடும் பிரவேசிக்கின்றோம்: சங்கீதம் 100:4

### உலகிற்கு பொதுவாக பரிந்து பேசுங்கள்: (10 நிமிடங்கள்)

நீங்கள் பரிந்து பேசுவதற்கு முன்னர், தனிப்பட்ட மனந்திரும்புதலுக்கான ஜெபத்தை ஜெபியுங்கள். பின் உலகின் பொதுவானதிற்கு ஜெபியுங்கள்..

-உலகத்திற்கூடான புதிய ஆவிக்குரிய பசியிற்காக.

-சர்வதேச பரிந்துபேசுதலுக்கான உலகலாவிய சேனையை தேவன் எழும்பும்படியாக.

-உலகளாவிய ரீதியில் அனைத்து சபைகளுக்குமான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும்.

-“அறுவடைக்கு வேலையாட்களை” தேவன் எழுப்பும்படியாக.

-சபை மற்றும் ஊழியங்களில் ஐக்கியம் ஒத்துழைப்பு காணும்படியாக.

-இழந்தவர்களை வெற்றிக்கொள்ளும்படியான எழும்புதலின் முத்திரைக்காகவும் அர்ப்பணிப்பிற்கா-கவும்

-சுவிசேஷத்தை பரப்புவதற்கு விசுவாசிகளினால் பொருளிய வளங்களை பரந்தளவில் உபயோகிப்ப-தற்காக. தேவையான நிதி கிடைக்கும்படியாகவும், நற்செய்தியாளர்களின் முயற்சியை நிதியளிக்க இயலுமை மற்றும் சித்தமுள்ளோரை எழுப்பும்படியாகவும் தேவனிடம் கேளுங்கள்.

-நற்செய்தியை பரப்புவதற்கான “பேச்சு அறிக்கைகளின் கதவுகள்” திறக்கும்படியாக (எபேசியர் 6:19)

-“மூடிய நாடுகளில்” சுவிசேஷம் திறக்கும்படியாக (2 தெசலோனிக்கேயர் 3:1)

-சுவிசேஷத்தை கேட்கும்போது அதை பெறும்படியாக (ரோமர் 15:30-31).

-சுவிசேஷத்தின் பரவுவதில் தாக்கம் செலுத்தும் பிரதான உலக காரியங்கள்.

-ஊழியம் மற்றும் நற்செய்தியின் கிரியைகளை அரசியல் தலைவர்களும், அரசாங்கங்களில் மையங்களும் பெற்றுக்கொள்ளும்படியாக.

-புதிய சபைகளையும், ஊழியத்தையும் விதைக்கும் வேலையாட்களுக்காக.

-ஊழியத்தினால் அல்லது கிறிஸ்துவிற்கான அர்ப்பணிப்பினால் துன்பப்படும் அல்லது சிறையில் வாடும் ஊழியர்களுக்காக.

-உலகத்திற்கூடாக நடைபெறும் வேதாகம மொழிபெயர்ப்பிற்காக.

-உலகத்திலுள்ள கிறிஸ்தவ தபால்வழி பயிற்சிகள், பயிற்சி நிலையங்கள், வேதாக கல்லூரிகள்

-தேசிய கிறிஸ்தவ வேலையாட்கள்.

-சிலுவை கலாச்சார மிஷனரி சேனைகளுக்காக.

-இளம் மக்களிடம் தேவனுடைய அசைவாட்டத்திற்காக. அவர்களே சபையின் எதிர்கால தலைவர்கள் ஆவார்கள்.

-உலகத்திலுள்ள கிராமங்கள் மற்றும் ஒவ்வொரு ஜாதிகளிலும் சரியான உபாயத்தின் வெளிப்பாடு அடையும்படியாக. இந்த பிரதேசத்தில் வேலை செய்வோருக்கு அதை வெளிப்படுத்தும்படியாக தேவனிடம் கேளுங்கள். ஆய்வு மற்றும் உபாய ஊழியத்தில் சம்பந்தப்படும் அமைப்புகளுக்காக ஜெபியுங்கள்.

-சாத்தானின் தாக்குதல்களிலிருந்தான வேலையாட்களின் பாதுகாப்பிற்காக. விசுவாசிகளுக்கும் ஜாதிகளுக்கும் எதிராக வரும் சாத்தானுடைய கட்டுக்களின் நடவடிக்கைகளுக்காக ஜெபியுங்கள். சுவிசேஷத்தை எதிர்போரிடமிருந்து விடுதலை பெறும்படிக்காக ஜெபியுங்கள் (ரோமர் 15:30-31; 2 தெசலோனிக்கேயர் 3:2)

-உலகரீதியான வேதாகம கண்ணோட்டம் விசுவாசிகளின் மத்தியில் பரவவும், தேவனுடைய திட்டத்தை பார்ப்பதை விட அதில் அவர்கள் சம்பந்தப்படவும் ஜெபியுங்கள்.

-சுவிசேஷத்தை பரவும் பொருட்டு பல்வேறுப்பட்ட தேசங்களில் வேலைசெய்யும் மதசார்பற்ற வேலை யாட்களுக்காக.

-உலகில் பல்வேறு இடங்களில் நிலைப்பெற்றுள்ள இராணுவ சேனைகளிலுள்ள விசுவாசிகளுக்காக. சுவிசேஷத்தை பரப்புவதற்கான வல்லமையுள்ள சேனைகளாக அவர்கள் இருக்கலாம்.

-சுவிசேஷத்தை பதிவு செய்தல், படம் எடுத்தல், ஒலி நாடாக்கள், கிறிஸ்தவ வானொலிகள் மற்றும் தொலைக்காட்சிகள் ஆகிய சமய ஊடகங்களின் வேலைகளுக்காக ஜெபியுங்கள்.

-சுவிசேஷத்தின் பரவுவதில் ஆதரவளிக்கும் பௌதீக மற்றும் மருத்துவத்தை உள்ளடக்கும் மருத்துவ, உதவி மற்றும் சமூக அமைப்புக்களின் வேலைகளுக்காக.

-மிஷனரிகளை கொண்டு பரந்து உலகில் பல்வேறு பாகங்களில் விநியோகிக்கும் மிஷனரி வான் அமைப்புக்கள் மற்றும் அவைகளின் அர்ப்பணிப்புள்ள விமானமோட்டிகளுக்காக.

-உலகிலுள்ள குடியேற்றவாசிகள் மற்றும் அகதிகளுக்கான வேலைகளுக்கு

-ஜாதிகளிலும், பிரதேசங்களிலும் செல்வாக்குசெலுத்தும் சாத்தானின் ஆவிக்குரிய வல்லமையின் கட்டுக்களுக்காக. அந்த வல்லமையானது தானியேலின் காலத்தில் ஈரானின் மேல் அதிகாரம் கொண்ட இளவரசன் மேல் இருந்ததாக காட்டப்பட்டுள்ளது. இந்த வல்லமையானது ஏன் சில தேசங்கள் மற்றவைகளை விட சுவிசேஷத்தை அதிகம் பெறுகின்றனர் என விபரிக்கின்றது. குறிப்பிட்ட ஆவிகள் பல்வேறுப்பட்ட பிரதேசங்களில் செயற்படுகின்றன. இந்த பிரதேசத்தில் அவைகள் கட்டப்படும்வரை சுவிசேஷத்தை அடைய முடியாது.

## உலகத்தின் ஓர் பகுதியிற்காக பரிந்து பேசுதல்: (10 நிமிடங்கள்)

ஜாதிகளுக்காக நீங்கள் ஜெபிக்கும்போது ஓர் உலக வரைப்படத்தை பயன்படுத்துங்கள். ஒவ்வொரு தேசங்களை குறித்தும் ஜெபிப்பதற்கான சில குறிப்பிட்ட காரியங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

-நடைமுறை சம்பவங்கள். நாடுகளின் நடைமுறை செய்தி சம்பவங்களை அவதானிப்பதினால் அல்லது அங்குள்ள கிறிஸ்தவ வேலையாட்களோடு தொடர்பை ஏற்படுத்துவதின் மூலம் குறிப்பிட்ட ஜெப தேவைகளுக்கு பெற கவனமாயிருங்கள்.

-ஜாதிகளின் சபைகளுக்காக.

-இந்த தேசங்களிலுள்ள ஆவிக்குரிய அறுவடை களத்திலுள்ள வேலையாட்களுக்காக: சபை-களை நிறுவுவோர், ஜாதியினரின் வேலையாட்கள், பயிற்சி நிலையங்கள், மினஷரிகள், வேதாம மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோர்...

-இந்த ஜாதிகளிலுள்ள ஒவ்வொரு விசுவாசிகளுக்காகவும்.

-ஜாதிகளிலுள்ள சந்திக்கப்படாத மக்களுக்காகவும்.

-இந்த ஜாதிகளில் செயற்படும் சாத்தானின் வல்லமையுள்ள கட்டுகளுக்காக: சுவிசேஷத்தின் பரவு-தலை தடுப்பதற்கு அல்லது ஜாதிகளின் நற்செய்திகளின் முயற்சிகளை மூடுவதற்கு இந்த சேனைகள் வரலாம்.

-ஒவ்வொரு சமூகத்திலும் ஜாதிகளுக்கான நிலையையும், தனிப்பட்டவர்களின் எண்ணங்களை காட்டும் ஏழு அடிப்படையான பகுதிகள் காணப்படுகின்றன. இவைகள் வீடு மற்றும் குடும்பங்கள், சபைகள், கல்வி, கலை மற்றும் பொழுதுபோக்குகள், ஊடகம், அரசு மற்றும் வியாபாரம் ஆகும். இந்த ஒவ்வொரு பகுதிகளுக்கும் பரிந்து பேசுங்கள்.

## குறிப்பிட்ட மிஷனரி அல்லது அமைப்பிற்கு பரிந்து பேசுங்கள்: (10 நிமிடங்கள்)

மிஷனரி அல்லது அமைப்புக்களில் தொடர்பில் இருப்பதின் மூலம் ஜெபத்திற்கான குறிப்பிட்ட தேவைகளுக்கு நீங்கள் அவதானமாக இருக்க முடியும். அவர்களுடைய செய்தியறிக்கைகள் அல்லது ஜெப விண்ணப்பங்கள் பெறுவதற்காக உங்களுடைய பெயரை அவர்கள் பட்டியலில் இட்டுள்ளீர்களா?

## சந்திக்கப்படாத மக்கள் குழுவிற்கான ஜெபம்: (10 நிமிடங்கள்)

சந்திக்கப்படாத ஐந்து பிரதான மக்கள் குழுக்களானவர்கள் பௌத்தர்கள், இந்துக்கள், ஆதிவாசி மக்கள், முஸ்லிம்கள் மற்றும் சீனர்கள் ஆவார்கள்.

-இந்த குழுக்களுக்கான ஆவிக்குரிய பசியிற்காக ஜெபியுங்கள்.
-அவர்களோடு சுவிசேஷத்தை பகிர்வதற்கான வேலையாட்களுக்காக ஜெபியுங்கள்.
-ஒவ்வொரு தனிப்பட்ட குழுவிற்கும் சரியான உபாயம் அடைவதற்கான வெளிப்பாட்டிற்காக ஜெபியுங்கள்.
-இந்த மக்களை அடைவதற்கு ஏற்கனவே முயற்சிப்போருக்காக ஜெபியுங்கள்.

## தனிப்பட்ட ஜெபம்: (10 நிமிடங்கள்)

உலகத்தின் தொடர்பாக உங்களின் சொந்த தனிப்பட்ட தேவைகளை கவனியுங்கள். உங்களுடைய தனிப்பட்ட தேவைகள் தேவனுடைய பூலோக குறிக்கோளிலும், உங்களுடைய பகுதியிற்குள்ளும் எவ்வாறு தொடர்புபட்டுள்ளது? உங்களுடைய தனிப்பட்ட கரிசனைகள் கூட அதிகம் ஜாதிகளுக்கான தேவனுடைய திட்டத்தில் தொடர்புபட்டிருக்கலாம். உலகத்திலுள்ள தேசங்களில் ராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தால் அடைவதற்கு உங்களுடைய அர்ப்பணிப்பின் பகுதியை நிறைவேற்றுவதற்கான வழிகளை தேவன் எதிர்பார்க்கின்றார். இதை செய்வதற்கு உங்களை நீங்கள் எவ்வாறு அதிகமாக ஆயத்தப்படுத்துவீர்கள்? இப்பொழுது நீங்கள் எவ்வாறு இதை தொடங்கலாம்? உலகத்தின் தரிசனத்திற்காக உங்கள் தனிபட்பட நேரத்தையும், நிதியையும் எவ்வாறு அதிகமாக கொடுக்கலாம்?

# மேற்கொள்ளப்படவேண்டிய பிரச்சினைகள்

வல்லமையாக ஜெபம் பண்ணும் ஒவ்வொருவரும் மேற்கொள்ளப்படவேண்டிய பிரச்சினைகள் உள்ளன. இந்த சவால்களை கைப்பற்றுவதே பரிந்து பேசுதலின் ஒரு பகுதியாக இருக்கின்றது:

> *"ஜெபத்தில் முயற்சி செய்தல் என்பது ஜெபத்தில் பின்வாங்குதலில் தடை பண்ணுவதற்கூடான தளம்புதல் அல்லது விடாமுயற்சியான ஜெபத்தை தொடருவதிலிருந்து முற்றிலுமாக கூட எம்மை தவிர்த்தல் ஆகும். இதன் அர்த்தமானது ஜெபத்தில் அனைத்து நேரங்களிலும் நாம் சுறுசுறுப்பின்மையை கவனிக்கும் நிலை ஆகும். இதை தீர்ப்பதற்கு நாம் ஜெபத்தின் ஆவியிற்குள் செல்ல வேண்டும்."*
> *-Dr. O. Hallesby*

இதை தீர்ப்பதற்கு உங்களுக்கு உதவும் பொருட்டாக "ஜெபத்தின் ஆவியிற்கூடாக" (பரிசுத்த ஆவி) தேவனுடைய முகத்திற்கு உங்களுடைய பிரச்சினையை எடுத்து செல்லுங்கள். நீங்கள் முகங் கொடுக்கும் பொதுவாக பிரச்சினைகள் இங்கு தரப்பட்டுள்ளன:

## நேரம் இன்மை:

நாம் உண்மையாகவே செய்ய வேண்டிய காரியங்களுக்கு நேரத்தை காண்கின்றோம். நேரம் இன்மைக்கு மன்னிப்பு கொடுக்க முடியாது. அதிகம் வேலையுள்ள நீங்களே அதிகம் பரிந்து பேசுதல் வேண்டும். ஜெபத்திற்காக ஒரு நேரத்தை ஒதுக்குங்கள் பின் அந்த நேரத்தில் எதையும் தலையிட அனுமதிக்க வேண்டாம். மற்றவர்கள் செலவிடுவதில் உங்கள் ஜெப நேரத்தை செலவிட அடிப்படையாக

வைக்க வேண்டாம் ஏனென்றால் உங்களுடைய ஜெபத்திற்கான பொருளின் அடிப்படையில் உங்களுக்கு அதிகம் அல்லது குறைந்த நேரமே உள்ளது பரிந்து பேசுதல் வல்லமையாக இருப்பதற்கு நீண்டதாக இருத்தல் அவசியம் இல்லை. சிலுவையில் கள்ளனின் வல்லமையான ஜெபத்தை கவனியுங்கள் ("உம்முடைய இராஜ்ஜியம் வரும் போது என்னையும் நினைத்துக் கொள்ளும்") அல்லது பரிசேயனுடைய நீண்ட, சுய நீதிக்கான ஜெபத்தின் பகிரங்கமான கருணையிற்கான வேண்டு கோள். ("தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்")

### கவனச்சிதறல்:

பரிந்துபேசுதலின் போது இடைமறிப்பவற்றை குறைக்க முயற்சி செய்யுங்கள். உங்களுடைய துணை, காரியதரிசி, அல்லது நண்பரிடம் இந்த நேரத்தின் போது தொந்திரவு செய்ய வேண்டாம் என ஆலோசனை கொடுங்கள். உங்களிடம் தொலைபேசி இருந்தால் மற்றவர்கள் செய்தியை எடுக்கட்டும், அல்லது அதை துண்டித்து விடுங்கள் அல்லது பதில் கொடுக்கும் இயந்திரத்தை உபயோகியுங்கள். வானொலியோ அல்லது தொலைக்காட்சியோ பயன்படுத்தும் இடத்தில் ஜெபம் செய்ய வேண்டாம். மற்றவர்களுடைய சம்பாஷனை அல்லது பக்கத்திலுள்ள வாகனங்களின் தெந்திரவூட்டும் சத்தங்களை மெல்லிய கிறிஸ்தவ பின்னணி இசையானது தவிர்க்க செய்யலாம்.

### களைப்பு:

ஜெப நேரத்தில் சோர்வையோ அல்லது தூக்கத்தையோ நீங்கள் வளர்த்தால், ஜெபம் பண்ணும் போது நடக்க முயற்சி செய்யுங்கள் அல்லது சத்தமாக ஜெபம் செய்யுங்கள்.

### வாஞ்சை இன்மை:

பரிந்துபேசுதலின் ஊழியத்திற்கான வாஞ்சையானது முறைப்படியாக அபிவிருத்த செய்யப்பட வேண்டும். உங்களுக்கு விருப்பமான "உணர்வு" இருக்குமோ அல்லது இல்லையோ அதை ஒழுங்கு முறையாக செய்வதிலிருந்து ஒழுங்கானது ஆரம்பமாகின்றது. எமது முழு கிறிஸ்தவ அனுபவமானது விசுவாசத்தின் அடிப்படையில் இருத்தல் வேண்டும், உணர்வில் அல்ல. உங்களுடைய வாழ்விலும் மற்றவர்களுக்காக நீங்கள் பரிந்துபேதுதலின் போதான அவர்களின் வாழ்விலும், பரிந்து பேசுதலின் விளைவை நீங்கள் காண ஆரம்பிக்கும்போது உங்களுடைய ஜெப நேரமானது ஒழுங்குமுறையிலிருந்து வெளிச்சத்திற்கு மாற்றப்படும்.

> *"உங்களுக்கான வாஞ்சையை யாரிலிருந்து யாரால் தர இயலும்? தேவனே. நிறைவேறாமல் இருப்பதற்காக அவர் உங்களுக்கு இதை கொடுக்கின்றாரா? அது முடியாத காரியம். அந்த மிகப்பெரிதான காரியத்தை உங்களுக்கு கொடுக்கும் நோக்கத்திற்காக ஏதோவொன்றிற்கான வாஞ்சையை அவர் உங்களினுள் புதைக்கின்றார்; நீங்கள் சரியான வழியில் அதை கேட்டால் நிச்சயமாக அதை அவர் உங்களுக்கு தருவார்... அத்தோடு உங்கள் விண்ணப்பங்களை கேட்பதற்கு அவர் உங்களை பங்கு கொள்ள செய்கின்றார்." -Jean-Nicholas Grou*

## ஆரம்பத்தின் முடிவு

பரிந்துபேசுதலிற்கான படிப்பின் இறுதியிற்கு நாம் வந்துள்ளோம். எவ்வாறாயினும் உண்மையிலேயே இது முடிவு அல்ல, ஆனால் ஆரம்பம் ஆகும். பரிந்துபேசுதல் என்னும் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள அதிகம் வல்லமையுள்ள ஆவிக்குரிய வளத்தை நீங்கள் பெற்றுக்கொண்டுள்ளீர்கள். பரிந்து

பேசுதலிற்கூடாக, உலகத்தின் எவ்விடத்திலும் நீங்கள் ஆவியில் செல்லலாம்.

உங்களுடைய ஜெபமானது சந்திக்கப்படாத தேசங்களை ஊடுருவிச் சென்று, புவியியல், கலாச்சார மற்றும் அரசியல் எல்லைகளை கடந்து செல்லும். நீங்கள் முழு ஜாதியிற்கும், தனிப்பட்ட நபருக்குமான தலைவிதியை தாக்கமுற செய்வீர்கள். நீங்கள் பொதுவாக ஜீவியத்தையும், மனிதர்களுடைய ஆத்து மாக்களையும் காக்க உதவி புரிவீர்கள்.

நீங்கள் பரிந்து பேசுதலிற்கூடாக தேவனோடு நெருங்கிய உறவில் சேர்ந்துள்ளீர்கள். நீங்கள் இதை அறிந்து கொண்டு நம்பிக்கையுடன் ஜெபம் செய்யலாம்:

> **நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும், நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும் என்று சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார். (ஏசாயா 14:24)**
>
> **தேசமனைத்தின்மேலும் நிர்ணயிக்கப்பட்ட யோசனை இதுவே, சகல ஜாதிகள்மேலும் நீட்டப்பட்டிருக்கிற கையும் இதுவே என்றார்.**
>
> **சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்? (ஏசாயா 14:26-27)**

சேனைகளின் கர்த்தரிடம் ஓர் நோக்கம் உள்ளது, உலகத்தின், மாம்சத்தின், பிசாசின், நரகத்தின் அல்லது சாத்தானின் எந்தவொரு சேனைகளினாலும் அதை தடை பண்ண முடியாது. பரிந்து பேசுதலின் ஊழியத்திற்கூடான தெய்வீக குறிக்கோளின் ஒரு பகுதியாக நீங்கள் இருக்கின்றீர்கள். கனோன் லிட்டன் என்பவரின் பரிந்து பேசுதலுக்கான இந்த வல்லமையுள்ள வரைலிலக்கணத்தோடு நாம் முடிக்கின்றோம்:

> *பரிந்து பேசுதல் வெறுமனே பழக்கமாக மந்தமான இயந்திரமயமானதாக உள்ளதா? இந்த வேண்டுதலுக்கு யாரால் பதிலளிக்க முடியும்.*
>
> *அவர்கள் சில வேளைகளில் யாக்கோபைப்போல கண்ணுக்கு புலப்படாத வல்லமையோடு போராடி ஜெபிக்க முற்பட்டாலும், உண்மையற்ற வாழ்க்கை, அல்லது இரவில் தாமதமாகும் பல மணித்தியாலங்கள் ஒரு நாளை வீணடித்துவிடுகின்றது. சில நேரங்களில் பவுலைப் போன்று பொதுவான போராட்ட ஜெபத்தை பார்க்கின்றனர்.*
>
> *அவர்கள் ஜெபிக்கின்றபோது தங்கள் கண்களை கெத்சமனேயில் பரிந்துபேசியவருடன் இணைத்து, வேதனையுடன் தரையில் விழும் இரத்தத்தின் தியாக துளிகளின் மீது வைக்க வேண்டும்.*
>
> *வெற்றிகரமான பரிந்து பேசுதலின் சாரம்சம்.....கனவு காணுதல் அல்ல, ஆனால் அது முடிவில்லா வேலையாக இருக்கின்றது. விஷேடமாக ஜெபத்தின் மூலம் தேவ இராஜ்ஜியத்தை பலவந்தமாய் எடுத்துக்கொள்வதாக அமைகின்றது.*
> *-கனோன் லிட்டன்.*

இந்த அர்ப்பணிப்பை செய்வதற்கு நீங்கள் ஆயத்தமா?

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

......................................................................................................................................................

......................................................................................................................................................

2. உங்களுடைய தனிப்பட்ட ஜெப திட்டத்தை எழுதுங்கள்? எப்பொழுது ஆரம்பிப்பீர்கள்? ஒவ்வொரு நாளும் ஜெபத்திற்கான எந்த நேரத்தை ஒதுக்குவீர்கள்? எங்கு ஜெபிப்பீர்கள்?

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

3. இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட ஜெபத்தை ஆரம்பித்து தொடர்ந்து செல்லுவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பிரச்சினைகள் என்ன?

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

4. உங்களுடைய தனிப்பட்ட ஜெப கையேட்டை உருவாக்கியுள்ளீர்களா?.......... இல்லையாயின், இந்த அதிகாரத்தின் பகுதியான “மேலதிக படிப்பினைக்கு” பகுதியில் பார்க்க.

5. பரிந்து பேசுதலுக்கான தினமும் ஓர் நேரத்தை உங்களில் நீங்கள் அர்ப்பணித்துள்ளீர்களா?.......

6. நீங்கள் போதகர் அல்லது ஆசிரியர் அல்லது மற்ற குழு தலைவராயிருந்தால், உங்கள் கூட்டத்தில் உள்ளடக்கப்படும் ஐக்கிய ஜெபத்திலுள்ள மாணவர்கள், குழு அங்கத்தவர் களுக்கான ஜெப திட்டத்தை எழுதுங்கள்.

......................................................................................................................................................

......................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

உங்களுடைய தனிப்பட்ட ஜெப கையேட்டை உருவாக்க உதவும் வழிகாட்டல்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

### பகுதி ஒன்று: படிப்பின் குறிப்புக்கள்

பரிந்து பேசுதலில் உங்களுடைய தனிப்பட்ட படிப்பின் குறிப்புக்களை உட்படுத்துங்கள். இந்த பகுதிகளில் உபவாசம் இருங்கள். ஆகவே நீங்கள் அடிக்கடி அதை மீளாய்வு செய்யலாம்.

### பகுதி இரண்டு: நகரம், மாவட்டம், தேசம்

உங்கள் நகரம், மாவட்டம் மற்றும் ஜாதிகளுக்கான வரைப்படங்களை பெற்று அவற்றிற்கு மேலாக ஜெபியுங்கள். அரச மற்றும் சமய அலுவலர்களின் பட்டியலை பெற்று, அவர்களின் பெயரின் படி ஜெபியுங்கள். உங்களுடைய அயலவர்கள், நகரம், மாவட்டம் மற்றும் ஜாதிகளின் “ஆவிக்குரிய வரைப்படத்தில்” ஊடாக பெற்ற தகவல்களை பதியுங்கள்.

### பகுதி மூன்று: தனிப்பட்ட பரிந்துபேசுதல்

**தனிப்பட்ட தேவைகள்:** உங்களுடைய குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் மற்றவர்களுக்காக தனிப்பட்ட ஜெப தேவைகளை பட்டியலிடுங்கள். பின் ஒவ்வொரு நாளும் இதற்காக பரிந்து பேசுங்கள். பரிந்து பேசுதலின் ஊழியத்தில் உங்களை உற்சாகப்படுத்தும்பொருட்டு ஜெபத்தின் பதில்களை பதிவு செய்யுங்கள்.

**உங்களுடைய சபை:** உங்களுடைய சபைகளுக்கான அமைப்பு அட்டவணையை பெற்றுக் கொள்ளுங்கள் அல்லது தலைவர்களின் பெயர்களை பட்டியலிட்டு, ஒவ்வொரு நாளும் அவர்களுக்கா ஜெபியுங்கள். உங்களுடைய சபையின் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்காகவும் அவர்களுடைய பெயரால் ஜெபம் செய்யுங்கள்.

**உங்களுடைய ஊழியம்:** உங்களுடைய சொந்த தனிப்பட்ட ஊழியத்திற்காக பரிந்து பேசுங்கள். நீங்கள் வேதாகம வகுப்பில் போதித்தால், உங்களுடைய மாணவர்களுக்காக ஜெபியுங்கள். நீங்கள் போதகரானால், உங்களுடைய கூட்டத்திலுள்ள ஒவ்வொரு நபருக்காகவும் பெயரால் ஜெபியுங்கள். நீங்கள் உறவினராயின், உங்களுடைய பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். (உங்களுடைய ஊழியத்தில் ஓர் பகுதியாய் இருப்போர்). நீங்கள் மிஷனரியாகவும், நற்செய்தியாளராகவும் இருப்பீராயின், சுவிசேஷத்தின் வாசல் திறக்கப்படவும், உங்களுடைய மனமாற்றம் பெற்றோருக்காகவும், சீஷர்களுக்காகவும் சக ஊழியர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

### பகுதி நான்கு: சர்வதேச பரிந்துபேசுதல்

இந்த பகுதியில், இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட சர்வதேச பரிந்துபேசுதலின் வழிகாட்டலின் பிரதியை வைக்க. இந்த பகுதியில் உள்ளடக்குவதற்கு பல்வேறுப்பட்ட ஜாதிகளின் வரைப்படங்களை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

# பிற்சேர்க்கைகள்

## பிற்சேர்க்கை ஒன்று: வேதாகமத்திலுள்ள ஜெபத்திற்கான குறிப்புக்கள்

இயேசுவே மாபெரும் பரிந்துபேசுதலின் ஜெபத்தின் மாதிரி என இந்த பாடத்தில் நீங்கள் கற்றீர்கள். வேதாகமத்தில் வல்லமையுள்ள பரிந்துபேசுதலுக்கான வேறு அநேக உதாரணங்கள் காணப்படுகின்றன. கீழ்வரும் பட்டியலானது வேதாகமத்திலுள்ள அனைத்து ஜெபத்திற்கான வசனங்களையும் கொண்டுள்ளது. இந்த ஜெபங்களை படிப்பதின் மூலம் அவைகளை ஜெபிப்போரின் வாழ்க்கையிலும் பரிந்து பேசுதலின் உங்கள் அறிவை வளர்க்க இந்த பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை உபயோகித்து படியுங்கள்.

### பழைய ஏற்பாட்டின் ஜெபம்

**ஆதியாகமம்:**

ஜெபம் வரலாறு ஆரம்பித்தல்: 4:26
ஜெபம் மற்றும் ஆவிக்குரிய செயற்பாடு: 5:21-24
ஜெபமும் பலிபீடமும்: 12-13
சுதந்திரவாளியின் ஜெபம்: 15
ஜெபம், அழுகையின் ஓர் பாஷை: 16
ஜெபம் மற்றும் வெளிப்படுத்தல்: 17
துன்மார்க்க நகரத்திற்கான ஜெபம்: 18-19
வாதையிற்கு பின்னரான ஜெபம்: 20
கீழ்ப்படிதலிலான ஜெபம்: 22
மணவாளனின் ஜெபம்: 24
மலடியான மனைவிக்கான ஜெபம்: 25:19-23
காரியங்களை மாற்றும் ஜெபம்: 26
உறுதிமொழியான ஜெபம்: 28
தவறான சகோதரனுக்கான ஜெபம்: 32
ஜெபம், மறைக்கப்பட்ட அக்கினி: 39-41; 45:5-8; 50:20,24
கோத்திரங்களின் மேலான ஆசீர்வாதத்தின் ஜெபம்: 48-49

**யாத்திராகமம்:**

பெருமூச்சினால் வெளிப்படுத்தப்பட்ட ஜெபம்: 1-2
பேச்சுவடிவிலான ஜெபம்: 3-4
குற்றஞ்சாட்டுவதின் போலான ஜெபம்: 5-7
சர்வவல்லமையுள்ள தேவனுடனான உடன்படிக்கையின் ஜெபம்: 8-10
துதியின் ஜெபம்: 15
பிராண மோச நேரத்திலான ஜெபம்: 17
தேவையின்போதான ஜெபம்: 22:22-24
நியாயத்தீர்ப்பின் தாமதத்திற்கான ஜெபம்: 32
இஸ்ரவேலருக்காக மோசேயின் முதலாவது ஜெபம்: 32:9-14

மோசேயினுடைய இரண்டாவது ஜெபம்: 32:30-34
மோசேயினுடைய மூன்றாவது ஜெபம்: 33:12-23
ஜெபம் மற்றும் உறுமாறுதல்: 34

**எண்ணாகமம்:**

ஆசீர்வதிக்கின்ற ஜெபம்: 6:24-27
காத்தல் மற்றும் பாதுகாப்பிற்கான ஜெபம்: 10:35-36
நியாயத்தீர்ப்பை அகற்றும்படியிற்கான ஜெபம்: 11:1-2
ஊக்கமிழந்த இருதயத்திற்கான ஜெபம்: 11:10-35
தாழ்மையான மனிதனின் ஜெபம்: 12
தெய்வீக கனத்திற்கு மேலான ஜெபம்:14
கலகத்திற்கு எதிரான தெய்வீக கிரியையிற்கான ஜெபம்: 16
மரணத்திலிருந்தான விடுதலைக்காக ஜெபம்: 21
ஜெபமும் தீர்க்கதரிசனமும்: 23-24
புதிய தலைவருக்கான ஜெபம்: 27

**உபாகமம்:**

சிறப்புரிமை குறிக்கோளுக்கான ஜெபம்: 3:23-29
அருகில் இருப்பதற்கான ஜெபம்: 4:7
நியாயத்தீர்ப்பின் இருப்பிற்கான ஜெபம்: 9:20,26-29
ஆசீர்வாதத்திற்கான ஜெபம்: 21:6-9
நன்றிசெலுத்தலுக்கான ஜெபம்: 26
பாட்டைப்போன்ற ஜெபம்: 32:33

**யோசுவா**:

சவாலைப்போன்றதான ஜெபம்: 5:13-15
தேவன் பதில் அளிக்காத ஜெபம்: 7
கொடிய விளைவுகளினூடான புறக்கணிக்கப்பட்ட ஜெபம்: 9:14
அற்புதத்தை உருவாக்கும் ஜெபம்: 10

**நியாயாதிபதிகள்:**

வழிகாட்டலுக்கான ஜெபம்:1
யுத்தத்தின் நேரத்திலான ஜெபம்: 4-5
அடையாளங்களிலான ஜெபம்: 6
பெருந்துன்பத்திலான ஜெபம்: 10:10-16
ஒப்பந்தத்தைபோலான ஜெபம்: 11:30-40
பிறக்கப்படாத குழந்தைக்கான ஜெபம்: 13
மரணத்தின் விளிம்பிலான ஜெபம்: 16:28-31
நேரடியாக பதிலளிக்கப்பட்ட ஜெபம்: 20:23-28
காணாமல் போன கோத்திரத்திற்கான ஜெபம்: 21:2-3

**1 சாமுவேல்:**

வார்த்தைகள் இல்லாத ஜெபம்: 1
மேலோட்டமான தீர்க்கதரிசன ஜெபம்: 2:1-10
பரிசுத்த ஸ்தலத்தில் ஜெபம்: 3
ஜாதியின் குழப்பத்திற்கு ஜெபம்: 7
ராஜாவிற்கான ஜெபம்: 8
ஏற்படுத்துவதைப்போன்ற ஜெபம்: 12
துயரமுள்ள ராஜாவின் ஜெபம்: 14
மனம் நொந்த இருதயத்தின் ஜெபம்: 15:11
மெல்லிய சின்ன சத்தத்துடனான ஜெபம்: 16:1-12
ஊக்கத்தின் இரகசியமான ஜெபம்: 17
வேண்டுக்கோளான ஜெபம்: 23
செவிட்டு காதிற்கான ஜெபம்: 28:7
யுத்த சேதத்தை மீளமைத்தலிற்கான ஜெபம்: 30

**2 சாமுவேல்:**

வேண்டுக்கோளான ஜெபம்: 2:1
வெற்றியின் அடையாளத்திற்கான ஜெபம்: 5:19-25
வீடு மற்றும் இராஜ்ஜியத்திற்கு மேலான ஆசீர்வாதத்தின் ஜெபம்: 7:18-29
நோயாளியான குழந்தைக்கான ஜெபம்: 12
பாசாங்கான ஜெபம்: 5:7-9
தாக்குதலை உணர்ந்ததான ஜெபம்: 21:1-12
சங்கீதம் போலான ஜெபம்: 22
பெருமையை அறிக்கையிடுவதிலாலான ஜெபம்: 24:10-17

**1 இராஜாக்கள்:**

ஞான இருதயத்திற்கான ஜெபம்: 3
அர்ப்பணிப்பின் ஜெபம்: 8:12-61
மரத்துப்போன கையிற்கான ஜெபம்: 13:6
மூடப்பட்ட வானத்திற்கான ஜெபம்: 17
இறந்த மகனின் உயிர்த்தெழுதலிற்கான ஜெபம்: 17:20-24
தெய்வீக கனத்திற்கான ஜெபம்: 18:16-41
ஜெபம் மற்றும் விடாமுயற்சி: 18:45
மரணத்திற்கான ஜெபம்: 19

**2 இராஜாக்கள்:**

இறந்த குழந்தையிற்கான ஜெபம்: 4:32-37
தரிசனத்திற்கான ஜெபம்: 6:13-17

எதிரியின் தோற்றலிலிருந்து விடுதலையிற்கான ஜெபம்: 19
நீண்ட வாழ்விற்கான ஜெபம்: 20:1-11

**1 நாளாகமம்:**

ஆவியிற்குரிய வளத்திற்கான ஜெபம்: 4:9-10
நம்பிக்கையோடான ஜெபம்: 5:20
பயத்துடனான ஜெபம்: 13:12
உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளுவதிற்கான ஜெபம்: 17:16-27
அக்கினியினால் பதிலளிக்கப்பட்ட ஜெபம்: 21
காவலரை போன்றதான ஜெபம்: 23:30
ஜெபமும் கொடுத்தலும்: 29:10-19

**2 நாளாகமம்:**

தேசிய அபாயத்திலிருக்கும்போதான ஜெபம்: 14:11
ஜெபமும் மீளமைத்தலும்: 15
ஜெபமும், வரலாற்றிற்கு முறையிடுதலும்: 20:3-13
வருத்தத்திலான ஜெபம்: 33:13

**எஸ்றா:**

நன்றியிற்கான ஜெபம்: 7:27-28
உபவாசத்திற்கான ஜெபம்: 8:21-23
ஜெபமும் அறிக்கையிடுதலும்: 9:5-10:4

**நெகேமியா:**

கிலேசிதத்துடனான ஜெபம்: 1:4-11
கடினமான சூழ்நிலையின் ஜெபம்: 2:4
நிந்தித்தலிலிருந்தான விடுதலையிற்கான ஜெபம்: 4:1-6
கோபத்திற்கு மேலான ஜாமக்காரரான ஜெபம்: 4:7-9
ஜெபமும், மீள் கட்டுதலும்: 5
சலித்துபோகுதலிற்கு எதிரான ஜெபம்: 6:9-14
ஜெபமும் வசனமும்: 8:1-13
ஜெபமும் தேவனுடைய நன்மையும்: 9
ஞாபகத்திற்கான ஜெபம்: 13:14,22,29,31

**யோபு:**

சகிப்புத்தன்மையான ஜெபம்: 1:20-22
அனுதாபத்திற்கான ஜெபம்: 6:8-7; 7:17-21

நீதியிற்கான ஜெபம்: 9
அநீதியிற்கு எதிரான யோபின் ஜெபம்: 10
ஒழுக்கமின்மையின் வெளிச்சத்திற்கான ஜெபம்: 14:13-22
ஜெபமும் லாபமும்: 21:14-34
ஜெபமும் காரணமும்: 23
சுழல்காற்றினால் பதிலளிக்கப்பட்ட ஜெபம்: 38
அறிக்கையிடுவதிலாலான ஜெபம்: 40:3-5; 42:1-6
பரிந்து பேசுதலுக்கான ஜெபம்: 42:7-10

**சங்கீதம்:**

சத்துருக்களிற்கான ஜெபம்: 3
பரிசுத்தத்திற்கான ஜெபம்: 4
காலை நேரத்திற்கான ஜெபம்: 5
தெய்வீக கிரியைகளுக்கான ஜெபம்: 7
தெய்வீக கிரியைகளுக்கான துதியிலான ஜெபம்: 8
இப்போதும், பின்னருக்குமான பாதுகாத்தலின் ஜெபம்: 16
சிலுவையின் ஜெபம்: 22
மேய்ப்பனின் கவனிப்பிற்கான ஜெபம்: 23
தெய்வீக மகிமையை வெளிப்படுத்தலுக்கான ஜெபம்: 24
தேவனோடு மேல்நோக்கியதான ஜெபம்: 25
விசுவாசித்தலிலான இருதயத்தின் ஜெபம்: 27
கிறிஸ்துவின் அவரோக ஜெபம்: 31
வருத்தத்துடனான ஆன்மாவின் ஜெபம்: 32
எதிரிகளுக்கு எதிரான பாதுகாப்பின் ஜெபம்: 35
அன்பான இரக்கத்துடனான துதியின் ஜெபம்: 36
யாத்திரையின் ஜெபம்: 39,90,91
ஜெபமும் அதன் நிறைவேறுதலும்: 40
ஆழமான துயரத்திலான ஜெபம்: 41
நம்பிக்கையின் வாசலிலான ஜெபம்: 42-43
தெய்வீக உதவியிற்கான ஜெபம்: 44
அடைக்கலத்திற்கான ஜெபம்: 46
உடைந்த இருதயத்தின் ஜெபம்: 51
அனைத்து நேரத்திலுமான ஜெபம்: 55
துயரத்திலான ஜெபம்: 57
நம்பிக்கையிலான ஜெபம்: 71
தேவனுடைய தனக்கான ஜெபம்: 73
தேவனுடைய மேன்மையிற்கான துதியின் ஜெபம்: 96
சோதனைகளிலிருந்து தப்பிப்பதற்கான ஜெபம்: 102-103,105
ஞாபகத்திற்கான ஜெபம்: 106
கடலில் தத்தளிப்போருக்கான ஜெபம்: 107
ஜெபம் மற்றும் வசனத்திலான இணக்கம்: 19,119
தேடுதலிலான இருதயத்தின் ஜெபம்: 139

**நீதிமொழிகள்:**

அறிவின் காரணிகளை கொண்டு இப்புத்தகமானது ஜெபத்தை நோக்குகின்றது.

**பிரசங்கி:**

ஜெபம் மற்றும் ஊழ்வினையை குறித்து இப்புத்தகம் கலந்துரையாடுகின்றது.

**உன்னதப்பாட்டு:**

ஜெப ரகசியங்கள்.

**ஏசாயா:**

தேவன் கேட்காத ஜெபம்: 1:15; 16:12
ஜெபமும் சுத்திகரிப்பும்: 6
அடையாளத்திற்கான ஜெபம்: 7:11
உயர்ந்ததற்கான ஜெபம்: 12
வெல்லும் துதியின் ஜெபம்: 25
சமாதானத்திற்கான ஜெபம்: 26
ஜெபமும் நம்பிக்கையும்: 41
ஜெபமும் கிரியையும்: 55
அநேகருக்கு பிரதித்தியில்லாத ஜெபம்: 59
தெய்வீக வல்லமையை வெளிப்படுத்துவதற்கான ஜெபம்: 63-64

**எரேமியா:**

இயலுமையை அறிக்கையிடும் ஜெபம்: 1
பின்னடைவுக்கான முணுமுணுக்கும் ஜெபம்: 2-3
புகார் போன்றதான ஜெபம்: 4:10-31
கலகத்திற்கு மேலான புலம்பலில் ஜெபம்: 5
சிறைச்சாலையிலிருந்து ஜெபம்: 6
ஜெப தடை: 7:16
நீதியிற்கான ஜெபம்: 10:23-25
குழப்பத்தின் ஜெபம்: 12:1-4
பாவம் மற்றும் வரட்சியிலிருந்தான விடுதலையிற்கான ஜெபம்: 14:7-22
தெய்வீக பழிவாங்குதலுக்கான ஜெபம்: 15:15-21
எதிரிகளின் குழப்பத்திற்கான ஜெபம்: 16:19-21; 17:13-18
தீய ஆலோசனையை தூக்கி எறிவதற்கான ஜெபம்: 18:18-23
நம்பிக்கையிழந்த இருதயத்தின் ஜெபம்: 20:7-13
தெய்வீக நன்மையிற்கான நன்றியின் ஜெபம்: 32:16-25
மிகுதியாயுள்ள விசுவாசத்திற்கான ஜெபம்: 42

**புலம்பல்:**

வலியின் ஜெபம்: 1:20-22
இரக்கத்திற்கான ஜெபம்: 2:19-22
புகார் போன்ற ஜெபம்: 3
ஒடுக்கப்பட்டவர்களுக்கான ஜெபம்: 5

**எசேக்கியேல்:**

எதிர்பான ஜெபம்: 4:14
மிகுதியாயிருந்தவர்களின் பாதுகாப்பின் ஜெபம்: 9:8-11
பரிசுத்த ஸ்தலத்தின் ஜெபம்: 11:13-16

**தானியேல்:**

விளக்கத்திற்கான ஜெபம்: 2:17-18
ஆணையை மீறியதான ஜெபம்: 6:10-15
அறிக்கையின் ஜெபம்: 9
ஜெபமும் அதன் ஆவிக்குரிய விளைவும்: 10
வாழ்க்கையின் வீரம் குறித்தான ஜெபம்: 12:8-13

**ஓசியா:**

தேவன் மனந்திரும்புதலின் ஜெபத்தை ஜெபிக்கும்படியாக பின்வாங்கிய தேசத்திற்கு வேண்டுகோள் விடுத்தல்.

**யோவேல்:**

அவசரத்திலான ஜெபம்: 1:19-20
ஜெபமும் அழுகையும்: 2:17

**ஆமோஸ்:**

ஓய்வு மற்றும் மன்னிப்பிற்கான ஜெபம்: 7:1-9

**யோனா:**

புறஜாதி மாலுமிகளின் ஜெபம்: 1:14-16
மீன்வயிற்றிலிருந்து ஜெபம்: 2
மனந்திரும்பிய நகரத்தின் ஜெபம்: 3
திருப்தியடையாத தீர்க்கதரிசியின் ஜெபம்: 4

**மீகா:**

தேவனுடைய வார்த்தை நிறைவேறுதலுக்கு மேலான பொறுத்திருக்கும் ஜெபம்.

**ஆபகூக்:**

புகார் மற்றும் நிரூபித்தலின் ஜெபம்: 1:1-4,12-17
விசுவாசத்தின் ஜெபம்: 3

**மல்கியா:**

ஜெபம் - எதிர்ப்பு ஒன்று: 1:2
ஜெபம் - எதிர்ப்பு இரண்டு: 1:6
ஜெபம் - எதிர்ப்பு மூன்று: 1:7,13
ஜெபம் - எதிர்ப்பு நான்கு: 2:17
ஜெபம் - எதிர்ப்பு ஐந்து: 3:17
ஜெபம் - எதிர்ப்பு ஆறு: 3:8

## புதிய ஏற்பாட்டின் ஜெபம்

**மத்தேயு:**

ஜெபமும் மன்னிப்பிற்கான அவசியமும்: 5:22-26; 6:12,14-15
ஜெபமும் பாசாங்குத்தனமும்: 6:5-7
கிறிஸ்துவினால் போதிக்கப்பட்ட ஜெபம்: 6:8-13
கிறிஸ்துவினால் குறிப்பிடப்பட்ட ஜெபம்: 7:7-11
குஷ்டரோகியின் ஜெபம்: 8:1-4
நூற்றுக்கு அதிபதியின் ஜெபம்: 8:5-13
ஆபத்திலுள்ள ஜெபம்: 8:23-27
லேகியோனின் ஜெபம்: 8:28-34
யவீருவின் ஜெபம்: 9:18-19
நோயாளினான பெண்ணின் ஜெபம்: 9:20-22
இரண்டு குருடர்களின் ஜெபம்: 9:27-31
வேலையாட்களுக்கான ஜெபம்: 9:37-39
தேவனை மகிமைப்படுத்தும் கிறிஸ்துவின் ஜெபம்: 11:25-27
மலையின்மேலிருந்தான ஜெபம்: 14:23
துயரத்திலிருந்த பேதுருவின் ஜெபம்: 14:28-30
கானானிய ஸ்திரியின் ஜெபம்: 15:21-28
சந்திரரோகியான குமாரனுக்கான ஜெபம்: 17:14-21
ஐக்கியத்தின் ஜெபம்: 18:19-20
உவமையின் ஜெபம்: 18:23-25
சலுகை நிலையிலுள்ள ஜெபம்: 20:20-28

குருடனை குணமாக்குவதற்கான ஜெபம்: 20:29-34
விசுவாசத்தின் ஜெபம்: 21:18-22
போலித்தனமான ஜெபம்: 23:14,25
பொறுப்புகூறல்பற்றிய ஜெபம்: 25:20,22,24
மீளமைக்கப்பட்ட சித்தத்திற்கான ஜெபம்: 26:26,36-46
கல்வாரியிலிருந்து ஜெபம்: 27:46,50

**மாற்கு:**

அசுத்த ஆவிகளின் ஜெபம்: 1:23-28,32-34
ஜெபம்: கிறிஸ்துவின் பழக்கவழக்கம்: 1:35; 6:41,46
குருடர் மற்றும் ஊமைக்கான ஜெபம்: 7:31-37
ஜெபமும், உபவாசமும்: 2:18; 9:29
இள ஆளுனரின் ஜெபம்: 10:17-22

**லூக்கா:**

சகரியாவினுடைய ஜெபம்: 1:8,13,67-80
துதியைப்போன்ற ஜெபம்: 1:46-55
தொழுதல் போலான ஜெபம்: 2:10-20; 25-38
ஊழிய ஆரம்பத்தில் ஜெபம்: 3:21-22
பிரசித்தத்திலிருந்து தப்புவதான ஜெபம்: 5:16
ஜெபமும் பன்னிரண்டு சீஷர்களும்: 6:12-13,20,28
ஜெபமும் மருரூபமாக்கப்படுதலும்: 9:28-29
உவமை வடிவிலான ஜெபம்: 11:5-13
உவமையின் ஜெபம்: 15:11-24,29-30
பாதாளத்திலிருந்தான ஜெபம்: 16:22-31
பத்து குஷ்டரோகிகளின் ஜெபம்: 17:12-19
உவமை வடிவிலான ஜெபம்: 18:1-8
பரிசேயன் மற்றும் ஆயக்காரனின் ஜெபம்: 18:9-14
பேதுருவினுடைய விசுவாசத்திற்கான ஜெபம்: 22:31-34
மரண வேதனையின் ஜெபம்: 22:39-46
ஜெபமும் உயிர்த்தெழுந்த தேவனும்: 24:30,50-53

**யோவான்:**

ஆவியிற்கான ஜெபம்: 4:9,15,19,28; 7:37-39; 14:16
ராஜாவின் மனுஷனுக்கான ஜெபம்: 4:46-54
ஜீவ அப்பத்திற்கான ஜெபம்: 6:34
உறுதிப்படுத்தலுக்கான ஜெபம்: 11:40-42
இரட்டை தோற்றத்திலான ஜெபம்: 12:27-28
உரிமையிலான ஜெபம்: 14:13-15; 15:16; 16:23-26
அனைத்து ஜெபத்திற்கான ஜெபம்: 17

**அப்போஸ்தலர்:**

மேல்வீட்டில் ஜெபம்: 1:13-14
சித்திற்கான ஜெபம்: 1:15-26
ஜெபமும் துதியும்: 2:42-47
கிரியை செய்தலிலான ஜெபம்: 3:1
உறுதியான சாட்சியிற்கான ஜெபம்: 4:23-31
ஜெபமும் வார்த்தையின் ஊழியமும்: 6:4-7
முதல் இரத்தசாட்சியின் ஜெபம்: 7:55-60
சமாரியன் மற்றும் மாயவித்தைக்காரனுக்கான ஜெபம்: 8:9-25
மனமாற்றத்திற்கான ஜெபம்: 9:5-6,11
தொற்காளிற்கான ஜெபம்: 9:36-43
கொர்நேலியுவின் ஜெபம்: 10:2-4,9,31
சிறைச்சாலையில் பேதுருவின் ஜெபம்: 12:5,12-17
அர்ப்பணிப்பிற்கான ஜெபம்: 13:2-3,43
உபவாசத்துடனான ஜெபம்: 13:2-3; 14:15,23,26
ஆற்றங்கரையில் ஜெபம்: 16:13,16
சிறைச்சாலையில் ஜெபம்: 16:25,34
அர்ப்பணிப்பின் ஜெபம்: 20:36
கப்பலிலிருந்தான ஜெபம்: 27:33,35
ஜுரத்தினாலும் இரத்தபேதியினாலும் இருந்தவருக்கு ஜெபம்: 28:8,15,28

**ரோமர்:**

நல்ல பயணத்திற்கான ஜெபம்: 1:8-15
ஆவியினால் ஆட்கொண்ட ஜெபம்: 8:15,23,26-27
இஸ்ரவேலின் இரட்சிப்பிற்கான ஜெபம்: 10:1; 11:26
தொடர்ந்து ஊழியம் செய்வதிலான ஜெபம்: 12:12
ஒரே சிந்தையிற்கான ஜெபம்: 15:5-6,30-33
சாத்தானுடைய கட்டுக்கான ஜெபம்: 16:20,24-27

**2 கொரிந்தியர்:**

ஒருவருக்கொருவரான நன்மையிற்கான பிரார்த்தனை: 1:2-4
முள்ளை அகற்றுதலிற்கான ஜெபம்: 12:7-10

**எபேசியர்:**

ஜெபமும் விசுவாசிகளின் நிலையும்: 1:1-11
அறிதலுக்கும் வல்லமையிற்குமான ஜெபம்: 1:15-20
தேவனை ஏற்றுக்கொள்ளுவதற்கான ஜெபம்: 2:18; 3:12
உள்ளான நிறைவேறுதலுக்கான ஜெபம்: 3:13-21
ஜெபமும் உள்ளான சங்கீதமும்: 5:19-20
போர்வீரனுக்கு ஒப்புவிக்கப்பட்டதைப்போன்ற ஜெபம்: 6:18-19

**பிலிப்பியர்:**

மகிழ்ச்சிக்கு விண்ணப்பிக்கும் ஜெபம்: 1:2-7
ஜெபமும் சமாதானத்தின் மனநிலையும்: 4:6-7,19-23

**கொலோசெயர்:**

விசுவாசத்திலான துதியின் ஜெபம்: 1:1-8
ஏழு வகை ஆசீர்வாதத்திற்கான ஜெபம்: 1:9-14
ஜெப ஐக்கியம்: 4:2-4,12,17

**1 தெசலோனிக்கேயர்:**

ஞாபகத்திற்கான ஜெபம்: 1:1-3
மீள்வருகையின் சந்திப்பிற்கான ஜெபம்: 3:9-13
ஜெபம், துதி மற்றும் பூரணத்துவம்: 5:17-18,23-24,28

**2 தெசலோனிக்கேயர்:**

அழைப்பின் தகுதியிற்கான ஜெபம்: 1:3,11-12
சௌகரியம் மற்றும் ஸ்திரத்திற்கான ஜெபம்: 2:13,16-17
வசனம் மற்றும் பாதுகாப்பிற்கான ஜெபம்: 3:1-5

**2 தீமோத்தேயு:**

தீமோத்தேயுவிற்கான ஊழிய ஜெபம்: 1:2-7
ஓநேசிப்போருவின் வீட்டாருக்குக்கான ஜெபம்: 1:6-18
தவறான நண்பர்களுக்கான ஜெபம்: 4:14-18

**எபிரெயர்:**

சிருஷ்டிப்பிற்கான துதியைப்போன்ற ஜெபம்: 1:10-12
இரக்கம் மற்றும் ஆதரவுக்கான ஜெபம்: 4:16
கிறிஸ்துவின் ஜெபமும், ஊழியமும்: 5:7-8; 7:24-25
தேவனுடைய சித்தம் கிரியைசெய்வதற்கான ஜெபம்: 12:9,12,15
பூரணத்துவத்திற்கான ஜெபம்: 13:20-21

**யாக்கோபு:**

ஞானத்திற்கான ஜெபம்: 1:5-8,17
குறிக்கோள்களின் தவறின் ஜெபம்: 4:2-3
வழக்கத்திலுள்ள ஜெபம்: 5:13-18

**1 பேதுரு:**

வசதியிற்கான நன்றியின் ஜெபம்: 1:3-4
திருமண நிலையிலுள்ள ஜெபம்: 3:7-12
ஜெபம்-ஜாக்கிரதை: 4:7
கிறிஸ்தவ ஸ்திரத்திற்கான ஜெபம்: 5:10-11

**2 பேதுரு:**

கிருபை மற்றும் சமாதானத்தின் பெருக்கத்திற்கான ஜெபம்: 1:2

**3 யோவான்:**

கீர்த்தியின் பின்புலத்திற்கான ஜெபம்: 1:4,12

**யூதா:**

ஆவியில் ஜெபம்: 20

**வெளிப்படுத்தல்:**

மீட்டுக்கொண்ட ஆட்டுக்குட்டியானவருக்கான துதியின் ஜெபம்: 5:9
பொற்கலசங்களான ஜெபம்: 5:8; 8:3
இரத்தசாட்சியானவர்களின் ஜெபம்: 6:10
புறஜாதியானவர்களின் ஜெபம்: 7:9-12
மூப்பர்களின் ஜெபம்: 11:15-19
மோசேயின் ஜெபம்: 15:3-4
மகிமையடைந்த பரிசுத்தவான்களின் ஜெபம்: 19:1-10
வேதாகமத்தை முடிவுறுத்தும் ஜெபம்: 22:17,20

(இந்த ஜெபத்தின் குறிப்புக்களானது “வேதாகமத்திலுள்ள அனைத்து ஜெபங்கள்” இ. எம். பவுன்ஸ் அவர்களுடைய புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது)

# பிற்சேர்க்கை இரண்டு

## கற்றலுக்கான வழிகாட்டி: வேதாகம பரிந்து பேசுதல்

**ஜெபத்தின் வேதாகம வசனங்கள்:**.......................................................................................................

**இந்த ஜெபத்தை யார் செய்தார்கள்?**......................................................................................................

கீழ்வரும் வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள இந்த நபர் குறித்த வேதாகம தகவல்கள்:

**இந்த பரிந்து பேசுபவரின் வாழ்க்கையிலுள்ள நேரான ஆவிக்குரிய சம்பவங்களின் தரங்கள்:**

அவன் அல்லது அவளை நல்ல பரிந்து பேசுபவராக உருவாக்கிய தரங்களை பட்டியலிடுக. (இந்த காரியங்களை உங்களுடைய சொந்த வாழ்க்கையில் நீங்கள் பின்பற்ற வேண்டும்):

**இந்த பரிந்து பேசுபவரின் வாழ்க்கையிலுள்ள மறையான தரங்கள்:**

அவர்களுடைய பரிந்து பேசும் ஊழியத்தில் தலையிடும் தரங்கள் மற்றும் தொடர்புகயை பட்டியலிடுங்கள். (இந்த காரியங்களை உங்களுடைய சொந்த வாழ்க்கையில் நீங்கள் தவிர்க்க வேண்டும்):

**ஜெபத்தின் ஆய்வு:**

நபரை ஜெபிக்கும்படியான எந்த சம்பவம் ஏற்படுத்தியது?
ஜெபத்தின் முக்கிய குறிக்கோள் என்ன?
ஜெபத்தில் உருவாக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட விண்ணப்பங்கள் என்ன?
ஜெபத்தின் எந்த பகுதி பரிந்துபேசுதலாகும்? விண்ணப்பமாகும்? அறிக்கையிடுதலாகும்? ஆராதனை மற்றும் துதியாகும்?
நபர் ஜெபிக்கும் சம்பவத்தில் விசுவாசம் உள்ளதா அல்லது இல்லையா?
ஜெபத்தில் குறிப்பிட்டுள்ள வசனம் என்ன?
தேவன், இயேசு அல்லது பரிசுத்த ஆவியானவருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசனம் என்ன?
ஜெபத்தில் உரிமைக்கோரப்பட்டுள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எதாவற்றை பட்டியலிடுக.
ஜெபம் கேட்கப்பட்டுள்ளதா? எப்போது? எவ்வாறு?
பதிலளிக்கப்படாவிட்டால், ஏன் இல்லை?
ஜெபத்தின் விளைவு என்ன?
உங்களுடைய சொந்த பரிந்துபேசுதலை அதிகம் வல்லமையுள்ளதாக்கும் இந்த ஜெபத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளகூடியது என்ன?

# சுய பரீட்சைக்கான விடைகள்

## அதிகாரம் ஒன்று

1. கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடை-வீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும், ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப் படும். (மத்தேயு 7:7-8)

2. ஜெபம் தேவனோடு பேசுதலாகும். அதற்கு பல்வேறுப்பட்ட வகைகள் உண்டு, ஆனால் அடிப்படையில் மனிதன் தேவனோடு பேசும்போதும், தேவன் மனிதனோடு பேசும்போதும் இது ஏற்படுகின்றது.

3. ஜெபத்திற்கு எவ்வாறு பதிலளிக்கப்படுகின்றது என்பதற்கு வேதாகமம் வெளிப்படுத்துவதாவது:

| | |
|---|---|
| உடனடியாக: | ஏசாயா 65:24; தானியேல் 9:21-23 |
| தாமதமாக: | லூக்கா 18:7 |
| எமது வித்தியாசமான வாஞ்சைகள்: | 2 கொரிந்தியர் 12:8-9 |
| எமது எதிர்ப்பார்ப்புகளுக்கு அப்பால்: | எரேமியா 33:.3; எபேசியர் 3:20 |

4. இயேசு ஜெபத்தை முதன்மையாக வைத்தார், அது அவருடைய வாழ்க்கையில் ஏதாவதொரு முக்கியமான சம்பவமாக அமைந்தது. அதிகாரம் ஒன்றில் தலையங்கமிடப்பட்ட “இயேசுவினுடைய ஜெப வாழ்க்கை” பகுதியை பாருங்கள்.

5. ஜெபத்தின் பரிந்து பேசுதலில் மூன்று மட்டங்கள் காணப்படுகின்றது: கேட்டல், தேடுதல், தட்டுதல்: கேட்டல் ஜெபத்தின் முதலாவது மட்டம் ஆகும். இது தேவனுக்கு சாதாரணமாக ஒரு விண்ணப்பித்தலை கொடுத்தலும், உடனடியாக பதிலை பெற்றுக்கொள்ளுவதும் ஆகும். ஜெபத்தின் ஆழமான மட்டம் தேடுதல் ஆகும். கேட்டலின் மட்டத்தை போல் உடனடியாக பதில் கொடுக்கப்படாத ஜெபத்தின் மட்டம் இதுவாகும். ஜெபத்தின் ஆழமான மட்டம் தட்டுதல் ஆகும். பதில் வருவதற்கு நீண்ட காலம் ஆகும்போது இது நீளமான ஜெபமாக இருக்கின்றது.

6. ஆராதனையும் துதியும்: துதி என்பது மகிமையையும், பக்தியையும் செலுத்துவதாகும். தேவன் செய்தவற்றிற்கு மாத்திரம் அல்ல, ஆனால் அவர் யார் என்பதற்காக அவருக்கு துதித்தல் என்பது ஸ்தோஸ்திரம் செலுத்துதலும், நன்றியின் வெளிப்பாடுமேயாகும். அர்ப்பணிப்பு: இது தேவனுக்கு உங்களுடைய வாழ்க்கையையும், சித்தத்தையும் அர்ப்பணிக்கும் ஜெபமாகும். இது அர்ப்பணத்தையும், தேவனுக்கு அவருடைய கிரியையும், அவருடைய நோக்கத்தையும் அர்ப்பணிப்பதையும் உள்ளடக்கும். விண்ணப்பம்: விண்ணப்பங்களானது கேட்டல், தேடுதல் அல்லது தட்டுதலின் மட்டங்களில் இருக்கலாம். இந்த ஜெபத்தின் வகையிற்கான இன்னொரு வார்த்தை மன்றாடுதல் ஆகும். அறிக்கையிடுதலும், மனந்திரும்புதலும்: அறிக்கையிடுதலுக்கான ஜெபம் மனந்திரும்புதலுக்கும், பாவத்திற்கான மன்னிப்பை கேட்பதுமாகும்: பரிந்து பேசுதல்: பரிந்து பேசுதல் மற்றவர்களுக்கான ஜெபம் ஆகும். பரிந்து பேசுதல் ஜெபம் என்பது மற்றொருவருக்கான ஜெபத்தின் இடத்தை எடுத்தல் அலலது மற்றொருவரின் நிலையிற்காக கெஞ்சுதல் ஆகும்.

## அதிகாரம் இரண்டு

1. மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும் படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.. (எபிரெயர் 7:25)

2. "மற்றவர்கள் சார்பாக தேவனோடு ஒருவர் கெஞ்சும் பரிசுத்தமான, நம்பிக்யையான, அல்லது மற்றவர்களுக்கான தேவனுடைய தலையீட்டின் தீவிமான தேவைக்கான விடாமுயற்சியான ஜெபம் என பரிந்து பேசுதல் வரையறுக்கப்படுகின்றது."

3. பரிந்து பேசுதலின் விசுவாசியின் ஊழிய ஜெபத்தில் புதிய ஏற்பாட்டின் அடிப்படை வேதாகமமானது தேவனுக்கு முன்பாக நாம் ஆசாரியர்களாக இருக்கும்படியாக அழைக்கப்பட்டுள்ளோம் என கூறுகின்றது. நாம் பரிசுத்த ஆசாரியராகவும் (1 பேதுரு 2:5), ராஜரீகமான ஆசாரியராகவும் (1 பேதுரு 2:9), ராஜாக்களும் ஆசாரியர்களுமாக (வெளிப்படுத்தல் 1:5) இருப்பதாக தேவனுடைய வசனம் அறிவிக்கின்றது.

4. இயேசு கிறிஸ்து.

5. இந்த அழைப்பின் பின்னணியை விளங்கிக்கொள்ளுதவற்கு புதிய ஏற்பாட்டின் லேவியராகம ஆசாரியத்துவ உதாரணம் பழைய ஏற்பாட்டில் ஆசாரிய பரிந்து பேசுதலாக காணப்படுகின்றது. ஆசாரியனுடைய பொறுப்பு முன்னும், இடைநடுவிலும் நிற்பதாகும்.

6. பரிந்து பேசுதல் வெளிப்படையாகவே முக்கியமானது ஏனென்றால் இயேசு அவருடைய சொந்த பூலோக ஊழியத்தில் அழுத்தமாக அதை முன்வைத்தார். வல்லமையான பரிந்து பேசுதலின் மூலமான விளைவுகளுக்கூடாக வல்லமைகளை அனுபவித்த மனிதர்களின் கதைகளைால் வேதாகமமானது நிரப்பப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதால் கூட இது முக்கியமானது ஆகும். வல்லமையான பரிந்து பேசுதலுக்கூடாக, உலகத்திற்கு எங்கும் ஆவியில் நீங்கள் செல்ல முடியும்.

## அதிகாரம் மூன்று

1. அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து... (லூக்கா 9:1)

2. உங்களுடைய அதிகாரமானது இயேசு கிறிஸ்துவிற்கூடாகவும், விசுவாசியென்ற அவருடைய உங்களுடைய நிலையிற்கூடாகவும் எதிரிகளின் மேல் வருகின்றது. உங்களுடைய எதிரியின் மேலான வல்லமை பரிசுத்த ஆவியானவருக்கூடாக வருகின்றது.

3. "கட்டுதல்" என்னும் பதமானது எபிரெய வார்த்தையான அசார் என்பதை மருவி வருகின்றது, இதன் அர்த்தமானது "கட்டுதல், சிறைப்பிடித்தல், பிடி நிலை, இடைகட்டுதல், சுரண்டுதல்" என அர்த்தப்படுகின்றது. உங்களுடைய ஜீவியத்தில், அமைப்பில், சபை ஐக்கியத்தில் சாத்தானுடைய வல்லமைகளை நீங்கள் கட்டலாம்.

4. கட்டவிழ்த்தல் என்பது விடுவித்தல் ஆகும். நீங்கள் பாவத்தின் கட்டு, அழுத்தம், மற்றும் எதிரியினுடைய அதைரியங்கள் ஆகியவற்றை மனிதர்களிலிருந்து கட்டவிழ்க்கலாம்.

5. மத்தேயு 16:19

6. தேவனுக்கு முன்பாக நாம் பரிந்துபேசும்போது அதிகாரத்தின் மேலான வல்லமையானது இயேசுவின் நாமமாகும். யோவான் 14:14ஐ பார்க்க.

7. பிதாவாகிய தேவனை நாம் இயேசுவினுடைய இரத்தத்திற்கூடாக அடைகின்றோம். எபிரெயர் 10:19-22

8. முழுமையான உபவாசம் என்பது நீங்கள் எல்லாவற்றையும் சாப்பிடாமல் உணவருந்தாமல் இருத்தல் ஆகும். அப்போஸ்தலர் 9:9ல் இதற்கான உதாரணம் ஒன்று காணப்படுகின்றது. பகுதியான உபவாசம் என்பது உணவு கட்டுப்பாட்டில் இருத்தலாகும். தானியேல் 10:3ல் இதற்கான உதாரணம் ஒன்று காணப்படுகின்றது.

9. உபவாசம் தேவனை மாற்றாது. அது உங்களை மாற்றும். தேவன் அவரோடுள்ள உங்களின் உறவின் அடிப்படையில் உங்களோடு தொடர்புபடுகின்றார். நீங்கள் மாறும் போது, தேவன் உங்களோடு கொண்டுள்ள வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

10. ஏசாயா 58ம் அதிகாரமானது தேவன் "தேர்ந்தெடுத்த" அல்லது பகுதியாக ஏற்றுக்கொள்ளப்படும் உபவாசத்தை விபரிக்கின்றது.

11. நீங்கள் உபவாசமிருக்கும்போது, முதலில் நடைபெறும் காரியமானது தேவன் அவரை உங்களில் வெளிப்படுத்த ஆரம்பிப்பார் (ஏசாயா 58:9). ஏசாயா 58ல் உபவாசத்திற்கு பட்டியலிடப்பட்டுள்ள வேறு விளைவுகள்: ஒளி வெளிச்சம், வழிநடத்தல், திருப்தியாக்குதல், புத்துணர்வு, மீள் கட்டு-தல்

## அதிகாரம் நான்கு

1. நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். (1 யோவான் 5:14-15)

2. அதிகாரம் நான்கில் உள்ள எவ்வாறு பரிந்து பேசுதல் என்னும் பகுதியை மீளாய்வு செய்க.

3. அதிகாரம் நான்கில் ஜெபத்தில் எதற்காக நாம் பரிந்து பேச வேண்டும் என்னும் பகுதியை மீளாய்வு செய்க.

4. அதிகாரம் நான்கில் வல்லமையான பரிந்து பேசுதலுக்கான கொள்கைகளை மீளாய்வு செய்க.

5. தேவன் என்ன வாக்குறுதி அளித்துள்ளார் எனவும், இந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் ஜெபம் செய்வதற்கும், பின் உங்களுடைய ஜெபம் பதிலளிக்கப்படும் என நீங்கள் அறியவும் கற்றீர்கள். இதை செய்வதற்கான ஒரு வழியானது வேதாகமத்திற்கூடாக சென்று, தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்களையும் குறித்து, இந்த வாக்குத்தத்தங்களுக்கு மேல் உங்களுடைய ஜெபத்தை அடிப்படையாக வையுங்கள்.

## அதிகாரம் ஐந்து

1. நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளா மலிருக்கிறீர்கள். (யாக்கோபு 4:3)

2. ஏதாவது வகை பாவம்; இருதயத்திலுள்ள விக்கிரகங்கள்; மன்னிப்பை கொடுக்காத ஆவி; சுயநலம் பிழையான நோக்கங்கள்; வாழ்க்கை துணைவர்களின் தவறான நடத்தை; சுய நீதி; அவிசுவாசம்; கிறிஸ்துவிலும், அவருடைய வசனத்திலும் கீழ்ப்படிவின்மை; இரக்க உணர்வு இன்மை; பாசாங்கு, பெருமை, அர்த்தமற்றதை திரும்ப திரும்ப சொல்லுதல்; தேவனுடைய சித்தத்தின்படி கேட்காமை; இயேசுவினுடைய நாமத்தின்படி கேட்காமை; சாத்தானுடைய, பிசாசினுடைய தடைகள்; தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலில் தேடாமை; உங்களுக்கு ஜெபிக்க தெரியாதிருக்கும் போது.

3. தேவன் உங்களிடம் ஒன்றை செய்யும்படி கூறும்போது, அவர் தந்த வழியில் கிரியை செய்ய வேண்டும் அத்தோடு தேவன் கட்டளையிட்டதை தவிர்க்கும்படி பரிந்து பேசுதலை பயன் படுத்த கூடாது.

## அதிகாரம் ஆறு

1. பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,
   உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.
   உம்முடைய ராஜ்யம் வருவதாக.
   உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப்
   பூமியிலேயும் செய்யப்படுவதாக.
   எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.
   எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல
   எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.
   எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,
   தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்,
   ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.
   (மத்தேயு 6:9-13)

2. மத்தேயு 6:9-13 மற்றும் லூக்கா 11:2-4

3. அவருடைய ஜெபமானது பன்மையான மறுபெயர் சார்ந்த உரிச்சொல்லான “எங்கள்”

என்பதிலிருந்து ஆரம்பமானது. ஜெபத்திற்கு மேலதிகமாக “எங்களுக்கு” “எங்கள்” “எங்களை” போன்ற வாக்கியங்களை நாம் பார்க்கின்றோம். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், மாதிரி ஜெபமானது ஒரு பரிந்து பேசுதலுக்கான ஜெபம் ஆகும், ஏனென்றால் நீங்கள் உங்களுக்காக ஜெபம் செய்வதோடு, மற்றவர்களுக்காக ஜெபம் செய்கின்றீர்கள்.

4. “அவளுடைய வாழ்க்கையில் உமது சித்தம் செய்யப்பட உமது ராஜ்யம் வருவதாக. இன்றைய நாளுக்கு தேவையானதை அவளுக்கு தந்தருளும்...” போன்று அவர்களுக்கு மேலான ஜெபத்தை ஜெபியுங்கள்.

5. தேவனுடைய பெயரானது அவருடைய இயற்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, எமக்கான அவர் யார் என்பதையும், மற்றவர்களுக்காக நீங்கள் இதை உரிமையும் கோரலாம். உதாரணத்திற்கு, யாதோ ஒருவரின் தேவையின் ஏற்பாட்டிற்கு ஜெகோவா-ஜய்ரே ஐ உரிமை கோருங்கள்.

## அதிகாரம் ஏழு

1. என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன். (2 நாளாகமம் 7:14)

2. “எழுப்புதல் தொடர்பாக தேவனுடைய வார்த்தையாக ரேமாவில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகளை பிரயோகித்து, கற்றுக்கொண்ட மக்களுக்கூடாக தேவனுடைய மகத்துவமான கிரியைகளின் ஓர் வல்லமையாகும்.”

3. எழுப்புதலை ஆயத்தம் செய்வதற்கு, எழுப்புதல் தொடர்பான தேவனுடைய வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கொள்கைளை நாம் பிரயோகிக்க வேண்டும். எழுப்புதல் தேவனுடைய ஆவியின் அசைவாட்டம் என்பதோடு, தேவனுடைய மக்களின் பிரதிபலிப்பாகும்.

4. எழுப்புதல் ஒழுக்க நிலைகளில் பின்வாங்கும் போது அவசியமாகின்றது.

5. உங்கள் விடைகளை அதிகாரம் ஏழில் தரப்பட்டுள்ள பின்வாங்கும் நிலைகளுக்கான ஆதாரங்களின் சுருக்கத்தோடு ஒப்பிடுக.

6. உங்கள் விடைகளை அதிகாரம் ஏழில் தரப்பட்டுள்ள எழுப்புதலுக்கான வேதாக கொள்கைகளின் சுருக்கத்தோடு ஒப்பிடுக.

7. 2 நாளாகமம் 7:14

8. உங்களை நீங்களே தாழ்மைப்படுத்துங்கள், ஜெபியுங்கள், தேவனுடைய முகத்தை தேடுங்கள், உங்களுடைய பொல்லாத வழிகளிலிருந்து விலகுங்கள். அதிகாரம் ஏழில் உள்ள கலந்து ரையாடல்களை பாருங்கள்.

## அதிகாரம் எட்டு

1. நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். (மத்தேயு 6:6)

2. பொதுவான பதில்.

3. பதில்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கலாம்: நேரம் இன்மை, கவனச்சிதறல், களைப்பு, வாஞ்சை இன்மை.

4. பொதுவான பதில்.

5. பொதுவான பதில்.

6. பொதுவான பதில்.